# இலங்கையின் கல்வித்துறை:
## ஊழல்களும் பரிமாணங்களும்




ட்ரான்ஸ்பேரன்சி
இன்டர்நஷனல்
ஸ்ரீ லங்கா

நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக்
கட்டியெழுப்புவோம்

“ஊழல் கல்வி கற்பதன் நோக்கத்தையே தோற்கடிக்கிறது. ஊழல் வாய்ந்த கல்வி அமைப்பில் மாணவர்கள் கற்கும் போது தமது நாட்டின் பொருளாதாரம், சமூகம் என்பவற்றிற்கு அர்த்தபூர்வமான தமது பங்கை வழங்கக் கூடிய திறன்களையும், அறிவையும் பெற்றுக் கொள்ள முடியாது. இளம் வயதிலேயே அவர்கள் நேர்மைத் திறனற்ற வாழ்க்கை முறையே ஏற்றுக் கொள்ளத் தக்கது என்றும் சமூகம் முழுவதிலும் இந்த விழுமியங்கள் இயல்பானது என்றும் அறிந்து கொள்கிறார்கள்”

ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல்

# இலங்கையின் கல்வித்துறை:
## ஊழல்களும் பரிமாணங்களும்

**மே 2009** **ஆய்வு அறிக்கை**

ட்ரான்ஸ்பேரன்சி
இன்டர்நஷனல்
ஸ்ரீ லங்கா

நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக்
கட்டியெழுப்புவோம்

**ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா**

ISBN 978-955-1281-26-7

வெளியீடு
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா
இல 28/1, புள்ளர்ஸ் ஒழுங்கை, கொழும்பு 07.
ஸ்ரீலங்கா

தொலைபேசி: 011 2506419
ப்க்ஸ்: 011 2592287
மின்னஞ்சல்: tisl@tisrilanka.org
மின்தளம்: www.tisrilanka.org

முன்அட்டைப் படம் : றஷ்க்கின் முகமட் முனா.்.ப்
(TISL, தேசிய கேலிச் சித்திரப் போட்டி 2008)

பின்அட்டைப் படம் : ப்ரீத்தி கன்னங்கர
(TISL, தேசிய கேலிச் சித்திரப் போட்டி 2008)

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| வரைபடங்கள் | 02 |
| அட்டவணைகள் | 03 |
| சுருக்கக் குறியீடுகளின் பட்டியல் | 04 |
| முன்னுரை | 05 |
| 1. செயல் நிறைவேற்றுச் சுருக்கம் | 07 |
| 2. அறிமுகம் | 15 |
| 3. ஆய்வின் நோக்கங்களும், வழிமுறையும் | 24 |
| 4. ஆய்வின் முடிவுகள் | 32 |
| 4.1 பாடசாலை - மட்ட ஊழல் | 34 |
| 4.1.1 பாடசாலை அனுமதி | 34 |
| 4.1.2 பாடப் புத்தகங்கள் | 40 |
| 4.1.3 தர உள்ளீடு | 41 |
| 4.1.4 ஆண்டு - 5 உபகாரப் பணம் | 43 |
| 4.1.5 மாணவர்களுக்கான கற்கை விடுமுறை | 43 |
| 4.1.6 பல்கலைக்கழக அனுமதிக்காக மாவட்ட கோட்டா அமைப்புத் துஷ்பிரயோகம் | 44 |
| 4.1.7 ஆசிரியர் நடத்தையும் தனிச்சலுகை காண்பித்தலும். | 46 |
| 4.2 கட்டணங்களும், கொடுப்பனவுகளும் | 48 |
| 4.2.1 கட்டணங்களும் “அன்பளிப்புகளும்” | 48 |
| 4.2.2 பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கான கொடுப்பனவுகள் | 50 |
| 4.2.3 பாடசாலை உபகரணக் கொள்வனவு | 52 |
| 4.2.4 ஆசிரியர்களுக்கான அன்பளிப்புகள் | 52 |
| 4.2.5 தனியார் வகுப்பு | 53 |
| 4.2.6 ஏனைய கொடுப்பனவுகள் | 55 |
| 4.3 நிர்வாகம் தொடர்பான ஊழல் | 56 |
| 4.3.1 பாடசாலைகள் தொடர்பான பிரச்சினைகள் தமிழ் மொழிபெயர்ப்புகள் | 56 |
| 4.3.2 பாடசாலைகளிலும், கல்வி அலுவலங்களிலும் ஒழுங்கீனங்கள் | 57 |
| 4.3.3 சம்பள படிகளில் தாமதம் | 58 |
| 4.3.4 கஷ்டமான இடங்களுக்கான படி உயர்வு | 59 |
| 4.3.5 ஆசிரியர் கடன் திட்டம் | 60 |
| 4.3.6 இடமாற்றங்கள் | 61 |
| 4.3.7 நியமனங்கள் | 67 |
| 4.4. ஊழலுக்கு எதிரான முறைப்பாடுகள் | 72 |
| 5. கலந்துரையாடல்களும் முடிவுரையும் | 74 |
| உசாத்துணை நூல்கள் | 82 |

# வரைபடங்கள்


| | | |
|---|---|---|
| வரைபடம் 1: | கல்வி துறையின் வடிவமைப்பு | 18 |
| வரைபடம் 2: | இல்ல மாதிரிகளின் இனத்துவ விநியோகம் | 27 |
| வரைபடம் 3: | இல்ல மாதிரிகளின் புவியியல் பரம்பல் | 28 |
| வரைபடம் 4: | ஆய்வு இடங்களினால் இல்லங்களின் வகுப்பு நிலைமைகள் | 30 |
| வரைபடம் 5: | பாடசாலையில் பிள்ளையின் கல்வி பற்றிய பெற்றோரின் உணர்வு | 32 |
| வரைபடம் 6: | உங்கள் பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டபோது, இவற்றை நீங்கள் செய்தீர்களா/அல்லது எதிர்கொள்ள நேர்ந்ததா? (கேள்வி 3.9) | 38 |
| வரைபடம் 7: | பாடசாலை அனுமதி | 38 |
| வரைபடம் 8: | இந்தப் பாடசாலை ஆண்டில் மாணவர் பாடப்புத்தகங்களை நேர காலத்தில் பெற்றனரா? (கேள்வி 3.1) | 40 |
| வரைபடம் 9: | தர உள்ளீடுகள் (கேள்வி 25.0) | 42 |
| வரைபடம் 10: | இல்லங்களினால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் சுருக்கம் | 49 |
| வரைபடம் 11: | வருடாந்த சராசரிக் கொடுப்பனவு | 51 |
| வரைபடம் 12: | வகுப்பு நிலைமைப்படி தனியார் வகுப்புக்கான செலவு | 53 |
| வரைபடம் 13: | முக்கியமாகத் தமிழில் படிவங்கள், இல்லாமையால் பாடசாலைகளிலிருந்து தகவல் பெறுவது பணிப்பாளர்களாகிய எமக்குக் கடினமாக உள்ளது(கேள்வி13.4) | 57 |
| வரைபடம் 14: | கஷ்டமான பகுதியில் மூன்று ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்யாத நிலையில் இடமாற்றங்கள் | 62 |
| வரைபடம் 15: | மூன்று ஆண்டு காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு முன்னதாகவே சிறந்த பகுதிகளுக்கு, கஷ்டப்பிரதேசங்களிலிருந்து பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா? (கேள்வி 3.3) | 63 |
| வரைபடம் 16: | உத்தியோகத்தர்களை உங்களுக்குத் தெரிந்திருப்பதால் உங்களால் இடமாற்றம் பெற முடியும் ( கேள்வி 3.5) | 64 |
| வரைபடம் 17: | ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுவதற்கு இலஞ்சம் செலுத்துகின்றனர் என்பது பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? (கேள்வி 3.4) | 64 |
| வரைபடம் 18: | ஆசிரியர் இடமாற்றம் அநேகமாக, ஒரு அரசியல்வாதி மூலமாகவா மேற்கொள்ளப்படுகிறது (கேள்வி 3.7D) | 65 |
| வரைபடம் 19: | அதிபர் பதவிகளுக்கு, நியமனம், அல்லது தெரிவில் உள்ள நடைமுறையில் முரண்பாடுகள் இருப்பதாக நீங்கள் கருகிறீர்களா? (கேள்வி 33.6) | 68 |
| வரைபடம் 20: | புதிய கல்வித் திட்டப் பிரகாரம் பல பணிப்பாளர்கள் இருப்பது,தீர்வுகளுக்குப் பதிலாக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்று நீங்கள் ஏற்கிறீர்களா? (கேள்வி 26.1) | 70 |
| வரைபடம் 21: | கல்வியில் ஊழல் குறித்து எப்பொழுதாவது நீங்கள் முறைப்பாடு செய்திருக்கிறீர்களா? (கேள்வி 3.6 மற்றும் கேள்வி 3.4) | 72 |

# அட்டவணைகள்

அட்டவணை 1: ஊழலுக்கான காரணங்கள் வடிவங்கள், விளைவுகள் ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகள் பற்றிய விளக்கம் 21

அட்டவணை 2: ஆய்வின் உருவாக்கல் கட்டத்தில் நேர்காணலும், கலந்துரையாடலும். 25

# சுருக்கக் குறியீடுகளின் பட்டியல்

| | |
|---|---|
| CIABOC | இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு |
| DEO | மாவட்டக் கல்வி அலுவலகம் |
| ESDPF | கல்வித்துறை அபிவிருத்தித் திட்டமும் கட்டுக் கோப்பும். |
| F.G.D | இலக்குக் குழு உரையாடல் |
| MOE | கல்வி அமைச்சு |
| MSE | பாடசாலைக் கல்வி அமைச்சு |
| METT | மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சு |
| NETS | தேசிய மதிப்பீட்டு, பரிசோதனை சேவைகள் |
| NIE | தேசிய கல்வி நிறுவகம் |
| PCS | மாகாண சபைகள் |
| PDE | மாகாண கல்வித் திணைக்களம் |
| SPSS | சமூக விஞ்ஞானத்துக்கான நிலைமையான பொதி |
| TISL | ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா |
| ZEO | வலயக் கல்வி அலுவலகம் |

## முன்னுரை

இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனலின் பணியானது நேர்மைத் திறனுள்ள தேசத்தைக் கட்டி எழுப்புவதாகும். இந்த இலக்கை எய்துவற்கு, சமூகத்தின் சகலதுறையினரும் - அரசாங்க தனியார் துறையினரும், சிவில் சமூகமும் - தமது நடவடிக்கைகளில் ஊழலையும், ஒழுக்கமுறையற்ற நடைமுறைகளையும் ஒழிப்பதற்கு முயற்சி செய்தல் வேண்டும். ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கான இலக்குகளை வகுப்பதற்கு, தற்போதுள்ள பிரச்சினைகளின் இயல்பு, பரப்பு என்பன இனங்காணப்படல் வேண்டும். இந்த விடயம் தொடர்பாகவே, TISL இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் காணப்படும் ஊழல் அபாயங்களை மதிப்பீடு செய்வதற்கு பல ஆய்வுகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது. இந்த அறிக்கை, பிரசுரிக்கப்படவிருக்கும் தொடரான ஆய்வுகளில் முதலாவதாகும்.

கல்வித்துறையானது ஊழலைக் கட்டுப்படுவதற்கு ஒரு முக்கிய பகுதியாகும் எதிர்கால செயற்குழுவுக்கு திறமையையும், அறிவையும் புகட்டுவதோடு, அடுத்த சந்ததியினரின் விழுமியங்களையும், நடத்தைகளையும் உருவாக்குகிறது. இதனால் கல்வித்துறையை நேர்மையும் சமத்துவமும் உள்ளதாகவும், ஊழல், ஒழுக்கமற்ற நடவடிக்கைகள் இல்லாததாகவும், திகழ்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். கல்வியில் ஊழலை எவ்வாறு கட்டுப்படுத்தல், என்பது பற்றி ஆக்கபூர்வமான விவாதத்தை ஊக்குவிக்க இந்த அறிக்கை பங்களித்து, நேர்மைத் திறனுள்ள தேசத்தைக் கட்டி எழுப்ப, பல்வேறு பங்கேற்போரும் சேர்ந்து பணியாற்ற அவர்களை ஒன்றிணைப்பதற்கு வகை செய்யும் என்று நான் நம்புகிறேன்.

இந்த அறிக்கை, பேராதனைப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் அமரசிறி டி சில்வா தலைமையிலான குழு, 2008 மே மாதம் தொடக்கம் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலானது. பேராசிரியர் அமரசிறி டி சில்வாவின் இந்த அறிக்கையை உருவாக்குவதிலான அர்ப்பணிப்பு, தொடர்ந்து அவர் வழங்கிய ஆதரவு, அதிகாரிகளைப் பொறுத்த வரையிலான அவரது ஆலோசனை ரீதியான அணுகுமுறை என்பவற்றுக்கு, எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வுக்கு ஆதரவு வழங்கியமைக்கும், எமது ஆய்வின் முடிவுகளை அமைச்சுடன், பகிர்வதற்கு வாய்ப்பளித்தமைக்கும், கல்வி அமைச்சின் செயலாளர் திரு.நிமால் பண்டாரவுக்கும் கல்வி அமைச்சின் கொள்கைத் திட்டமிடல் மேலதிக செயலாளர் திரு.எஸ்.யு.விஜயரத்தினவுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த அறிக்கையைத் தொகுப்பதில், பொறுமையும், தொழில்சார் நிபுணத்துவத்தையும் காண்பித்த திருமதி குமுதினி ஹெட்டியாராச்சிக்கு விசேட நன்றிகள்.

TISL இன் ஆய்வுக்குழுவுக்கு , முக்கியமாக இத்திட்டக் குழுவுக்குத் தலைமை வகித்த பெற்றினாமெயர், தரவுப் பகுப்பாய்வு, வரைபுகள் என்பனவற்றுக்கு உதவிய ஷர்மிலி தற்பரன், பின்னணி ஆய்வை மேற்கொண்ட செனுரா ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஜே.சி.வெலியமுன,

நிறைவேற்றுப் பணிப்பாளர் - TISL

# 1. செயல் நிறைவேற்றுச் சுருக்கம்

கல்வி இலங்கையின் பொருளாதார சமூக அபிவிருத்தியில் ஒரு ஆதாரகல் என்று கருதப்படுகிறது. கல்வி அமைப்பை வலுப்படுத்துவதற்கு, சிறுவர்கள் கட்டாயமாக பாடசாலைக்குச் செல்வதை உறுதிப்படுத்தும் சட்டங்கள் உள்ளிட்ட சட்டவாக்கங்களை தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் அமுல்படுத்திய போது நாடெங்கிலுமுள்ள பெற்றோரிடையே தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்கும் ஒத்திசைவு காணப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின் தங்கிய பெற்றோரும் வறுமையில் இருந்து விடுபடுவதற்கு ஒரேயொரு வழியாகக் கல்வியைக் கருதினார்கள்.

இலங்கையில் 9,678 அரசாங்கப் பாடசாலைகளில்[1] இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. இப்பாடசாலைகள் நாட்டில் அநேகமான சிறுவர்களுக்கு (98% பதியப்பட்ட விகிதம்[2]) கல்வி புகட்டுகின்றன. கற்றல் பெறுபேறுகள் அதிகரித்து வருகின்றன. எனினும் தரம் 5 பரீட்சை, மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் சிறந்து விளங்காமை, கல்வி திருப்திகரமான மட்டங்களை அடைந்துள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கல்வி அமைச்சின் முக்கிய கொள்கை இலக்குகள், சமத்துவம், தரம், திறமை என்பனவாகும். ஆனால் ஊடக அறிக்கைகளில் பிரதிபலிக்கப்படும் சமூகத்தின் பொதுப் புலனுணர்வு அடிப்படையில், முக்கியமாக சமத்துவத்தைப் பொறுத்தவரை பெரும்பாலும் அதிருப்தியே காணப்படுகிறது.

வசதிகள், மாணவரின் கல்விச் செயற்பாடுகள் மாத்திரமல்லாது ஆசிரியர்களை நியமிப்பதிலும் நகரப்பாடசாலைகளுக்கும், கிராமிய, பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கும் வேறுபாடு இருப்பதை அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. தகுதியற்ற ஆசிரியர்களை நியமித்தமை கல்வி புகட்டலின் தரத்தைப் பாதித்துள்ளது. தரம்1 இல் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கல்வி அமைச்சினால் திட்டவட்டமாக தொகை குறிப்பிடப்படாமை, சில அதிபர்கள் தன்னிச்சையாக செயல்பட வகை செய்துள்ளதாக குற்றம் சாட்டப்படுவதால் பெற்றோரிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த அம்சங்கள் கல்வியில் சமத்துவம் தொடர்பாக பல கவனிப்புக்களை ஈர்த்துள்ளன. ஒழுங்கீனமாக உத்தியோகத்தர்கள், பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டமை கல்வி முகாமைத்துவ தரம் குறைவதற்கு வழிவகுத்துள்ளதாக பலரும் கருதுகின்றனர்.

---

1. பாடசாலைக் கணக்கெடுப்பு 2007, கல்விஅமைச்சு, 'அறிவும் பண்பும் கொண்ட எதிர்கால சந்ததியினர்...'கல்வி அமைச்சின் 2008 முன்னேற்றங்கள் மற்றும் 2009 இன் உத்தேச திட்டங்கள்
2. உலக வங்கி: 'Treasures of the Education System of Sri Lanka' (2005)

“இலங்கையின் கல்வித்துறை: ஊழல்களும் பரிமாணங்களும்” என்ற தலைப்பிலான ஆய்வு, பேராசிரியர் அமரசிறி டி சில்வாவினால் 2008, மே மாதம் தொடக்கம் செப்ரம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்டது. எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 1000 குடும்பங்களில் உள்ள பெற்றோர், 100 ஆசிரியர்கள், 100 கல்வி அதிகாரிகள், 11 கிராம அலுவர் பிரிவுகளில் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட 59 பேர் ஆகியோருடன் நடத்தப்பட்ட நேர்காணலின் அடிப்படையில் இந்த ஆய்வானது தரம்1 இல் அனுமதி தொடக்கம், தரம்13(கல்விப் பொதுத்தராதர உயர்தரம்) வரையிலான அரசாங்கப் பாடசாலை அமைப்பில் ஊழல் குற்றங்கள், மோசடிகள் என்பனவற்றை இலக்காகக் கொண்டிருந்தது. குடும்பங்கள் 1,800 பாடசாலைப் பிள்ளைகளை உள்ளடக்கியது. கிராம சேவகர் பிரிவுகள், அநுராதபுரம், காலி, கண்டி, நுவரெலியா, பதுளை, புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்தவை.

ஆய்வு முடிவுகள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.

(அ) பாடசாலை மட்ட ஊழல்

(ஆ) கட்டணங்களும் கொடுப்பனவுகளும்

(இ) நிர்வாகம் தொடர்பான ஊழல்

(ஈ) ஊழலுக்கு எதிரான முறைப்பாடுகள்

ஊழல் இயல்பாகவே இரகசியத்தன்மை வாய்ந்ததால் அது நிலவுவதை அளவிடுவது கடினமாகும். புலனுணர்வு, மற்றும் ஊழல் தொடர்பான அநுபவங்கள் வாயிலாகவே ஊழல் பற்றிய மதிப்பீடுகளுக்குத் தகவல்கள் திரட்டப்படுகின்றன. இந்த இரு வகைகளிலுமான கண்டுபிடிப்புக்கள் கவனமாக எடுத்துரைக்கப்படல் வேண்டும். (அ) புலனுணர்வு உண்மைத்தன்மையைப் பிரதிபலிக்க வேண்டுமென்பதில்லை. (ஆ)பழிவாங்கப்படும் என்ற அச்சம் காரணமாக அநுபவங்கள் அநேகமாக அறிவிக்கப்படாமலே போகின்றன. வழிமுறைச் சவால்களைக் கருத்தில் கொள்ளாமல், இந்த ஆய்வானது, ஊழல் நடவடிக்கை வடிவங்களையும், பரப்பையும் வெளிப்படுத்துகின்றன.

TISL, பெற்றோர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோரின் கருத்தோட்டங்களையும் உள்ளடக்குவதில் இந்த ஆய்வின் பெறுமதி தங்கியிருப்பதாக வலுவாக நம்புகிறது. இதனால் இந்த ஆய்வானது பொது விவாதத்தை ஊக்குவித்து அதன் மூலம் இலங்கை மக்கள் அனைவரினதும் நலன் கருதி நீதியான, உயர்ந்த தரக்கல்வி அமைப்பை, கல்விக் கொள்கையாக பெரும் சொத்தாக்க உதவும் என்று நம்பப்படுகிறது.

**ஆய்வு முடிவுகள்**
**அரசாங்கப் பாடசாலை அமைப்பு**

அரசாங்கப் பாடசாலை அமைப்பானது, பல தசாப்த காலத்திற்கு முன்னர் இருந்த நிலைமையுடன் ஒப்பிடும் போது சீர்குலைந்துள்ளது என்பதே குடும்பத்தினர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கிடையிலான இணக்கப்பாடான கருத்தாகும். நியமனங்கள், இடமாற்றங்கள், உட்பட கல்வி அமைப்பானது, அரசியல் மயமாக்கப்பட்டமையே, இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது. கற்பித்தல் ஒரு வாழ்க்கைத் தொழில் என்ற கருத்தானது இந்தத் தொழிலின் மகத்துவத்தைக் குறைத்துள்ளது.

- பாடசாலை அமைப்பு ஊழல் வாய்ந்தது – 21.5% இல்லங்கள் ஆம் என்றன.
- கற்பித்தலின் மதிப்புக் குறைந்துள்ளது -- 30.6% ஆசிரியர்களும் 42.4% உத்தியோகத்தர்களும் சரியானது என்கின்றனர்.
- நியமனங்கள் அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது – 28.6% இல்லத்தினரும் 55.8% உத்தியோகத்தர்களும் ஆம் என்றன.

**பாடசாலைகளில் அனுமதி பெறுதல்**

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட சகல இடங்களிலும் மூன்று தரப்பினரும் பாடசாலைகளுக்கு அனுமதி பெறுதல் கூடுதலான ஊழல் மோசடி வாய்ந்தது என்றே கருதினர். அதிபர்களுக்கு இலஞ்சம் வழங்குதல், அரசியல் வாதிகள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரின் சலுகையை நாடுதல், உறவினருக்குச் சலுகை காண்பித்தல் பாடசாலைகளுக்கு அல்லது பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு பெருந்தொகைப் பணத்தை அன்பளிப்புச் செய்தல் போன்றன குற்றச்சாட்டுக்களாக தெரிவிக்கப்பட்டன. பாடசாலைக்கு அனுமதி பெறுகையில் வசிப்பிடம் ஒரு அம்சமாகக் கருதப்படுவது தொடர்பான ஊழல் மோசடி பற்றிய தகவல்கள் குறைவாகவே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த அமைப்புக்குள் அகப்படும் சில சிறுவர்கள் வகுப்பறைக்கு வெளியே விடப்படுகின்றனர்.

• அதிபர்களுக்கு இலஞ்சம் கொடுத்தல் -- 36% ஆசிரியர்களும், 34% உத்தியோகத்தர்களும், பெற்றோர் இலஞ்சம் கொடுக்கும் வழியைப் பின்பற்றுவதாகக் கூறியுள்ளனர்.

• பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு இலஞ்சம் வழங்குதல் -- 15.5% இல்லத்தினர் ஆம் என்கின்றனர்.

• கல்வி அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்குதல் -- 7% இல்லத்தினர் ஆம் என்றனர் - இதேவேளையில், 98% ஆசிரியர்களும் 89% உத்தியோகத்தர்களும் இலஞ்சம் உதவுவதாகவே கருதுகின்றனர்.

• உறவினருக்கான சலுகை – 95% ஆசிரியர்களும், 85% உத்தியோகத்தர்களும் இது காணப்படுவதாகக் கூறுகின்றனர்.

• வசிப்பிடத் தரத்தினால் ஏற்படும் ஊழல் 80% ஆசிரியர்களும் 81% உத்தியோகத்தர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

**பாடசாலை அனுமதிக்கட்டணங்கள், 'தர உள்ளீடுகள்', பாடப்புத்தகங்கள்**

பாடசாலை அனுமதிக் கட்டணம் பற்றி பலதரப்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள், ஆகக் குறைந்த அல்லது ஆகக் கூடுதலான தொகையைக் குறிப்பிடாததால், அதிபர்கள் தன்னிச்சையாகத் தீர்மானங்கங்களை எடுக்கின்றனர். ஆய்வின் பிரகாரம் ஒரு பிள்ளைக்கான சராசரி அனுமதிக் கட்டணம் 2008 இல் ரூபா3977.09 ஆக இருந்துள்ளது.

• அனுமதிக்கட்டணம் மிகவும் உயர்வானது -- 81.4% பெற்றோர் ஆம் என்றனர். 90% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும், இந்தக் கட்டணம் பெற்றோருக்கு பாரிய பழுவாக உள்ளது என்றனர்.

• பற்றுச் சீட்டுகள் இல்லை -- 10% ஆசிரியர்களும் 15% உத்தியோகத்தர்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

• பாடசாலை நிதியம், கட்டணம், மானியம் என்பன கணக்காய்வு செய்யப்படுவதில்லை -- 62.2% ஆசிரியர்களும் 86.3% உத்தியோகத்தர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்தனர்.

'தர உள்ளீடுகள்' கல்விஅமைச்சினால் பாடசாலைகளில் வகுப்பறைக்கல்வி புகட்டலையும் கல்வி கற்றலையும் மேம்படுத்த ஒதுக்கப்படும் நிதி மற்றும் மானியங்கள் ஆகும். ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் இவை கணக்கிடப்படுகின்றன. பதிவேட்டில்

எண்ணிக்கை எவ்வளவு கூடுதலாக உள்ளதோ, அதற்கேற்ப மானியமும் கூடுதலாக இருக்கும். 80% இல்லங்கள் தர உள்ளீடுகள் பற்றித் தெரிந்துள்ள போதிலும் பெருந்தோட்ட மற்றும் கிராமியப் பாடசாலைகளின் அவை பயன்படுத்தப்பட்டனவா என்பது குறித்து சரியான தகவல்கள் தெரிவிக்க தயக்கம் காட்டினார்கள்

- தர உள்ளீடுகளின் தவறான முகாமைத்துவம் -- 35% இல்லங்கள் இது சாத்தியம் என்றும் 98% ஆசிரியர்களும் 91% உத்தியோகத்தர்களும் இவை துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

பாடப் புத்தகங்கள் கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டு, அச்சடிக்கப்பட்டு இலவசமாக விநியோகிக்கின்றன. எனினும் இதனைப் பெறுவோர் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்படுவது சம்பந்தமாக மாத்திரமல்லாது, பின் தங்கிய பகுதிகளில் அவற்றின் விநியோகத்திலும் பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர். சில பிள்ளைகள், பாடப்புத்தகங்களுக்கு பணம் செலுத்த வேண்டியுள்ளதாகக் கூறினர்.

- பாடப்புத்தங்கள் -- 6.2% பிள்ளைகள் முக்கியமாக, கிராமிய பெருந்தோட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை.
- சரியான நேரத்தில் பாடப்புத்தகங்கள் -- 23.3% பிள்ளைகளுக்கு சரியான நேரத்தில் இவை கிடைக்கவில்லை.
- கொடுப்பனவு -- 3.5% பிள்ளைகள் பாடப் புத்தங்களுக்கு பணம் செலுத்தியுள்ளனர்

**கல்விப் பொதுத்தராதர சாதாரண/ உயர்தர மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தயாராவதற்கான விடுமுறை.**

அநேகமான பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதர சாதாரண/உயர்தர வகுப்புக்களில் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்களுக்கு இரண்டாவது ஆண்டு முடிவில் பரீட்சைக்குத் தயாராவதற்கான விடுமுறை வழங்கப்படுகிறது. கல்வி அமைச்சில் உள்ள சிரேஷ்ட உத்தியோக்கத்தர்கள் இந்த நடைமுறை, அதிகார பூர்வமற்றது என்றே கருதினர்.

- பரீட்சைக்குத் தயாராவதற்கான விடுமுறை -- 35% ஆசிரியர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

**சமத்துவ வாய்ப்புக்கான உரிமை மீறல்**

கல்வியைப் பொறுத்தவரை சகல பிள்ளைகளுக்கும் சமவாய்ப்புக் கிடைப்பதில்லை என்று இந்த ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. கல்வியில் சமத்துவக் கோட்பாடு என்ற வகையில் பிள்ளைகள் சீரான கல்வி வாய்ப்புக்களைப் பெறுவதில் பெற்றோரின் அந்தஸ்தும், அவர்களின் கல்வி மட்டங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வீடு எவ்வளவு செல்வச் செழிப்புடன் இருக்கின்றதோ அதற்கமைய பிள்ளைகளும் கல்வியில் சிறப்பாகச் செயற்படுவதாக நேர் காணப்பட்ட பலரும் திடமாக நம்புகின்றார்கள்.

அடுத்த அம்சமானது, கல்வியில் சம வாய்ப்பை மீறி, நகரப் பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட மற்றும் கிராமியப் பாடசாலைகளுக்கு, அதிகாரிகளால் குறைந்த வசதிகளே வழங்கப்படுகின்றன என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கும் ஏனைய பாடசாலைகளுக்குமிடையில் காணப்படும் இந்த வேறுபாடு மாணவர்களின் தரமற்ற செயற்பாடு, பரீட்சைப் பெறுபேறு என்பனவற்றுக்கு இட்டுச் செல்லும் பாதிப்பாக உள்ளது என்று பெற்றோர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் குற்றம் சாட்டுகின்றனர்.

அரச பாடசாலை அமைப்புடன் கூடுதலாக கஷ்டப்படும் தாழ்ந்த மத்திய தர குடும்பங்களைப் பார்க்கிலும், வறிய மற்றும் நடுத்தர வகுப்புக் குடும்பங்கள், ஊழல் பற்றி அக்கறை செலுத்துவதில்லை என்பது இந்த ஆய்விலிருந்து பெறப்பட்ட மற்றுமொரு சுவாரஸ்யமான பெறுபேறாகும்.

- சிங்களப் பாடசாலைகள் தமிழ் பாடசாலைகள் என்று பெயரிடுவது பராபட்சமானதும், இனத்துவ ஒற்றுமைக்குப் பாதகமானது என்றும் 80% இலும் கூடுதலான ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் கருதுகின்றனர்.

**பிள்ளைகளின் செயற்பாடு குறித்து பெற்றோரின் புலனுணர்வு**

பல பிரச்சினைகள் மற்றும் ஊழல் என்பன இருப்பினும், தமது பிள்ளைகள் பாடசாலைகளில் நன்கு கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதாக பெரும்பாலான பெற்றோர் கருதுகின்றனர்.

- பிள்ளைகளின் செயற்பாடு -- 79.5% ஆன பெற்றோர் திருப்தி தெரிவிக்கின்றனர்.
- பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படுதல் -- 75% இல்லங்கள் திருப்பதியடைந்துள்ளன.
- ஆங்கில மொழி மூலமான கல்வி -- 41.1% இல்லங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

• 6, 10, 11 தரங்களில் புதிய கல்வி அமைப்பு -- சுமார் 80% இல்லங்கள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

**ஊழலை ஒழிப்பதற்கென எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கை**

ஒரு சில பெற்றோர், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரே பாடசாலை அமைப்பில் ஊழல் நடவடிக்கைகள் பற்றி முறைப்பாடு அல்லது அறிவித்தல் செய்துள்ளனர் என்பது இந்த ஆய்வு மூலம் காணப்பட்டுள்ளது.

• ஊழல் புறக்கணிக்கப்பட்டது -- 62% ஆசிரியர்களும் 45% உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**ஆசிரியர் வேதனப் படிகள், இடமாற்றங்கள்**

இந்த அமைப்பு பெரிதும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் சம்பள வேதனங்கள், கடன்கள் தொடர்பாக ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களிடையே பெரிதும் அதிருப்தி காணப்படுகிறது. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் வேதனப்படிக் கொடுப்பனவில் தாமதம் பற்றி அறிய வந்துள்ளன. படியை விரைவில் பெறுவதற்கு, இலஞ்சம் வழங்க வேண்டும், அல்லது அரசியல் செல்வாக்கைப் பெற வேண்டும் என்று பல ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் கூறியுள்ளனர். இடமாற்றல் அமைப்பும் பராபட்சமானது என்பதே பொதுவான கருத்தாகும். பல ஆண்டுகள் கஷ்டமான பிரதேசங்களில் பணி புரிந்தவர்களைப் பார்க்கிலும், நகரப் பகுதிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சலுகை வழங்கப்படுவதாக பலர் குற்றம் சாட்டியுள்ளனர்.

• வேதனப்படி தாமதம் -- 82% ஆசிரியர்களும் 75% உத்தியோகத்தர்களும் இத்தாமதத்தை எதிர்நோக்கியுள்ளனர் - இதே வேளையில், இதனைத் துரிதப்படுத்துவதற்கு 10% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் இலஞ்சம் செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

• கடன் பெறுதலைத் துரிதப்படுத்த அரசியல் செல்வாக்கு -- 40% ஆசிரியர்களும் 34% உத்தியோகத்தர்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்..

• இடமாற்றத்துக்கு இலஞ்சம் -- 47.5% ஆசிரியர்களும் 34% உத்தியோகத்தர்களும் இத்தகைய சம்பவங்கள் குறித்துக் கேள்விப்பட்டுள்ளன.

• செல்வாக்கினால் இடமாற்றம் -- 79% ஆசிரியர்களும் 72% உத்தியோகத்தர்களும் ஒரு உத்தியோகத்தைத் தெரிந்தெடுத்தல் அல்லது உறவினராக இருத்தல் முக்கியமான அம்சம் என்று ஒப்புக்கொண்டுள்ளனர். 85% ஆசிரியர்களும் 90% உத்தியோகத்தர்களும் அரசியல் செல்வாக்கின் பேரிலேயே இடமாற்றங்கள் வழங்கப்படுவதாகக் கருதுகின்றனர்.

**தொண்டர் ஆசிரியர்கள், பதில் அதிபர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள்**

தொண்டர் ஆசிரியர்களை வேலைக்கமர்த்துவதற்கான ஒழுங்கு விதிகள் இல்லாமையால், அதிபர்கள் அவர்களை வெளிப்படையான நடைமுறையைப் பின்பற்றாது பாடசாலை மட்டத்தில் நியமிக்கின்றனர். மாகாண மட்டத்திலும் கூட, பல பதில் அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் பதவிகள், தராதரம் பெறாதவர்களாக இருப்பினும், அரசியல் ரீதியான நியமனங்களாக இருப்பதாக தெரிய வந்துள்ளது.

- தொண்டர் ஆசிரியர்கள் நியமனங்கள் -- அதிபர்கள், தமது உறவினர்களை, அல்லது தமக்கு நெருங்கியவர்களை நியமித்ததாக சுமார் 10% ஆசிரியர்களும் 45% உத்தியோகத்தர்களும் கூறுகின்றனர்.
- பதில் அதிபர் நியமனங்கள் -- அரசியல் ரீதியான நியமனங்களே பரவலாகக் காணப்படுவதாக 56% ஆசிரியர்களும் 62% உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர்.
- ஆசிரிய ஆலோசகர்கள் நியமனம் -- இவை அரசியல் நியமனங்கள் என்றும், பலர் தராதரம் பெறாதவர்கள் என்றும் 50% ஆசிரியர்களும் 60% பணிப்பாளர்களும் கருதுகின்றனர்.

# 2. அறிமுகம்

**கல்வியில் சாதனைகள்**

இலங்கையின் கல்விச் சாதனைகள் பாரியதாகும். வயது வந்தோர் படிப்பறிவு விகிதம் 90.7% என்பதால், இலங்கை தெற்காசிய நாடுகளில் உயர்ந்த இடத்தை வகிக்கிறது.[3] கல்வியில் இலங்கையின் சாதனைகளுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். முக்கியமாக தனி நபருக்கான மொத்த உள்ளூர் உற்பத்தியுடன் ஒப்பிடும்போது இலங்கையில் மனித அபிவிருத்தி உயர்ந்த மட்டங்களைக் கொண்டுள்ளது. இலங்கையின் அரசாங்கப் பாடசாலைகள் குறிப்பாக 20ஆவது நூற்றாண்டில் புத்திஜீவிகளையும், தலைவர்களையும் உருவாக்கியுள்ளது. இன்று அரசாங்கம் 5 – 14 வயதுள்ள சகல சிறுவர்களுக்கும் கட்டாயக் கல்வியை வழங்குகிறது. வசதியற்ற குடும்பங்களில் இருந்துவரும் பிள்ளைகள் உட்பட சகலருக்கும் ஆரம்ப இடைநிலை கல்வி கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளது. அநேகமாக சகல பிள்ளைகளும் தரம் 5ஐ பூர்த்தி செய்யும் விதத்தில் ஆரம்ப நிலையில் பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவோர் விகிதம் 98%[4] காணப்படுகின்றது. இலங்கை ஐ.நா மிலேனியம் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் நிர்ணயிக்கப்பட்ட “சகலருக்கும் கல்வி” என்ற இலக்கை அடைய இருக்கின்றது.[5]

2007ஆம் ஆண்டில், இலங்கையில் 9,678 ஆரம்ப, இடைநிலை பாடசாலைகளும், இவற்றில் 3.94 மில்லியன் மாணவர்களும், 209,198 ஆசிரியர்களும் இருந்தனர்.[6]

**கல்வி நிதி**

1990 இன் முற்பகுதி வரையிலான சமூக அபிவிருத்தியிலான சாதனைகளுக்கு காரணம் பொருளாதார அபிவிருத்தி என்ற ரீதியில் கல்வியில் செய்யப்பட்ட நீண்ட கால முதலீடுகள் ஆகும்.[7] மேலும் 1990 ஐ.நா. ஜொம்ரின் பிரகடனத்தின் கீழ் சகலருக்குமான கல்வி அறிமுகம் மற்றும், 2000 ஆம் ஆண்டு டாக்கா நடவடிக்கைக்காக கட்டுக்கோப்பில் அரசாங்கங்களின் உறுதிப்பாடுகள் என்பன கல்வித் துறைக்கு, உதவி வழங்கும் நாடுகளின் அனுசரணையை அதிகரித்தது.

எனினும், இன்று கல்வியில் அரசாங்க முதலீடு ஒப்பீட்டளவில் சராசரியாகவே உள்ளது. ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் அரசாங்கச் செலவில் கல்விக்கான செலவின் வீதம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது.

---

3. மனித அபிவிருத்திச்சுட்டெண் 0.743 உடன் 2007/2008 UNDP அறிக்கையில் இலங்கை 177 நாடுகளில் 99 வது இடத்தில் உள்ளது. http://hdrstats.undp.org/countries/country_fact_sheets/cty_fs_lka.html
4. உலக வங்கி: ‘Treasures of ...... 2005’.
5.கல்வி அமைச்சு: ‘அறிவும் பண்பும் கொண்ட எதிர்கால சந்ததியினர்...’
6.கல்வி அமைச்சு: பாடசாலைக் கணக்கெடுப்பு 2007, ‘அறிவும் பண்பும் கொண்ட எதிர்கால சந்ததியினர்...’
7.உலக வங்கி: ‘Treasures of ...... 2005’.

(2005 இன் வரவு செலவுத் திட்டத்தில் 6.8%) கடந்த தசாபத்தில் தெற்காசிய சராசரி 3.5%[8] ஆக இருந்த போது இலங்கையில் மொத்த உள்ளூர் உற்பத்தியில் 2-3% மாத்திரமே கல்விக்காகச் செலவிடப்பட்டது.

இத்துடன் மீளவரும் செலவினம் முதலீட்டுத் தொகைக்குச் சற்றும் இடமளிக்காமல் அதிகரித்து வருகின்றது. எவ்வாறாயினும், ஆசிரியர் வேதனம் மிகக் குறைவாகவே உள்ளது. தேசிய தனிநபர் வருமான வீதத்தின் பிரகாரம் இந்தியா, பங்களாதேஷ், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளைப் பார்க்கிலும் இலங்கையில் ஆசிரியர்கள் அரைவாசி அல்லது அதற்கும் குறைவான சம்பளத்தையே பெறுகிறார்கள்.[9]

**கல்வியில் தரமும் சமத்துவமும்**

அண்மைய வருடங்களில் மேம்பாடு காணப்பட்ட போதிலும் இலங்கையில் கல்வித் தரம் திருப்திகரமற்றது[10] என்றே சர்வதேச நிபுணர்கள் கணித்துள்ளனர். இதனைக் கீழ்கண்ட புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

I. தரம் குறைந்த கற்கை/கற்பித்தல் மற்றும் செலவின முகாமைத்துவத்தில் சீரற்ற தன்மை : கல்விப் பொதுத் தராதரம் (தரம் 11) சித்தியெய்தியவர்களின் விகிதம் 2007 இல் 49% முக்கிய பாடங்களில் மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் விகிதங்கள் உயர்ந்ததாக உள்ளன, கல்வி பொதுத் தராதர சாதாரண தரம் 27% கல்வி பொதுத் தராதர உயர்தரம் (தரம் 13) 35%[11]

Ii. கல்விப் பெறுபேறுகள் மிகக் குறைவானதாகும் ஆரம்பப் பாடசாலை முடிவில் மொழி, கணக்குத் திறன்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை 2/3 விகிதமான சிறுவர்கள் அடையவில்லை. 2005 இல் 10% த்தினரே நிர்ணயிக்கப்பட்ட ஆங்கிலமொழி நிபுணத்துவ இலக்கை அடைந்திருந்தனர்.[12] மாவட்டங்களிலும், மாகாணங்களிலும் சாதனைகளில் பெரும் வேறுபாடு காணப்பட்டது.

கூடுதலான வசதிகளுடன் பிரபல பாடசாலைகள் நகரப் பகுதிகளில் இருப்பதால் நகர் சார்ந்த நிலைமை காணப்படுகிறது. இந்த நகரப் பாடசாலைகளில் இருந்தே பிரதானமாக மாணவர்கள், மருத்துவ, பொறியியல், அல்லது விஞ்ஞான கற்கைக்கு பல்கலைக்கழக அனுமதி பெறுகிறார்கள். இதனால் முக்கியமாக பாடசாலையில் பிரவேசிக்கும் தரம் 1, தரம் 6 (5ம் ஆண்டுப் புலமைப் பரிசிலின் பின்னர்) ஆகியவற்றில் சேர்வதற்கு இந்த சிறந்த நகரப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் மாணவர்களிடையே கடும் போட்டி காணப்படுகிறது.

8. உலக வங்கி: 'Building the Sri Lankan Knowledge Economy' (2007)
9. உலக வங்கி: 'Treasures of ...... 2005'
10. ஹர்ஷா அத்துருபானே: 'Has the Holy Grail of education been sighted?' சண்டே ரைம்ஸ் 6 ஜீலை 2008.
11. உலக வங்கி: 'Treasures of ...... 2005'
12. உலக வங்கி: 'Treasures of ...... 2005'

இதே வேளையில் 2005 இல், சுமார் 30% பாடசாலைகளில் ஒவ்வொன்றிலும் 100 மாணவர்களுக்கும் குறைவாகவே இருந்தனர். 15.8% பாடசாலைகளில் ஒவ்வொன்றிலும் 50 மாணவர்களுக்கும் குறைவாக இருந்தனர்.[13] இதன் விளைவாக பொருளாதார அளவு என்ற காரணத்தின் பேரில் மிகக் குறைந்த வசதிகளே இப்பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. அனேகமான பாடசாலைகளில் விஞ்ஞானக் கல்விக்கு வசதிகள் இருக்கவில்லை. இதனால் பிள்ளைகள் இரு மடங்கு பாதிப்புக்கு உள்ளாகினர். பெருந்தோட்டப் பகுதிகளில் 775 ஆரம்பப் பாடசாலைகள் (தரம் 5 வரை) உள்ளன. ஆனால் தூரம், பொருளாதார அம்சங்கள், பாகுபாடு என்பன காரணமாகச் சிறுவர்கள் நகர அல்லது தோட்டப் புறமில்லாத பாடசாலைகளில் அனுமதி பெறுவது கஷ்டமாகவுள்ளது. குறைந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பவற்றின் காரணமாக இந்தப் பாடசாலைகளில், பாடத்திட்ட மறுசீரமைப்பு பலனளிப்பதில்லை. வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் காரணமாக கல்வியில் பிராந்திய வேறுபாடுகள் அதிகரித்துள்ளன.

**கல்வி அமைப்பின் முகாமைத்துவ வடிவமைப்பு.**

இலங்கையில் தற்போதுள்ள கல்வி அமைப்பின் முகாமைத்துவ வடிவமைப்பு 1987 இல் மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டதுடன் அமுலுக்கு வந்தது. இந்தப் பரவலான நிர்வாக அமைப்பு, தீர்மானம் எடுக்கும் வழிமுறையில் கூடுதலான சுதந்திரத்தையும், உள்ளூராட்சி சபைகள் பங்குபற்றுதலையும், கூடுதலாக்கும் என்று கூறப்பட்டது. எனினும், இது அரசியல் மயமாக்கலையும், தலையீடுகளையும் அதிகரித்ததாக TISL ஆய்வுக்கு உட்பட்ட பலர் அறிவித்துள்ளனர். தற்போதுள்ள பரவலாக்கப்பட்ட முகாமைத்துவ வடிவமானது, ஐந்து பிரிவுகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ள பகுதிகளைக் கொண்டுள்ளது.


- கல்வி அமைச்சு (MOE)
- மாகாண சபை அமைச்சுகள்/கல்வித் திணைக்களங்கள்.
- வலயக் கல்வி அலுவலங்கள் (ZEO)
- மாவட்டக் கல்வி அலுவலகங்கள் (DEO)
- பாடசாலைகள் ( மாகாண மற்றும் தேசிய)

96% அரசாங்கப் பாடசாலைகள், எட்டு மாகாண சபைகளும், தமது இடைநிலை கல்வி முகவர்களான வலயக் கல்வி அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலகங்கள் மூலம் நிர்வகிக்கின்றனர். மாகாண கல்விப் பணிப்பாளர்

13. கல்வி அமைச்சு: பாடசாலைக் கணக்கெடுப்பு 2005. இந்த மதிப்பீட்டின் பிரகாரம் 50% பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் 200 க்கும் குறைந்த மாணவர்களே உள்ளனர்.

தலைமையிலான மாகாணக் கல்வித் திணைக்களம் மாகாணத்தில் ஆசிரியர் இடமாற்றம், உட்பட முகாமைத்துவம், கல்வி நிகழ்ச்சிகளில் நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது. மாகாண சபைகள், கல்வித் திட்டங்களையும், வரவு செலவுத் திட்டங்களையும் வகுப்பதுடன் ஆசிரியர்கள், அதிபர்கள், நிர்வாகத்தினர் ஆகியோரை மாகாண மட்டத்தில் வேலைக்கு அமர்த்துவது, நீக்குவது என்பவற்றையும் மேற்கொள்கின்றன. வலயக் கல்வி அதிகாரிகள், வலயங்களுக்கிடையில், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரை இடமாற்றம் செய்தல், நியமித்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றது.[14] எனினும், வலய மற்றும் பிரதேச அலுவலங்கள், வரைபடம் 1 இல் காண்பிக்கப்பட்டவாறு கல்வி அமைச்சுக்கு அறிவித்தல் வழங்குகின்றன.

வரைபடம் 1 : கல்வி துறையின் வடிவமைப்பு




மூலம்: கல்வி அமைச்சு இணையத்தளம் http://www.moe.gov.lk/Education_his_3.html

14. உலக வங்கி: 'Treasures of the Education System of Srilanka 2005'

மாகாணப் பணிப்பாளர் கல்வி அமைச்சிற்கும், மாகாண கல்வி அமைச்சிற்கும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளார். இதனால் கையாள்வதற்குக் கடினமாக ஒரு நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது. நிதி வளங்களும் ஆளணியும், ஒவ்வொரு மாகாணக் கல்வி அமைச்சர் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுவதால் அரசியல் செல்வாக்கு தவிர்க்க முடியாததாக உள்ளது. இந்த நிலைமையானது, மாகாணங்களில் அரசியல் ரீதியான ஆசிரிய நியமனங்களையும், இடமாற்றங்களையும் மேற்கொள்வதற்கு உகந்ததாக உள்ளது.

**கல்விக் கொள்கை**

அரசாங்கம் 2006 – 2010 வரையிலான காலப்பகுதிக்கென கல்வித்துறை அபிவிருத்தித் திட்டத்தையும், கட்டுக் கோப்பையும் (ESDPE) அமுல்படுத்தியுள்ளது. இது முன்சொல்லப்பட்ட கல்வித்துறை எதிர்நோக்கும் சவால்களை எதிர்நோக்க வழிவகுத்துள்ளது. இத்துறையில் சமனற்ற அனுமதி, தரம் குறைந்த கல்வி, நிர்வாகம் என்பன பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளதோடு அவற்றைத் தீர்ப்பதற்கு பல இலக்குகளும் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டுள்ளன. ESDPE இன் நான்கு தொனிப் பொருள் இலக்குகள் வருமாறு.

- அடிப்படை, இடைநிலைக் கல்விக்கு சமனான அனுமதியை ஊக்குவித்தல்.
- கல்வித்தரத்தை சீராக்கல்
- வள ஒதுக்கீட்டின் திறனையும், சமத்துவத்தையும் மேம்படுத்துதல்
- கல்வி நிர்வாகத்தையும் சேவைப் பரம்பலையும் வலுப்படுத்தல்.

இந்தக் கட்டமைப்புக்கான வெளியார் ஆதரவு குறிப்பிடத்தக்கதாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியும், ஏனைய உதவி வழங்குபவர்களும் கல்வியில் சமத்துவம் தரம் அத்துடன் நல்ல நிர்வாகத்தையும் அதிகரிக்கும் நோக்குடனான திட்டங்களுக்கு 2008 – 2012 வரை 11.2 பில்லியன் ரூபாவை வழங்க உறுதியளித்துள்ளன.[15]

15. கல்வி அமைச்சு: பாடசாலைக் கணக்கெடுப்பு 2007, 'அறிவும் பண்பும் கொண்ட எதிர்கால சந்ததியினர்...'

**ஊழலும் - ஊழல் நடவடிக்கைகளும்**

பொதுவாக கல்வி, சுகாதாரம் அல்லது நீர் போன்ற சேவை விநியோகத்தில் ஊழலும், தரமற்ற முகாமைத்துவமும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இந்த ஆய்வில் விபரிக்கப்பட்டுள்ள பல பிரச்சினைகள் கல்வித்துறைக்கு பிரத்தியேகமானவை அல்ல. ஆனால் தரமற்ற நிர்வாகம், தரமற்ற பொதுத்துறை முகாமைத்துவம் என்பவற்றின் விளைவாகும். எனினும், கல்வியில் காணப்படும் ஊழலானது எதிர்கால சந்ததியினரின் விழுமியங்களிலும், நடத்தையிலும், தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கல்வியில் ஊழலானது சமூகத்தின் சகல துறைகளையும் பாதிக்கின்றது. இதனால் இதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஊழல், கல்வியை பல்வேறு வழிகளில் பாதிக்கின்றது. பாரிய மட்டத்தில், ஊழல் நாட்டில் தீர்மானம் எடுக்கும் வழிமுறையைப் பாதிக்கின்றது. கல்விக்கான வள ஒதுக்கீட்டை சீர்குலையச் செய்து, கட்டமைப்பு, அபிவிருத்தி திட்டங்கள் போன்றவற்றிற்கு தகுதியற்ற முதலீடுகள் செய்யப்படுவதற்கு வழிவகுக்கிறது. முகாமைத்துவ மட்டத்தில், தரம் குறைந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படும் போது கல்வியின் தரம் பாதிக்கப்படுகிறது ஆசிரியர்கள் வருகை தராமை, அல்லது கற்பிக்காமை, பாடப்புத்தகங்கள் குறைந்த தரமுள்ளனவாக இருத்தல், அவை தாமதமாக் கிடைத்தல் அல்லது கிடைக்காமலே போதல், என்பனவற்றாலும் கல்வித்தரம் பாதிக்கப்படுகிறது. பாடசாலை அனுமதிகள் தன்விருப்பப்படி மாற்றியமைக்கப்படும் போது கல்விகற்கும் சந்தர்ப்பம் சமமாகக் காணப்படுவதில்லை. குறைந்த அந்தஸ்த்துள்ள பாடசாலைகள், குறைந்த அளவிலான வளங்களைப் பெறுதல் போன்றவை இடம்பெறும்.

ஊழல் என்பது "சொந்த இலாபத்திற்காக ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல்" என்று TISL வரைவிலக்கணம் கூறுகிறது. எனினும் நடைமுறையில் உள்நோக்கங்கத்துடன் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், புறக்கணிப்பு, தவறான முகாமைத்துவம், (தனிப்பட்டநலன் இல்லாமலே அதிகாரத் துஷ்பிரயோகம் செய்யப்படுதல்) மற்றும் உண்மையான தவறுகள் என்பவற்றுக்கு இடையே வேறுபாட்டை வரையறுப்பது அநேகமாகக் கடினமானதாகும். சில சமயங்களில் பாடசாலை மாணவர்களின் நலன்கருதி, நல்லெண்ணத்துடன் நடைமுறைகளும், பிரமாணங்களும், மாற்றப்படலாம். எனினும், யதார்த்தத்துக்கு புறம்பான அரசாங்க/தனியார் உத்தியோகத்தரின் நடத்தை - பாகுபாட்டுக்கு வழியாக்கும் விதத்தில், வளங்கள் சேவைகள் என்பனவற்றை பெறுவதற்குத் தடை ஏற்படுத்தலாம். திறமையின்மை/தவறான முகாமைத்துவம் மற்றும் தரமற்ற தொழில் கோட்பாடுகள் ஊழலுடன் சேர்ந்து சமத்துவமின்மை, கல்வியில் தரக்குறைவு என்பவற்றிற்கு வழிவகுக்கக்கூடும்.

ஆட்டவணை 1: கல்வியில் ஊழலுக்கான காரணங்கள் வடிவங்கள், விளைவுகள் (உதாரணங்கள்)

| காரணங்கள் | வடிவங்கள் | விளைவுகள் |
|---|---|---|
| • அரசியல் ஆதரவு | ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் நியமனங்கள், இடமாற்றங்களில் தனிச்சலுகை. | • கற்பித்தல், நிர்வாகம் என்பவற்றில் குறைந்த தரம். • தரம்பெற்ற ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஊக்குவிக்கப்படாமை • புவியியல் பகுதிகளில் ஆசிரியர்கள் சமாந்தர முறையில் நியமிக்கப்படாமை |
| • அரசியல் ஆதரவு | பதில் அதிபர்கள் வழமையான நடைமுறைக்குப் புறம்பாக நியமிக்கப்படுதல் | • தரம் குறைந்த பாடசாலை நிர்வாகம் • தரம் குறைந்த கல்வி |
| • அரசியல் ஆதரவு • புறக்கணிப்பு | ஆசிரியர் கடன்கள் வழங்குவதில் தனிச்சலுகை. ஆசிரியர் கடன்கள் வழங்குவதில் விதிமுறைகள் பின்பற்றப்படாமை. | • ஆசிரியர்கள் ஊக்கப்படுத்தப்படாமை • சமநிலை பற்றாக்குறை |
| • பாடசாலையை அனுமதிக்கு வதிவிட விதிமுறை என்ற ஒழுங்குகள் கடைப்பிடிக்கப் படாமை | பாடசாலை அனுமதியில் மோசடி/ வதிவிட விதிமுறை துஷ்பிரயோகம் | • கல்வியை பெறுவதில் சமநிலை இல்லாமை • சமூக சமத்துவமின்மை மீண்டும் அமுலாக்கப்படுதல். |
| • பிரபல பாடசாலைகளுக்கான பாரிய போட்டி | பாடசாலை அனுமதியில் இலஞ்சம் | • சமூக சமத்துவமின்மை மீண்டும் அமுலாக்கப்படுதல் |
| • கிரமமான பாடசாலைக் கட்டணம் இல்லாமை • விதிமுறைகளைப் பின்பற்றாத குறைபாடு | தேவையற்றதும் சட்ட விரோதமானதும் / சட்டவிரோத கட்டணம் / கொடுப்பனவுகள் | • ஏழைகள் மீது பழு • சமூக சமத்துவமின்மை மீண்டும் ஏற்படுத்தப்படல் |
| • 5ஆம் ஆண்டு பரீட்சை மூலம் தேசிய பாடசாலைகளுக்கும் மூன்றாம் நிலைக் கல்விக்கும் அனுமதி பெறுவதில் பாரிய போட்டி. • ஆசிரியர்களுக்கு குறைந்த வேதனம் | பிரதான கற்பித்தல் உள்ள ஆசிரியர்கள் பாடசாலை நேரத்திற்குப் பின்னர் அல்லது வார இறுதி நாட்களில் தனியார் வகுப்புக்களை நடத்துதல். | • ஏழைகளுக்கு சாதகமற்ற நிலை • சமூக சமத்துவமின்மை மீண்டும் ஏற்படுத்தப்படல் |
| • கட்டுப்பாடுகள் அமுல் செய்யப்படாமை | பாடசாலைச் சொத்து துஷ்பிரயோகம் | • அரசாங்கத்துறையில் நேர்மைத் திறன் குறித்து நம்பிக்கை இழப்பு |
| • புறக்கணிப்பு • அறியாமை • தெளிவற்ற பிரமாணம் | துஷ்பிரயோகம் /தரங்கள் உள்ளீட்டில் தவறான ஒதுக்கீடு. | • தரம் குறைந்த கற்பித்தல் |
| • புறக்கணிப்பு | பாடப் புத்தகங்கள் விநியோகத்தின் ஒழுங்கீனங்களும் தாமதிப்பும் | • தரம் குறைந்த கற்பித்தல் |
| • புறக்கணிப்பு | வேதனப் படிகள் கொடுப்பனவில் தாமதம். | • ஆசிரியர்கள் சரிவர ஊக்குவிக்கப்படாமை |
| • புறக்கணிப்பு | ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் அறக்கொடைக் கொடுப்பனவில் தாமதம் | • மாணவர்களும் பெற்றோர்களும் சரிவர ஊக்குவிக்கப்படாமை. |

இதனால், இந்த ஆய்வின் நோக்கத்திற்காக ஊழலுக்கு பொது நலனுக்கு எதிராக உத்தியோகபூர்வ அதிகாரத்தை பயன்படுத்துதல் என்று வரைவிலக்கணம் கூறலாம். இந்தப் பரந்த வரைவிலக்கணம், இலங்கையில் அரச கல்வி அமைப்பு பற்றிய இந்த ஆய்வில் கலந்துரையாடப்படும் அனேகமான அம்சங்களை உள்ளடக்குகிறது. அத்துடன் பொதுமக்களின் விருப்பம் அல்லது பொது நலனுக்கு எதிரான எந்த விதமான உத்தியோகபூர்வ செயற்பாட்டையும் ஊழலுக்குள் உள்ளடக்குகிறது. இந்த வரைவிலக்கத்தின் கீழ், புறக்கணிப்பு, ஒழுங்கீனம், விதிகள், பிரமாணங்களை அலட்சியப்படுத்தல், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், நிர்வாகத்தவர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்புப் பற்றாக்குறை, என்ற யாவும் ஊழலாகவே கருதப்படுகின்றன. இந்த அம்சங்கள் கல்வி அமைச்சின் நோக்கத்திற்கு அமைய அக்கறையுடையோரின் திருப்தியை உறுதிப்படுத்தும் விதத்திலான “திறமை சமத்துவம், செயற்பாட்டில் உயர்ந்த தரம்” என்பவற்றில் கல்வியிலான பொது அக்கறையை சீர்குலைக்கின்றன.[16]

19ஆவது நூற்றாண்டிலேயே அரசாங்கம், ஊழல் பிரச்சினை, அபிவிருத்தியில் அதன் தாக்கம் என்பன பற்றி அறிந்திருந்தது. இலஞ்சமானது 1883ஆம் ஆண்டு தொடக்கம் குற்றவியல் கோவையின் கீழ் தண்டணைக்குரிய குற்றமாகும். அரசாங்க சேவையில் இலஞ்சத்தை கட்டுப்படுத்த 1954 இல் இலஞ்ச அதிகார சட்டம் வகுக்கப்பட்டது. 1994ம் ஆண்டு ஊழலை தடுத்து, விசாரணை செய்யவென இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவென ஆணைக்குழுவொன்று (CIABOC) அமைக்கப்பட்டது.

எனினும், ஊழலைக் கட்டுப்படுத்த பொதுமக்களிடையே விழிப்புணர்வும் அவசியம். கல்வி உரிமைகள் பற்றிய பொதுமக்கள் விழிப்புணர்வு, கல்வியானது நேர்மையாகவும், சிறந்த தரத்திலும் வழங்கப்படுகிறது என்ற எதிர்பார்ப்பு ஆகியவை கல்வியில் ஊழலைத் தடுப்பதற்கு முக்கியமானவையாகும். ஊழலை எதிர்க்கும் நடவடிக்கையாக தமது அரசாங்கங்களிடம் பொறுப்புத் தன்மையை பிரஜைகள் கோருவதற்கு ஒரு கட்டுக் கோப்பின் அவசியத்தை சர்வதேச ஸ்தாபனங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த ஆய்வானது ஊழலைக் கட்டுப்படுத்துவதற்கு சிவில் சமூகம் அதன் பொறுப்பை அறிவதற்கான தேவையை பூர்த்தி செய்யும் ஒரு முயற்சியாக உள்ளது. இரண்டாவதாக, பரிபாலனம், சமத்துவம், கல்வித் தரம் கூடுதலான பலனைத் தருதல், தற்போதுள்ள கட்டுப்பாட்டிற்கு (ESDPF) மேலும் பெறுமானத்தைச் சேர்த்தல் என்பவற்றுக்கான திட்டங்களை ஏற்படுத்தும் வகையில்

16. http://www.moe.gov.lk/about_us.php 04-10-2008 பார்வையிடப்பட்டது

கல்வி அமைச்சுக்கு பெறுமதியான தகவலை வழங்குதலாகும். இந்த பிரதான கல்வி இலக்குகளை எய்துவதில் ஊழல்கள் தொடர்பான தவறான நடவடிக்கைகள் என்பவற்றின் பாதிப்பை மதிப்பீடு செய்வதன் மூலம், இந்த ஆய்வானது, சமத்துவம், கல்வியின் தரம் என்பன மீது ஊழலின் பாதிப்பு குறித்து முக்கியமாக கவனம் செலுத்தியுள்ளது.

## 3. ஆய்வின் நோக்கங்களும், வழிமுறையும்

கல்வியில் ஊழலைக் கட்டுப்படுத்துதல், ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை வகுத்தல், கல்வி மீதான செலவினத்தின் பெறுமதியை மேம்படுத்தல் என்பன தொடர்பாக கல்வி அமைச்சுக்கு வலுவான தரவு அடித்தளம், நல்ல ஆதாரமுள்ள விதந்துரைகளை வழங்குவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும். பொது விவாதத்தை தூண்டுவதும், பல்வேறு அக்கறையுடையோரின், செயலை ஊக்குவிப்பதும் கூட இதன் நோக்கமாகும்.

**நோக்கங்கள்**

இந்த நோக்கத்தை எய்துவதற்கு, பின்வரும் இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளன.

1. அரச கல்வி அமைப்பில், காணப்படும் ஊழல் வகைகளையும், வடிவங்களையும் விளங்கிக் கொள்ளுதல்
2. அரச கல்வி அமைப்பில், இத்தகைய ஊழல் இருப்பதையும், அதன் அளவையும் மதிப்பிடுதல்.
3. சிவில் சமூகத்திற்கும், அக்கறையுடையோருக்கும் கல்வியில் ஊழல் பற்றியும், அதனைக் கட்டுப்படுத்துவதற்குமான சாத்தியமான தீர்வுகள் பற்றியும் அறிவூட்ட ஆலோசனைத் திட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கான தளம் ஒன்றை வழங்குதல்.

**வழிமுறை**

இந்த ஆய்வின் வழிமுறையானது, பண்பு சார் மற்றும் அளவு சார் என்பனவற்றின் கலவையாகும். இவ்வாய்வானது இரண்டு கட்ட தரவு சேகரிப்பைக் கொண்டுள்ளது – உருவாக்கம், மற்றும் ஆராய்ச்சியைக் கொண்டுள்ளது. இவை பரஸ்பரம் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன், ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. உருவாக்கல் கட்டம், தரவு சேகரிக்கவென பல்வேறு வகைகள் மற்றும், மாதிரிகள் என்பவற்றை இனங்காணுவதற்கு பண்புசார் வழிமுறைகளைப் பயன்படுத்தியது, ஆய்வுக் கட்டமானது, அளவீடுகளுக்கு தரவு சேகரிக்க அளவுசார் வழிமுறைகளை கடைப்பிடித்தது.

**உருவாக்கல் கட்டம்**

உருவாக்கல் கட்டத்தில், பண்புசார் தகவல், இலங்கையில் அரசாங்க பாடசாலை அமைப்பில் உள்ள பல்வேறு அக்கறையுடையோரை இனங்கண்டது. இவர்களில் ஆணும், பெண்ணுமாக பாடசாலைக் கல்வியில் பல்வேறு மட்டங்களில் தற்போதுள்ள மற்றும் பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்களின் பெற்றோர், குடும்பங்கள், கிராமத் தலைவர்கள், ஆசிரியர்கள், வலய, மாகாண அமைச்சு மட்டத்திலான கல்வி உத்தியோகத்தர்கள் என்போர் அடங்குவர். ஊழல் நடைமுறையின் ரகம், வடிவங்கள், அமைப்பு, புவியியல் விநியோகம், என்பன குறித்து தகவல் திரட்டவென அக்கறையுடையோருடன் நேர்காணல், கலந்துரையாடல், இலக்குக் குழுநிலைக் கலந்துரையாடல் (Focus Group Disscussion) என்பன நடாத்தப்பட்டன.

இந்த ஒவ்வொரு வழிமுறைகளும், அக்கறையுடையோர் 'Snowball' மாதிரி மூலம் இனங்காணப்பட்டனர். ஒவ்வொரு நிலையிலும் ஆகக்குறைந்தது 3-10 நேர்காணல்கள், ஒன்று அல்லது இரண்டு குழுநிலைக் கலந்துரையாடல், மற்றும் அவதானிப்புகள் இடம்பெற்றன. மேலதிகமாக இந்தப் பிரிவுகள் அல்லது உப குழுக்களுடன் தொடர்புடைய ஆவணங்களின் சேகரிப்பும் இடம்பெற்றன. உருவாக்கல் கட்டத்தில் சேகரிக்கப்பட்ட தகவல், வினாக்கொத்துக்கள் உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது.

ஆய்வுக் கட்டத்தில் அளவீட்டுத் தகவல் மூன்று மதிப்பீடுகளில் பெறப்பட்டது. தகவலானது தெரிவு செய்யப்பட்ட மாதிரி சமூகங்களுடன் நேர்காணல் மூலம் பெறப்பட்டது. கள வேலையை ஆரம்பிப்பதன் முன்னதாக, உதவியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். வினாக்கொத்துக்கள் களத்தில் பரிசோதிக்கப்பட்டு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டது.

அட்டவணை 2: ஆய்வின் உருவாக்கல் கட்டத்தில் நேர்காணலும், கலந்துரையாடலும்.

| தற்போதைய மாணவர்கள் | மாணவர்களின் பெற்றோர் | பழைய மாணவர்கள் | சிவில் சமூக அமைப்புகள் | கிராமத் தலைவர்கள் | மாகாண வலய கல்வி உத்தியோகத்தர்கள் | ஆசிரியர்கள் அதிபர்கள் | கல்வி அமைச்சும், கல்வி திணைக்கள உத்தியோகத்தர்களும் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 13 | 10 | 4 | 3 | 6 | 9 | 7 | 59 |

சொந்த மொழிகளில் எழுதப்பட்ட பண்புசார் தகவல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அட்லஸ் /Ti Programme மூலம் பகுப்பாய்வுக்கென கணனிமயப்படுத்தப்பட்டது. பகுப்பாய்வு 26 பிரதான பிரிவுகளுக்குள் 78 Code Segments ஐ இனங்கண்டது. SPSS Programme ஐ பயன்படுத்தி அளவுசார் தகவல் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

**ஆய்வுக் கட்டம்**

**ஆய்வுப் பகுதிகள்.**

கண்டி மாவட்டங்கள், நுவரெலியாவில் தோட்டத்துறை, காலியில் தெற்கு அம்பலாங்கொட, ஹிக்கடுவ கரையோரப் பகுதிகள், குறைந்த அபிவிருத்தி பெற்ற அனுராதபுரம், மஹியங்கன, பதுளையில், கிராந்துருக் கோட்டை, புத்தளத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் போன்ற குறைந்த வருமானமுள்ள நகரப் பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும், குறிப்பிட்ட பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட பட்டியலிலிருந்து ஆங்காங்கு இரண்டு கிராம சேவையாளர் பிரிவுகள் பெறப்பட்டன. இந்த ஆய்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்கள் அங்கு காணப்பட்ட நிலைமை காரணமாக சேர்க்கப்படவில்லை.

**மாதிரி**

கிராம சேவையாளரின் இல்லப் பட்டியலை மாதிரிக் கட்டுக்கோப்பாகப் பயன்படுத்தி, அனுராதபுரம், காலி, கண்டி, நுவரெலியா, பதுளை, புத்தளம் (11 ஆய்வுப் பகுதிகள்) என்று ஆறு மாவட்டங்களில் உள்ள கிராம சேவையாளர் பிரிவு ஒவ்வொன்றிலிருந்தும், அங்குமிங்குமாக பாடசாலைப் பிள்ளைகள் உள்ள 1000 இல்லங்கள் (Households) மொத்தமாக மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டன. அங்குமிங்குமாகத் தெரிவு செய்யப்பட்ட 200 மாதிரிகளில், சமூகத்தில் நல்ல நிலையில் உள்ள இல்லங்கள் கூடுதலான விகிதமாக இருந்தன. அவர்களின் சமூக பொருளாதார நிலையின் அடிப்படையில் ஒப்பீட்டு நோக்கத்திற்காக வசதியுள்ள இல்லங்கள் நடுத்தர வகுப்பாக ஆய்வில் வகுக்கப்பட்டுள்ளன.

100 மாதிரி ஆசிரியர்களின் தெரிவானது, இரண்டு கட்ட வழிமுறையாக இடம்பெற்றது. முதலில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு பின்னர் அந்தப் பாடசாலைப் பட்டியலில் இருந்து ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் பத்து தொடக்கம் பதினைந்து ஆசிரியர்கள்

தெரிவு செய்யப்பட்டனர். சில பாடசாலைகளில் 100 ஆசிரியர்கள் இருந்தனர். கூடுதலான ஆசிரியர்கள் அங்குமிங்குமாகப் பெறப்பட்டனர். சகல சந்தர்ப்பங்களிலும், குறிப்பிட்ட அதிபரின் ஆலோசணையும், ஆதரவும் பெறப்பட்டது. ஆசிரியர்கள் பாடசாலையில், அல்லது அவர்களின் இல்லங்களில் வேறு வகையான வினாக்கொத்து மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். சில தடவைகளில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் வினாக் கொத்து நிர்வாகத்திற்கென வகுப்பறைக்கு அழைக்கப்பட்டனர்.


குறிப்பிட்ட ஆய்வுப் பகுதிகளில் உள்ள வலயக் கல்வி அலுவலகங்களில் இருந்து 100 மாதிரிக் கல்வி உத்தியோகத்தர்கள் அங்குமிங்குமாகத் தெரிவு செய்யப்பட்டனர். சிலருக்கு, வகுப்பறை அமைப்பில், விளக்கத்துடனான வினாக் கொத்து வழங்கப்பட்டது. ஏனையோருக்கு குறிப்பிட்ட தினத்தில் திருப்பி அனுப்பும்படியான வேண்டுகோளுடன் வினாக் கொத்து வழங்கப்பட்டது.

மொத்த மாதிரி 1, 200 வினாக்கொத்து நேர்காணல்களாக இருந்தபோதிலும், இல்லத்தவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் தனித்தனியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டனர். ஆனால் தேவையானவிடத்து அவர்கள் ஆய்வில் ஒன்று சேர்க்கப்பட்டனர்.

**மாதிரி அமைப்பு**

மாதிரிகளில் இல்லம் பலதரப்பட்டதாக இருந்தது. அது பெற்றோர், பராமரிப்பாளர்கள் (82%) பாடசாலை விட்டு வெளியேறியோர் (3.9%) மாணவர்களின் உறவினர்கள் (4.8%) கிராமத் தலைவர்கள் (6.9%) என்று பல்வேறு தரத்தினரைக் கொண்டிருந்தது.


வரைபடம் 2: இல்ல மாதிரிகளின் இனத்துவ விநியோகம்



100 ஆசிரியர்களில் 23 பேர் மஹியங்கனையிலும், 18 பேர் கண்டியிலும், 8 பேர் புத்தளத்திலும், 12 பேர் காலியிலும், 23 பேர் நுவரெலியாவிலும் இருப்பவர்கள் ஏனைய 16 ஆசிரியர்களும், ஒரே இடத்தில் வசிப்பவர்கள். ஆனால், குருணாகல் (1), பதுளை (5) அம்பாறை (1) மட்டக்களப்பு (1), திருகோணமலை (4), ஹம்பாந்தோட்டை (1), மொனறாகலை (2), மாத்தறை (11) ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் கற்பித்தவர்கள்.

நேர்காணப்பட்ட உத்தியோகத்தர்கள், கண்டி (29), புத்தளம் (14) நுவரெலியா (17) அனுராதபுரம் (30), காலி (10) ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் இவர்களில் ஒரு மேலதிக செயலாளர், 6 பணிப்பாளர்களும், 51 உதவிப் பணிப்பாளர்களும், 32 ஏனைய உத்தியோகத்தர்களும் உள்ளனர்.

வரைபடம் 3: இல்ல மாதிரிகளின் புவியியல் பரம்பல்




**மாதிரிக் குணாதிசயங்கள்**

1000 இல்ல மாதிரிகளில் மொத்த சனத்தொகை 4,934, சராசரி குடும்ப அளவு 4.93 மிகச் சிறிய இல்லங்களின் இரண்டு பேரும் மிகப் பெரிய இல்லத்தில் 19 பேரும் வசித்தனர். பெரிய இல்லங்களில் இரண்டு அல்லது கூடுதலான குடும்பங்கள் இருந்தன. கண்டியில் வறிய குறைந்த வருமானமுள்ள இல்லங்களில் பல குடும்பங்கள் வாழ்கின்றன. இத்தகைய சந்தர்ப்பத்தில், ஆய்வுக்கு ஒரு குடும்பமே அங்குமிங்குமாக தெரிவு செய்யப்பட்டது.

சில சந்தர்ப்பங்களில், பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர், குடும்பத் தலைவர்களாக இல்லை. பாட்டன், பாட்டி அல்லது வீட்டுக்குச் சொந்தக்காரரான மாமா அல்லது மாமி இல்லத் தலைவராக இருந்தார். மதிப்பீட்டிற்கு பெற்றோர் இல்லாதபோது, இரு விஜயங்களின் பின்னர், சிரேஷ்ட அல்லது விரும்பித் தகவல் தர முன்வந்த ஒருவர் நேர்காணப்பட்டார். சில சந்தர்ப்பங்களில் பெற்றோர் அல்லாதவர்கள் சிறுவர்களைப் பராமரித்தபோது, அவர்கள் இல்லத்தின் தலைவர்களாகக் கருதப்பட்டனர். இதனால் தகவல் வழங்கியோர் பெற்றோராகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

**பாடசாலை சிறுவர்கள்**


ஆயிரம் இல்லங்களிலும் இருந்த மொத்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை 1,800. அது ஒரு இல்லத்திற்கு 1 – 4 சிறுவர் என்று வேறுபட்டது. சில இல்லங்களில் (70% குறைந்த) ஒவ்வொன்றிலும் நான்கு பாடசாலை மாணவர்கள் இருந்தனர். ஒரு இல்லத்தின் சராசரியான பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை இரண்டாகும்.

**வகுப்பு நிலைமை**

தாழ்ந்த வகுப்புக் குடும்பங்களில் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பது போல் தோன்றினாலும், இல்லங்களின் வகுப்பு நிலைமைக்கும், பாடசாலைச் சிறுவர்களின் எண்ணிக்கைக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. பாடசாலை செல்லாத மாணவர்கள் என்று அறிவிக்கப்பட்ட 45 சிறுவர்களும், பெரும்பாலும் தாழ்ந்த- மத்திய மற்றும் தாழ்ந்த வகுப்பு இல்லங்களைச் சேர்ந்தவர்கள்.

இல்லங்கள் மூன்று தரங்களாக வகுக்கப்பட்டன - தாழ்ந்த, தாழ்ந்த-மத்தியதர, மத்தியதர வகுப்புக்கள். மின்சாரம், குடிநீர் வளம், ஒரு குளிர்சாதனப் பெட்டி, ஒரு தொலைக்காட்சி, ஒரு தொலைபேசி இவர்களின் இல்லத்தில் இருப்பதை வைத்தே இந்தத் தரங்கள் வகுக்கப்பட்டன. மாதிரி ஜனத்தொகையில் வகுப்பு வேறுபாட்டை அளவிடுவதற்கு இந்த ஐந்து வேறுபாடுகளுடனான வர்க்க அளவு சிறந்ததாகும். இதனால் வர்க்க அளவு பின்வரும் இல்லங்களை அடையாளப்படுத்தியது.

வரைபடம் 4: ஆய்வு இடங்களினால் இல்லங்களின் வகுப்பு நிலைமைகள




இல்லங்களின் மாதிரிகளில் பெரும்பாலானவை மத்தியதர வகுப்புக்களிலிருந்து பெறப்பட்டதால், மதிப்பீட்டில் ஒரு தாக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதனால், இந்தக் கண்டு பிடிப்புக்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும். பொதுவான இலங்கை ஜனத்தொகையின் பிரதிநிதித்துவம் என்ற போர்வையில் இவை அமையவில்லை.

**பெற்றோர் கல்வி**

பெற்றோரில் சுமார் 24.7% தாய்மார், 27.9% தந்தைமார் ஆகியோர் தரம் 9 அல்லது அதற்குக் குறைவான கல்வியையே பெற்றுள்ளனர். மேலும் 25.2% தாய்மார், 22.4% தந்தைமார், தரம் 11 அல்லது அதற்கும் உயர்ந்த வகுப்புக் கல்வியைப் பூர்த்தி செய்துள்ளனர். சுமார் 41.1% தந்தைமாரும், 44% தாய்மாரும் தரம் 9, 10 அல்லது 11 ஐ பூர்த்தி செய்துள்ளனர். 0.3% தந்தையாரும், 1.3% தாய்மாரும் மாத்திரமே கல்வி கற்கவில்லை.

ஏனைய இனத்துவக் குழுக்களுடன் ஒப்பிடுகையில் தமிழ், முஸ்லிம் பெற்றோரே குறைந்த கல்வியைப் பெற்றுள்ளனர். தமிழ் பெற்றோரில் சுமார் அரைவாசிப்பேர் 47.3% தாய்மாரும் 47.3% தந்தையாரும், முஸ்லிம் பெற்றோரில் 45.5% தாய்மாரும் 49% தந்தையாரும், தரம் 9 அல்லது அதற்குக் குறைவாகவே கல்வி

பெற்றுள்ளனர். முஸ்லிம் பெற்றோரில் 0.7% தாய்மாரும், தந்தைமாரில் எவரும் தரம் 13 வரை கல்வி கற்கவில்லை. தமிழ் பெற்றோரிடையே எந்த ஒரு தாயும் 0.6% தகப்பன்மாரும் தரம் 13 அல்லது அதற்கும் கூடுதலாகப் படிக்கவில்லை. தந்தையின் கல்வி மட்டம் தாயாரின் கல்வி மட்டத்துடன் குறிப்பிடத்தக்க விதத்தில் ஒத்திருந்தது.

பெற்றோரின் வகுப்பு நிலையும், கல்வி மட்டமும் அநேகமாகத் தொடர்புடையவையாகக் காணப்பட்டது. மத்தியதர வகுப்பின் தரம் 9 க்குக் குறைந்த கல்வி மட்டத்தில் 17.6% தந்தைமாரே இருந்தனர். தரம் 13 வரையில் அல்லது அதற்கும் கூடுதலாக கல்விகற்ற 79.2% தந்தைமார் மத்தியதர வகுப்பைச் சேர்ந்தவர்கள் தாய்மாரின் கல்வியைக் கவனத்திற்கு எடுக்கையில் கல்வி மட்டம், தரம் 13 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருந்த, 86.7 சதவீதமானோர் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவர்கள்.


**வேலை வாய்ப்பு**

896 இல்லங்களில் (89.6%) வீட்டுத் தலைவர் வேலை வாய்ப்புப் பெற்றிருந்தார். உயர்தரத்திலான வேலை வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கையில் (5.5%) வர்த்தகம், வியாபாரம் ஆகிய தொழில்களில் 19.8% இருந்தனர். கூடுதலானோர், இயந்திரமயமான தொழில்களில் இருக்கையில், தொழிலாளர்கள், வேலையற்றோர் 22% இருந்தனர். வகுப்பு நிலைமையும் வேலை வாய்ப்புத் தரங்களும் வெகுவாக ஒன்றையொன்று பெரிதும் சார்ந்திருந்தன.

# 4. ஆய்வின் முடிவுகள்

வீடு தோறும் மொத்த மதிப்பீடு, பொதுவாக கல்வி அமைப்பு உயர்ந்த தரத்தில் திருப்திகரமாக இருப்பதைப் புலப்படுத்தியது. வகுப்பில் தமது பிள்ளைகளின் செயற்பாட்டை வைத்தே பெற்றோர் கற்பித்தல் பற்றிய அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். வகுப்பில் முதல் 20 – 25% த்திற்குள் பிள்ளை வருமானால் பெற்றோர் கற்பித்தலை சிறந்ததாக கருதினர். ஆசிரியரின் வருகை, வீட்டுப் பாடவேலை நிர்வாகம், பாடத் திட்டம் பூர்த்தி செய்யப்படல், கற்பித்தலில் தெளிவு என்பன பெற்றோரை வழிநடத்தும் ஏனைய அம்சங்களாகும். மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட 1000 இல்லங்களில் 968 இல்லங்கள் (1756 பாடசாலைப் பிள்ளைகளை உள்ளடக்கியது.) வகுப்பறை கற்பித்தல் பற்றிய வினாவுக்கு விடையளித்தனர். இவர்களில் சுமார் 80 சதவீதமானோர் திருப்திகரம் என்று குறிப்பிட்டுள்ளனர்.

வரைபடம் 5: பாடசாலையில் பிள்ளையின் கல்வி பற்றிய பெற்றோரின் உணர்வு.




இந்தப் பொதுவான ஆக்கபூர்வத் தகவலை விடுத்து நேர்காணல்கள், கல்வியில் பல வகையான ஊழல் ஒழுங்கீனங்கள் நிலவுவதைப் புலப்படுத்தின. குறிப்பெடுப்பதை சுலபமாக்க, ஆய்வுப் பெறுபேறுகள் பின்வரும் நான்கு பிரிவுகளுக்குள் அமைக்கப்பட்டுள்ளன.

### 4.1 பாடசாலை மட்ட ஊழல்

இந்தப் பரந்த தரமான விடயங்களை உள்வாங்குவதில் பலவீனமான நிதி, நிர்வாகமும், முகாமைத்துவமும், பாடசாலைச் சொத்தை துஷ்பிரயோகம் செய்தல், ஆசிரியர்கள், தனியார் வகுப்புக்களை நடத்துதலும், வகுப்பறைக் கற்பித்தலை புறக்கணிப்பதும், ஆசிரியரின் தரமற்ற நடத்தை, தனிச்சலுகை காண்பித்தல், அதிபர்கள், உறவினர்களை தொண்டு ஆசிரியர்களாக நியமித்தல் என்பன பாடசாலை அனுமதி தொடர்பான பிரதான பிரச்சினைகளாகும்.

### 4.2 கட்டணங்களும் கொடுப்பனவுகளும்

பல்வேறு கொடுப்பனவுகள் சில கல்வி அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்பட்டவை. ஏனையவை அங்கீகாரம் பெறப்படாதவை. இவற்றை இனங்காண்பதன் மூலம் இல்லங்களுக்கான கல்விச் செலவை நிர்ணயிக்க இந்தத் தரப்பிரிவில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. உயர்ந்த சமனற்ற செலவுக்கான ஒரு காரணம் அதிபர்களுக்கும், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும், பாடசாலை அனுமதியில் தனிச் சலுகைகளும், பாடசாலை அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுதல் என்பவற்றுக்காக செலுத்தப்படும் இரகசியக் கொடுப்பனவாகும். இந்த கொடுப்பனவுகளை நிரூபிப்பது கடினமெனினும், பாடசாலையில் பிள்ளைகளை வைத்திருப்பதில் பெற்றோருக்கு இது தடங்கலாகலாம். எனவே இந்தக் கொடுப்பனவுகள் கல்வியைப் பெறுவதில் சிறுவர்களின் சமத்துவ உரிமையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

### 4.3 நிர்வாகம் தொடர்பான ஒழுங்கீன நடைமுறைகள்.

இது வலய, மாகாண, அமைச்சு மட்டங்களில் முக்கியமாக ஆசிரியர், அதிபர் இடமாற்றங்கள், நியமனங்கள், பதவி உயர்வுகள் தொடர்பாக ஒழுங்கீன நடைமுறைகள் பற்றியது. நேர்காணப்பட்டவர்கள், அனேகமாக, உயர் நிர்வாகப் பதவிகளுக்கு தராதரமற்ற ஆனால், அரசியல் தொடர்புள்ள உத்தியோகத்தர்களுக்கே பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாகக் கூறினர்.

### 4.4 ஊழலுக்கு எதிரான முறைப்பாடுகள்

ஊழல் தொடர்பான போக்குகள், பொதுவாக ஒழுங்கீன நடவடிக்கைகள், பொதுமக்கள் இவற்றை எவ்வாறு எதிர்கொள்கிறார்கள், அவர்கள் முறைப்பாடு செய்கிறார்களா? அல்லது மௌனமாக இருக்கிறார்களா என்பது இந்தத் தரத்தின் கீழ்வரும்.

## 4.1 பாடசாலை மட்ட ஊழல்

இப்பிரிவிலான கண்டுபிடிப்புகள், பாடசாலை அனுமதி போன்று சிறுவர்கள் மீதான பாதிப்பை ஏற்படுத்தும் பாரிய அளவிலான அக்கறைகள் மீது கவனம் செலுத்துகிறது. வதிவிட விதி, பாடப்புத்தகங்கள், தர உள்ளீடு மற்றும் வசதி குறைந்த மாவட்டங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கொடுக்கவென அமுல் செய்யப்பட்ட ''மாவட்ட கோட்டா" அமைப்பு எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்பன இதில் அடங்கும்.

மொத்தமாக, பெரும்பாலான இல்லங்கள் (57.1%) கல்வி அமைப்பு பொதுவாக ஊழல் நிறைந்தது என்ற கருத்தை நிராகரித்துள்ளன. அரசாங்கப் பாடசாலை அமைப்பு, அநேகமாக ஊழல் நிறைந்தது என்பதை 21.5% (ஐந்தில் ஒரு மடங்கு) இல்லங்கள் ஏற்றுக் கொண்டன. 21.4% இல்லங்கள் பக்கச்சார்பற்ற கருத்தைத் தெரிவித்தன.

1970 களுக்கு முந்திய சகாப்தத்துடன் ஒப்பிடுகையில் பாடசாலை அமைப்பு சீர் குலைந்து விட்டதா என்று கேட்கப்பட்டபொழுது, 29% இல்லங்கள் ஆம் என்றன, 30.6% ஆசிரியர்களும், 42.4% கல்வி உத்தியோகத்தர்களும், கற்பித்தல் ஒரு தொழில் என்பதில் வீழ்ச்சி கண்டுள்ளது என்று ஒப்புக் கொண்டனர்.

### 4.1.1 பாடசாலை அனுமதி

சிறுவர்களின் பாடசாலை அனுமதி, முக்கியமாக தரம் ஒன்றிற்கு மற்றும் அதில் ஊழல் இடம்பெறுவது என்பன பாடசாலை அமைப்புக்குள் அதிகம் பேசப்படும் விடயமாகும். சட்ட விரோதமாகக் கொடுப்பனவுகள் மேற்கொண்டமை அல்லது பாடசாலையில் பிள்ளைகளை அனுமதிக்க செல்வாக்கைப் பயன்படுத்தியமை போன்றன மதிப்பீட்டுக்கு உட்பட்ட பலரும் தெரிவிக்கவில்லை.

பிள்ளைகளுக்கான தரம் ஒன்றிற்கான அனுமதி பற்றிப் பெற்றோர் கவனிக்கையில் பாடசாலைகளின் பிரசித்தம் முக்கிய பங்கு வகிக்கிறது. பரீட்சைப் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக பாடசாலையின் பிரசித்தம் (உயர்ந்த தரத்திலான பாடசாலையா?) பாடவிதானத்துக்கு புறம்பான நடவடிக்கைகள், விளையாட்டு வசதிகள் மற்றும் ஆங்கிலம் கற்பித்தல் என்பனவற்றை தமது பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி கோரும்போது மத்தியதர இல்லங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டன. பல பெற்றோர் தமது பிள்ளைகள் பரீட்சைகளில் சித்தியடையாவிட்டாலும் சிறந்த பாடசாலையின் பழைய மாணவர்களாக இருப்பின், தனியார் துறையில் வேலைவாய்ப்பைப் பெற முடியும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர்.

சிறந்த பாடசாலைகளுக்கான கிராக்கி பெரும் போட்டிக்கு வழிவகுத்தது. இது பாடசாலைகளிடையே வேறுபாடுகளை உருவாக்கியது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம், கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை என்பனவற்றில் மாணவர்களின் செயற்பாட்டின் மூலம் பிரதிபலித்தது, ஆய்வின் பிரகாரம், அதிகரித்த போட்டி ஊழலுக்கு வழிவகுத்தது என்று 50% அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர். பாடசாலை அனுமதிகளுக்கான நடைமுறையைத் தெரியப்படுத்தும் கல்வி அமைச்சின் சுற்று நிருபம் 2006/20 இல் வசதிக்கட்டணம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கான கட்டணம் தவிர்ந்த வேறு கட்டணம் அறவிடப்படுவதை தடை செய்யும் பிரிவு 1.5, என்பன மீறப்பட்டதை இது சுட்டிக் காட்டுகிறது. சுற்று நிருபத்தில், ஆகக்கூடிய அல்லது ஆகக்குறைந்த கட்டண எல்லை நிர்ணயிக்கப்படாதிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

#### 4.1.1.1 வதிவிட விதிமுறைத் துஷ்பிரயோகம் செய்தல்

பாடசாலைக்கு அண்மையில் வசிப்பது ஒரு முக்கிய அம்சம் என்ற வகையில், தரம் ஒன்றிக்கான அனுமதி நடைமுறை பிள்ளைகள் குறிப்பிட்ட விதிமுறையை பூர்த்தி செய்யும் தேவையைக் கொண்டுள்ளது. இது எப்படியோ ஊழலுக்கு வழிவகுத்துள்ளது.

குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே சில சமயங்களில் பிள்ளை பிறந்தவுடனேயே பாடசாலை அனுமதிக்கு பல பெற்றோர் ஏற்பாடுகள் செய்வதை இவ்வாய்வானது புலப்படுத்தியுள்ளது. பாடசாலைக்கு அண்மையில் வீட்டைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது வாடகைக்கு எடுத்தல் என்பது ஒரு முயற்சியாக உள்ளது. பல பெற்றோர் குறுக்குவழிகளைப் பயன்படுத்துகின்றனர். இத்தகைய செயற்பாடுகள் ஊழலுக்கான வழிமுறையாகக் காணப்படுகிறது. அநேகமாக, குடும்பம் பாடசாலைக்கு அண்மையில் வசிக்கிறதா என்று கிராமசேவகரின் அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படாத போதிலும், வதிவிடம் பற்றி உண்மை நிலையைப் பார்க்கும்படி கிராமசேவகர்களை அதிபர்கள் கேட்பதுண்டு. இது சிலவேளைகளில், பெற்றோர் சான்றிதழை பெற முற்படாது விலை கொடுத்து வாங்குவதற்கு வழியமைத்துள்ளது.

வதிவிட விதியானது, வாடகைக்கு அல்லது குத்தகைக்கு எடுக்கப்படும் வீடுகளில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையிலான சிறுவர்களையும், ஆங்காங்கு சிதறி வாழும் வறிய குடும்பச் சிறுவர்களையும் பாதித்துள்ளதாக 90% ஆசிரியர்களும், 95% உத்தியோகத்தர்களும் ஒப்புக் கொள்கின்றனர். முக்கியமாக கண்டியின் பிரசித்த பாடசாலைகளுக்கு சமீபமாக பாரம்பரியமான ஆலயங்களுக்குச்

சொந்தமான காணியில், பல குடும்பங்கள் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வசித்து வருகின்றன. எனினும், வதிவிடத்தை நிரூபிக்க தகுந்த ஆவணங்கள் இல்லை என்ற அடிப்படையில் இவர்கள் அருகில் உள்ள பிரசித்த பாடசாலைகளுக்கு அனுப்பிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வதிவிடத் தேவை பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதாகக் 80% ஆசிரியர்களும் 81% உத்தியோகத்தர்களும் கருதுகின்றனர். 60 – 70% ஆசிரியர்கள் இது ஊழலுக்கு வழிவகுக்கும் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

பாடசாலை அனுமதித் திட்டத்தின் கீழ் ஒரு பிள்ளைக்கு வழங்கப்படும் புள்ளிகள் குறித்தும், சில பெற்றோர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

#### 4.1.1.2 தரகர்களின் வகிபாகம்

சில பகுதிகளில் தரகர்கள் கட்டணம் அறவிட்டுக் கொண்டு தேவையான ஆவணங்களைத் தயார் செய்வதுடன் பாடசாலை அனுமதிக்கான உத்தரவாதத்தையும் வழங்குகின்றனர். அதிபர்கள், அனுமதிக்கான நேர்காணல் சபை உத்தியோத்தர்கள் ஆகியோருடன் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பதாக கருதப்படும் இந்தத் தரகர்கள், பெருந்தொகைப் பணத்தை சில சமயங்களில் பல லட்சம் ரூபாக்களை, அறவிட்டுள்ளனர். இவர்களின் வகிபாகம் பற்றி ஏனைய பகுதிகளைப் பார்க்கிலும் காலியில் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தப் பகுதியில் ஒரு பிரசித்தமான பாடசாலையில் எனது மகளை அனுமதிப்பதற்காக ஒரு தரகருக்கு நான் 80,000 ரூபாவைக் கொடுத்த போதிலும் அது சாத்தியமாகவில்லை. தரகர் சிறு தவணைக் கட்டணமாக அந்தப் பணத்தை மீளச் செலுத்தி வருகிறார்.**

**மத்திய மலைப் பகுதியைச் சேர்ந்த ஒரு பெற்றோர்**

தொடர்ந்து அந்தரங்கமாகப் பேணப்படும் என்று உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும், பாடசாலை அனுமதி பற்றிய கேள்விக்குப் பதில் அளிப்பதில், மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டோர், தயக்கம் காட்டுவது தெரிய வந்துள்ளது. அவர்களின் சிறுவர்கள் ஏற்கெனவே பாடசாலையில் கல்வி கற்பதால் அவர்கள் பழிவாங்கப்படுவார்களோ என்று பயத்தின் காரணமாக பதிலளிக்க விரும்பவில்லை.

#### 4.1.1.3 பணமும் செல்வாக்கும்


சில இல்லங்கள் (8.1% அல்லது 81 இல்லங்கள்) அதிபர்களுக்கு இலஞ்சம் கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளன. இவர்களில் 38% கண்டியில் இருந்தும், 18.5% அனுராதபுரத்தில் இருந்துமாகும். ஏனைய குறிப்பிட்டத்தக்க இடங்கள், காலி/ஹிக்கடுவை, நுவரெலியா என்பனவாகும். அதிபர்களுக்கு இலஞ்சம் வழங்கிய சுமார் 57% இல்லங்கள் மத்திய தர வகுப்பைச் சேர்ந்தவை. 14% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் கூட தமது பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை அதிபர்களுக்கும் /பாடசாலைகளுக்கும் வழங்கியுள்ளனர்.

> **பிரசித்த பாடசாலைகளில் அதிபர்கள், எவ்வாறு தனிப்பட்ட வாகனங்களை வைத்துக் கொண்டும், ஆடம்பர வீடுகளில் வாழ்ந்து கொண்டும் இருக்கிறார்கள்? நாமெல்லோரும் ஒரே அளவு சம்பளத்தைத்தான் பெறுகிறோம்.**
>
> **கஷ்டப்பகுதியில் உள்ள பாடசாலை அதிபர்.**

பாடசாலை அனுமதி தொடர்பாக அதிபர்களுக்கு இலஞ்சம் கொடுத்த குடும்பம் பற்றித் தெரியுமா என்று கேட்கப்பட்டபொழுது, 36% ஆசிரியர்கள், 34% உத்தியோகத்தர்களும் ஆம் என்று பதிலளித்தனர். பாடசாலைகளுக்கு சிறுவர்களை அனுமதிப்பதற்கு அதிபர்கள் வழமையாக இலஞ்சம் வாங்குகின்றனர் என்பதே 89% ஆசிரியர்களினதும் 81% உத்தியோகத்தர்களினதும் கருத்தாகும். 90% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் இதனைக் கண்டித்திருப்பது சுவாரஸ்யமான விடயமாகும்.


சுமார் 155 இல்லங்கள் (15.5%) தாம் பெருந்தொகைப் பணத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கியதாகவும், சுமார் 5% தாம் அரசியல்வாதிகளைத் தொடர்பு கொண்டதாகவும், 7% உயர் கல்வி அதிகாரிகளை நாடியதாகவும் தெரிவித்தனர். பெற்றோர் அரசியல்வாதிகளுடன் தொடர்பு கொண்ட சம்பவங்கள் பற்றி தமக்குத் தெரிந்திருந்ததாக 19% ஆசிரியர்களும், 41% உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர். பாடசாலைகளில் சிறுவர்களை அனுமதிப்பதற்கு தெரிந்த குடும்பங்களுக்கும், உறவினர்களுக்கும் கல்வி உத்தியோகத்தர்கள் உதவுவதாக 98% ஆசிரியர்களும், 89% உத்தியோகத்தர்களும் அறிவித்துள்ளனர்.

வரைபடம் 6: உங்கள் பிள்ளை பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டபோது, இவற்றை நீங்கள் செய்தீர்களா/ எதிர்கொள்ள நேர்ந்ததா? (கேள்வி 3.9)




பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதற்கு பெற்றோர் பாடசாலைகளுக்கு அநேகமான அன்பளிப்புக்களை வழங்கினர். சிலர் அந்தக் கொடுப்பனவுகளுக்கும் அப்பால் சென்று வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்தனர் அல்லது பாடசாலைக்குத் தளபாடங்களை கொள்வனவு செய்து கொடுத்தனர். இவை ஊழல் நடவடிக்கைகளா என்று கேட்டபோது, 21.4% ஆசிரியர்களும், 23% உத்தியோகத்தர்களும் இவ்வாறு நினைக்கவில்லை. ஆனால், பாடசாலைகளை மேம்படுத்தத் ''தாமாக விரும்பி வழங்கிய அன்பளிப்புகள்'' என்றே கருதினார்கள். எனினும், எஞ்சிய 78.6% ஆசிரியர்களும், 77% உத்தியோகத்தர்களும், இந்த நடைமுறைகள், ஊழலை சிறிது புலப்படுத்துவதாக ஒப்புக் கொண்டனர்.

வரைபடம் 7 : பாடசாலை அனுமதி (கேள்வி 2.0)



ஆய்வுக்குட்பட்ட பலரும் குறிப்பிட்டதுபோன்று, பாடசாலை அனுமதிக்கு "தகுந்த" திட்டம் இல்லாமை பல்வேறு வகையான ஊழலுக்கான காரணமாக உள்ளது. 2008/21 சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டபடி புதிய அனுமதி நடைமுறை, பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று 80-85% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் கருத்துகையில், பாடசாலைகளுக்கு அண்மையில் வசிப்பவர்களுக்கும், பாடசாலைப் பழைய மாணவர்களுக்கும், தமது பிள்ளைகளை அனுமதிப்பதில் இது உதவவில்லை என்று பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

**பாடசாலைக்கு சீமெந்து பொதிகளை வழங்கிய பெற்றோரின் பிள்ளைகளுக்கு அனுமதியின்போது மேலதிக புள்ளிகள் வழங்கப்பட்டன.**

**ஒரு தாயுடனான நேர்காணல்.**

அனுமதி நடைமுறையில் உள்ள பிரச்சினைகளால், சில பிள்ளைகள் பாடசாலை நேரத்தை சில சமயம் ஓராண்டு வரை இழந்தனர். சுமார் 8% ஆசிரியர்களும் 22% உத்தியோகத்தர்களும் இத்தகைய பிள்ளைகள் பற்றி அறிந்திருப்பதாகத் தெரிவித்தனர்.

அனுமதி விதிமுறையில் குறைபாடு, பிரசித்த பாடசாலைகளுக்கான அனுமதியில் தீவிர போட்டி என்பனவற்றினாலும் பாடசாலை அனுமதியில் ஒழுங்கீன நடவடிக்கைகள் இருப்பது தெரிகிறது. இது சிறுவர்கள் கல்வியைப் பெறுவதில் மாத்திரமல்லாது சமத்துவத்திலும், பாதிப்பை ஏற்படுத்தியது. காரணம் வசதியான பெற்றோர், பாடசாலைகளில் தம் பிள்ளைகளை சேர்ப்பதற்கு இலஞ்சம் வழங்கவும், அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தவும் முடிந்த நிலையில் ஏனையோர் இதனால் பாதிக்கப்பட்டனர்.

**கல்விப் பொதுத்தராதர சாதாரணம் சித்தியடைந்த என் மருமகன், தெற்கில் ஒரு பாடசாலையில் அனுமதி பெற முயன்றபோது அதிபர் 75,000 ரூபா கேட்டார். குடும்பத்தினரிடம் அவ்வளவு பணம் இல்லை என்று சொன்னதும், மாகாணப் பணிப்பாளரிடமிருந்து கடிதம் கொண்டுவரும்படி கேட்கப்பட்டது. ஆனால், அதனைக் கொடுத்ததும், வகுப்பறை ஒன்றைக் கட்டுவதற்கு மீண்டும் பணம் கோரப்பட்டது. வகுப்பறையைக் கட்டித் தருதல் அல்லது பணத்தைச் செலுத்துதல் என்பதே கடைசிக் கோரிக்கையாகும். இன்னமும் விவகாரம் தீர்க்கப்படாது மாணவன் பாடசாலையில் அனுமதிக்கப்படவில்லை.**

**கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள்.**


**4.1.2 பாடப் புத்தகங்கள்.**

விநியோகத்தில் தாமதமும், தரம் குறைந்த பாடப்புத்தகங்களும், ஊழல் என்று வகுக்கப்பட முடியாவிட்டாலும், இந்தப் பிரச்சினைகள் அமைப்புத் திறமையின்மையையும், சரியான திட்டமிடல், மேற்பார்வை போன்றன இல்லாதமையையும் காண்பிக்கின்றன. இலங்கையில், அரசாங்கம் பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களையும், சீருடைகளையும் வழங்குகிறது.

இல்லங்களில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில், 96.7% பிள்ளைகளின் காப்பாளர்கள் (1,741) இந்த விடயம் தொடர்பாக பதில் அளித்தனர். 6.2% பாடப்புத்தகங்கள் கிடைக்கவில்லை என்றும், 23.3% நேரகாலத்தில் அவை கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

95% கூடுதலான ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும், பாடப்புத்தக விநியோகத்தில் தாமதம் இருப்பதாகவும் அது கல்வியைப் பாதித்ததாகவும் கூறுகையில் 58% ஆசிரியர்களும், 56% உத்தியோகத்தர்களும் சீரற்ற போக்குவரத்து ஏற்பாடுகளே காரணம் என்று குற்றம் சாட்டினர்.

வரைபடம் 8: இந்தப் பாடசாலை ஆண்டில் மாணவர் பாடப்புத்தகங்களை நேர காலத்தில் பெற்றனரா? (கேள்வி 3.1)



நுவரெலியா, ஹட்டன், கண்டி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த சிறு எண்ணிக்கையிலான மாணவர்களே தாம் பாடப் புத்தகங்களுக்கு பணம் செலுத்த வேண்டியிருந்ததாகக் கூறினார். பாடப்புத்தக கொள்வனவு அல்லது பிரதி எடுத்தல் தொடர்பான கொடுப்பனவு பற்றிய மதிப்பீட்டில், 2008 இல் ஒவ்வொரு மாணவரும், மாதாந்தம் சராசரி 525 ரூபாவை செலவிட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

பாடப்புத்தகங்கள் இல்லாமை, அல்லது அவற்றை விலைக்கு கொள்வனவு செய்தல் என்பனவற்றால் சிறிய எண்ணிக்கையிலான மாணவர்களே பாதிக்கப்பட்ட போதிலும், விநியோகத்தில் தாமதம், கல்வித் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 4.1.3 தர உள்ளீடு

தர உள்ளீடுகளுக்கான மானியம் என்பது பெற்றோருக்கு வலுவைச் சுமத்தாமல், வகுப்பறையில் செயல் முறைகளுக்கான உபகரணங்கள், மேலதிக கற்பித்தல் உபகரணங்கள், போன்ற நூல்கள் தவிர்ந்த ஏனையவற்றைக் கொள்வனவு செய்வதற்காகவே வழங்கப்படுகிறது. பல சுற்று நிருபங்களும், ஒரு கையேடும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வலய, மாகாண மட்டங்களில் அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தர உள்ளீடுகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து பல பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த முயற்சிகளின் விளைவாக இல்லங்களில் கூடுதலான சதவீதமானவை தர உள்ளீடு பற்றி தெரிவித்துள்ளன. இல்லத்தவர்களிடம் ஆசிரியர்கள், அதிபர்கள் மூலம் தர உள்ளீடுகள் துஷ்பிரயோகம் செய்யும் சாத்தியம் உள்ளதா என்று கேட்கப்பட்டபோது 20% ஆனவர்களுக்கு மாத்திரமே அது இருப்பது பற்றித் தெரிந்திருக்கவில்லை. 35% இல்லங்கள் மாத்திரமே, இந்த மானியங்கள் தவறாக முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கும் சாத்தியம் பற்றிக் குறிப்பிட்டன.

**பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் தீவிர உறுப்பினர் ஒருவர், தனக்கு தர உள்ளீடுகள் பற்றி தெரியாது எனக் கூறினார். பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொருளாளர், பெற்றோரிலிருந்தே வழமையாக நியமிக்கப்படுகிறார். (மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட சமயம்) அப்பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் நியமிக்கப்பட்டிருந்தார். கடந்த பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில், நான் கணக்குகள் பற்றி பல வினாக்களை எழுப்ப விரும்பியபோதிலும், தந்திரமான முறையில் வரவு செலவுத் திட்டத்தை, இந்த அரசியல்வாதி விரைவில் அங்கீகரிக்கச் செய்ததில் கேள்வி கேட்க நான் அனுமதிக்கப்படவில்லை. ஆசிரியராக இருந்த உதவிப் பொருளாளர், மூலப் பற்றுச் சீட்டுக்களைத் தொலைத்து விட்டதாகக் காரணம் காட்டி பாடசாலைக்கு நான் கொள்வனவு செய்த உபகரணங்களுக்கு புதிய பற்றுச் சீட்டுக்களைப் பெறுவதற்கு என்னிடம் பல தடவைகள் வந்துள்ளார். தர உள்ளீடுகளுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை என்னால் உணர முடிந்தது. அடுத்த பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் இவை பற்றி நான் விசாரிப்பேன்**

**ஒரு பெற்றோர்**


தொண்ணூற்றெட்டுச் சதவீத ஆசிரியர்களும், 91% உத்தியோகத்தர்களும், தர உள்ளீடுகளில் சில வகையான விரயம் இருப்பதாகக் கூறினார். 94% ஆசிரியர்களும், 98% உத்தியோகத்தர்களும், அவற்றின் பாவனை பற்றி பல பாடசாலைகள் தெளிவாகத் தெரிந்திருக்கவில்லை. அதனால், முகாமைத்துவ ஒழுங்கீனம் காணப்படுவதாகவும் ஒப்புக் கொண்டனர். முக்கியமாக பெருந்தோட்டத்திலும், பின்தங்கிய கிராமியப் பாடசாலைகளிலும், தர உள்ளீடுகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக 89% ஆசிரியர்களும், 86% உத்தியோகத்தர்களும் கருதினார்கள்.

**கல்வி அமைச்சின் வழிகாட்டல்கள் இருந்தபோதிலும் அதிபர்கள் நிதிப் பிரமாணங்களையிட்டு அச்சம் கொண்டிருப்பதால், ஒதுக்கப்பட்ட பணமானது உபயோகிக்கப்படாமல், தர உள்ளீடுகள் விரயமாகிவிடுகிறது. பல சந்தர்ப்பங்களில் அதிபர்களின் அறியாமை அல்லது அலட்சியம் காரணமாக பிரச்சினைகள் எழுந்துள்ளன.**

**போலிப் பற்றுச்சீட்டுக்கள் வழங்குவதன் மூலம், ஆசிரியர்களும், அதிபர்களும் துஷ்பிரயோகம் செய்வதால் தர உள்ளீடுகளினால் மாணவர்கள் நன்மை அடைவதில்லை. இந்தப் பாடசாலைகள், வகுப்பில் கையிருப்பில் வைப்பதற்கென்று தவணை ஆரம்பத்தில், பென்சில் போன்ற உபகரணங்களைக் கொண்டு வருமாறு மாணவர்களை கேட்கின்றன. ஆனால் இதில் சிறிய அளவே மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. எஞ்சிய கையிருப்புக்கு என்ன நடக்கிறது என்று எமக்குத் தெரியவில்லை.**

**ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்**

வரைபடம் 9: தர உள்ளீடுகள் (கேள்வி 25.0)



தர உள்ளீடுகள் பயன்படுத்தப்படாமை, தர உள்ளீட்டு மானியங்களை தவறாகப் பயன்படுத்தல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல், பாடசாலை அபிவிருத்திச் சங்க கூட்டங்களில் இந்தக் கணக்குகளை சமர்ப்பிக்காமை, தர உள்ளீடுகள் பற்றி பெற்றோருக்கு அறிவுறுத்தாமை என்பன அதிபர்கள், ஆசிரியர்களைப் பொறுத்தவரை ஊழல் நடவடிக்கையாகும். இதுவும், கல்வியின் தரம் பற்றிய வினாக்களை எழுப்பியுள்ளது.

### 4.1.4 ஆண்டு - 5 உபகாரப் பணம்

அடிக்கடி குறிப்பிடப்படாவிடினும், ஏழைப் பிள்ளைகளுக்கு நேரகாலத்தில் ஆண்டு-5 உபகாரப் பணம் வழங்கப்படாமை என்பதும் ஊழலாகவே கருதப்படுகிறது.

### 4.1.5 மாணவர்களுக்கான கற்கை விடுமுறை

அநேகமான பாடசாலைகள், முக்கியமாக கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர் தரம் வகுப்புக்களில் கற்கும் மாணவர்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்படுகிறது. பரீட்சைகள் நடக்கவிருக்கும் இரண்டாவது ஆண்டு முடிவில், சில சமயங்களில் மூன்று மாதங்களுக்கு மேலாகவும் இது வழங்கப்படுகிறது. இது கல்வி அமைச்சின் 2006/45 சுற்று நிருபத்திற்கு முரணானது.

சிரேஷ்ட கல்வி அமைச்சு அதிகாரி ஒருவருடனான நேர்காணலின் போது தவணைக் கடைசித் தினம் வரை மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்பட வேண்டும் என்றும் இந்த லீவு வழங்கப்படுமாயின் பரீட்சை எழுதுவதற்கு 80% வருகை தேவையை பூர்த்தி செய்வது கஷ்டம் என்றும் சுட்டிக்காட்டினார். எந்த ஒரு பாடசாலையாவது கற்கை விடுமுறையில் மாணவர்களை அனுப்புமானால், அது விதிமுறைகளை பாரதூரமாக மீறுவதுடன், ஊழல் நடவடிக்கையுமாகும் என்றும் அவர் கருதுகிறார்.

**மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதுவதற்கு முன்னதாக மூன்று மாதங்களுக்கு கற்கை விடுமுறை வழங்கப்படுகிறது. ஆசிரியர்கள் என்ன செய்கிறார்கள்? அநேகமாக அவர்கள் தனியார் வகுப்புக்களை நடத்துகிறார்கள். பல ஆசிரியர்கள் காலையில் தம்மிடம் பயிலும் அதே மாணவர்களுக்கு பிற்பகலில் தனியார் வகுப்புகளை நடத்துகிறார்கள். இது கோட்பாடுகளை மீறுவதாகும். இது ஒரு வகை ஊழல் நடவடிக்கையே.**

FGD யில் ஒரு சமூக அமைப்பு

கல்விப் பொதுத் தராதர சாதாரணம், கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஒரு மாதம் தொடக்கம் மூன்று மாத கால கற்கை விடுமுறையைத் தமது பாடசாலைகள் வழங்குவதாக, சுமார் 35% ஆசிரியர்கள் கூறுகின்றனர். 25% உத்தியோகத்தர்கள் இந்த ஒழுங்கீனம் பற்றி அறிந்திருந்தனர். ஆனால், இதைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கற்கை விடுமுறையில் இருக்கும் மாணவர்களிடம் ஆசிரியர்கள் கட்டணம் பெற்று தனியார் வகுப்பு நடத்துவதாக சிவில் சமூக அமைப்பு ஒன்று குறிப்பிட்டது.

### 4.1.6 பல்கலைக்கழக அனுமதிக்காக மாவட்ட கோட்டா அமைப்புத் துஷ்பிரயோகம்.

குறைந்த வசதிகளுடையதாகக் கருதப்படும் இரண்டு மாவட்டங்களான நுவரெலியா மற்றும் மொனறாகல ஆகியவற்றிலிருந்து கல்விப் பொதுத் தராதரப் உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அவர்களின் புள்ளிகள் பல்கலைக்கழக அனுமதிக்கென கவனிக்கப்படுகையில் விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றன.

கொழும்பு, காலி அல்லது கண்டி போன்ற நிறைந்த வசதியுள்ள மாவட்டங்களில் கற்கும் மணவர்கள் பரீட்சை எழுத அங்கு வருகிறார்கள் என்று ஆய்வானது புலப்படுத்துகிறது. இந்த மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இத்தகைய மாணவர்களுக்கு இடம் அளிப்பதில் அதிபர்களும், உத்தியோகத்தர்களும் இலஞ்சம் பெறுவதாக குற்றஞ் சாட்டப்படுவதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.

**இந்த அம்சத்தை ஆய்வு செய்த உத்தியோகத்தர் ஒருவர், குறிப்பிட்ட மாவட்டத்திலிருந்து கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் அநேகமாக வேறு மாவட்டங்களை வதிவிடமாகக் கொண்டவர்கள் என்று கண்டறிந்தார். இவர்களில் சிங்கள தமிழ் மாணவர்கள் இருந்தனர். சிலர் அகதிகள் என்ற போர்வையில் வந்தவர்களாவர். மாவட்டத்தின் பல பாடசாலைகளில் விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் இல்லையாதலால், மாவட்டத்தில் அல்லது வெளியே தனியார் வகுப்புகளுக்குச் செல்வதற்காக மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மாணவருக்கு 80% பாடசாலை வருகை தேவைப்படுவதால், ஆசிரியர்கள் அவர்களுடன் சேர்ந்து அவர்கள் வருகை தந்ததாக பதிவு செய்து விடுகின்றனர்.**

**FGD யில் மாகாண உத்தியோகத்தர்கள்**

கொழும்பு, கண்டி மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த செல்வந்தப் பெற்றோர் நுவரெலியா, மொனறாகலை மாவட்டங்களில் காணி, வீடு என்பவற்றைக் கொள்வனவு செய்து, தமது பிள்ளைகள் கல்வித் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் சித்தியெய்தியதும், நல்ல விலைக்கு அனேகமாகத் தம்மைப் போன்ற தேவை ஏற்பட்ட வேறு பெற்றோருக்கு விற்று விடுவதாக மதிப்பீடு புலப்படுத்துகிறது. இந்த தேவை கருதியே அந்த மாவட்டங்களில் வீடுகள் விலைக்கு அல்லது நீண்ட காலக் குத்தகைக்கு இருப்பதாக பத்திரிகைகளில் விளம்பரங்கள் வருகின்றன.

**கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாவது தடவை தோற்றுவதற்கு முன்னதாக பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், வளர்ச்சியடைந்த மாவட்டங்களான கண்டி அல்லது மாத்தளைக்கு தனியார் வகுப்புகளுக்குச் செல்கின்றனர். ஆனால், தமது மாவட்டங்களிலிருந்தே பரீட்சை எழுதுகின்றனர். இது அவர்களுக்கு பரீட்சையில் போட்டி ரீதியாக ஒரு சாதக நிலையை ஏற்படுத்துகிறது. தாம் அங்கு வசிப்பதாக ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்காக மக்கள் வறிய பகுதிகளில் வீடுகளை வாடகைக்கு அமர்த்திய சந்தர்ப்பங்கள் எமக்குத் தெரியும். இது திட்டமிடப்பட்ட குற்றச் செயலாகும். ஏழைகளுக்கு வழங்கப்படும் சலுகையை இவர்கள் அனுபவிக்கிறார்கள்.**

*FGD* **இல் அரசசார்பற்ற அமைப்பு**

**வளர்ச்சியடைந்த மாவட்டங்களில் உள்ள மக்கள், தாம் அங்கு வசிப்பவர்களாக இனம் காண்பித்து சியம்பலாண்டுவ, மொனராகலை ஆகிய இடங்களில் வாடகைக்கு வீடுகளை அமர்த்தி பிள்ளைகளை அங்குள்ள பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். உண்மையில் அவர்கள் கண்டி, மாத்தறை மற்றும் கொழும்புப் பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள், இறுதியாக அவர்கள் மொறாகல மாவட்டத்தில் இருந்தே பரீட்சை எழுதுகிறார்கள். மொனறாகலை பகுதியில் இரண்டாவது தடவையாக கல்விப் பொதுத் தராதர உயர் தர வகுப்புப் பரீட்சை எழுதுவோர் கண்டி, காலி, மாத்தளைக்கு வகுப்புக்கு வருகின்றார்கள். மொனறாகலை மாவட்டத்திலுள்ள சில பின்தங்கிய பாடசாலைகளிலே உள்ள ஆசிரியர்களும், அதிபர்களும் இது தொடர்பாக குற்றம் சுமத்தப்பட வேண்டியவர்கள். அவர்கள் கல்வி அமைச்சை திருப்திப்படுத்த முயற்சி செய்வதுடன் தமது பாடசாலையில் தேவையான எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பதாகவும், கல்விப் பொதுத்தாராதர சாதாரண உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் கிடைப்பதாகவும் காண்பிக்க அவர்கள் முயற்சி செய்கிறார்கள். பிள்ளைகளின் பெற்றோர் இந்த ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் பல பரிசுகளையும் சன்மானங்களையும் வழங்குகிறார்கள். இது ஊழல் நடவடிக்கையாகும்.**

**சமூகத் தலைவர்**

கோட்டா அமைப்பை இவ்வாறு துஷ்பிரயோகம் செய்தல், கஷ்டமான சூழலில் கல்வி கற்கும் மாணவர்கள் மூன்றாம் நிலைக் கல்வியை பெறுவதைத் தடுக்கின்றது.

**4.1.7 ஆசிரியர் நடத்தையும் தனிச்சலுகை காண்பித்தலும்.**

ஆசியர்கள் பாடத் திட்டங்களை தயாரிக்கும் தேவையுள்ளதுடன் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் இதனை அங்கீகரித்துள்ளனர். எனினும், பல ஆசிரியர்கள் இதனைக் கடைப்பிடிப்பதில்லை என்று 61.6% ஆசிரியர்களும், 82% உத்தியோகத்தர்களும் தெரிவித்துள்ளனர். அனேகமாக ஆசிரியர்கள் தயார் செய்யாமலேயே தமது வகுப்புக்களுக்கு செல்வதாக ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கருதுகின்றனர். பாடத் திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது குறித்து எழுபத்தைந்து சதவீத பெற்றோர் திருப்தி தெரிவித்துள்ளமை, கற்பித்தல் திட்டத்தின் வெற்றிக்கு அறிகுறி என்று ஏற்றுக் கொள்ளப்படலாகாது. தகுந்த வழிமுறைகள் போன்ற ஏனைய கற்பித்தல் அம்சங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளது.

இதேவேளையில், பரிசு வழங்கல், மாணவர் தலைவர், விசேட நிகழ்வுகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்தல் என்பனவற்றில் தனிச் சலுகைகள் காண்பிக்கப்படுவதாக பலரும் தெரிவித்துள்ளனர். மாணவத் தலைவர்கள், ஆசிரியரின் தனிச் சலுகை உள்ளவர்களில் இருந்தா தெரிவு செய்யப்படுகிறார்கள் என்று வினவியதற்கு அவ்வாறுதான் என்று 68% ஆசிரியர்களும், 87% உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொண்டனர். பரிசளிப்பு வைபவத்தில் திறமை கருதாது ஆசிரியர் தெரிவு செய்த மாணவர்களுக்கே பரிசு வழங்கப்படுகின்றன என்பது 68% ஆசிரியர்களினதும், 79% உத்தியோகத்தர்களினதும் அபிப்பிராயமாகும். பரிசு பெறுவோர், கிரமமான தவணைப் பரீட்சை அடிப்படையில் அல்லாது, சில சமயங்களில் விசேட பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவது ஆய்விலிருந்து புலனாகிறது.

**பெற்றோர், தமது பிள்ளைகளுக்கு, மாணவத் தலைமைப் பதவி மற்றும் பரிசுகள் வழங்குவதற்குமாக ஆசிரியர்களைக் கவர்வதற்கு அன்பளிப்புகளை அவர்களுக்கு வழங்குகின்றனர். ஒரு வைத்தியரின் மகன் ஆங்கிலத்திற்கான பரிசை இந்த விதத்தில் பெற்றுக் கொண்டமை எல்லோருக்கும் தெரிந்ததே. மாணவத் தலைவர்களை தெரிவு செய்கையில் ஆசிரியர்களும் வாக்களிக்கின்றன. அதில் தனிச் சலுகை உண்டு. ஆங்கில தினம் அல்லது விழாக்கள் இடம்பெறுகையில், வைத்தியர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்கி, பெற்றோரின் அந்தஸ்து அடிப்படையிலேயே சிறுவர்கள் தெரிவு செய்யப்படுகின்றன.**

**தாயாருடனான கலந்துரையாடல்**

மாணவர்களுக்கு வழங்கப்படாமை அல்லது தாமதிக்கப்பட்டமை போன்ற சந்தர்ப்பங்கள் இருந்ததாக சுமார் 65% ஆசிரியர்கள், 74% உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர். சுமார் 30-35% இல்லங்கள், இத்தகைய ஒழுங்கீனங்கள் பற்றித் தெரிவித்திருந்தனர். பண்புசார், நேர்காணல்கள் பற்றிப் பேசப்படுகையில் மாணவர்களுக்கு பரிசுகளும், பதவிகளும் வழங்குவதில், ஒழுங்கீனங்கள் இருந்ததுதான் என்று கருத்து வெளியிடப்பட்டது.

பாடசாலைகளில் முழுதாக தாமே கற்பிக்காமல் ஆசிரியர்கள் மாணவர் பங்கேற்றலையும், பெற வேண்டுமென்ற புதிய கல்வி அமைப்பானது ஆசிரியர்கள் பாடத்தயாரிப்பை குறைத்து கல்வியின் தரத்தில் பிரதான தாக்கத்தை ஏற்படுத்தியதாக ஆய்வு புலப்படுத்துகிறது. முக்கியமாக உண்மையாகவும், நேர்மையாகவும், உயர் தார்மீக தரங்களைக் கொண்டு முன்மாதிரியாக இருக்க வேண்டிய ஆசிரியர்கள், தனிச் சலுகை காண்பிப்பது, எதுவும் ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று நம்ப இடமளிக்கும் வகையில் சிறுவர்களின் மனதில் நீண்ட காலத் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## 4.2 கட்டணங்களும், கொடுப்பனவுகளும்

இலங்கையில் பெரிதும் பெருமையாகப் பேசப்படும் இலவசக் கல்வி அமைப்பின் கீழ் பிள்ளைகள் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரை பாடசாலை செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கல்வி அமைச்சினால் விதிக்கப்படும் கட்டணங்களுக்கு மேலதிகமாக கல்வித்துறையில் மறைந்திருக்கும் செலவு பற்றி இந்தப் பகுதியில் ஆராயப்படுகிறது. கட்டணம் என்ற தலைப்பின் கீழ் ஊழல்நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு முரண்பாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

கல்வி அமைச்சினால் ஆகக்கூடிய எல்லை நிர்ணயிக்கப்படாததால், அனுமதிக் கட்டணமாக ஒரு மாணவர் எவ்வளவு செலுத்த வேண்டுமென்பதையிட்டு, ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் கருத்து வேறுபட்டுள்ளது. வசதிக்கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கக் கட்டணம் தவிர்ந்த வேறு கட்டணம் எதுவும் பெற்றோரிடமிருந்து அறவிடப்படலாகாது என்று 2006/20 சுற்று நிருபம் கூறுகின்ற போதிலும் உண்மையில், அனேகமாக நடவடிக்கை அடிப்படையில் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

சுமார் 21% இல்லங்கள், கல்விக்கான செலவு மிக உயர்வானது என்று கருதுகையில், மத்தியதர குடும்பங்கள் பலவும் அவ்வாறில்லை என்று மாற்றுக் கருத்தைத் தெரிவித்துள்ளன. இத்தகைய கட்டணங்கள் இல்லாமல் பாடசாலைகள் அவற்றின் நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது என்று இவர்கள் வாதிடுகின்றனர். குறைந்த அபிவிருத்தி உள்ள சமூகங்களான, புத்தளம் கிராமிய சிங்களப் பகுதி, ஹற்றன் தமிழ் பகுதி கிராந்துரு கோட்டை, மஹியங்கனை, காலி, ஹிக்கடுவ, கண்டியில் உள்ள குறைந்த வருமானம் பெறும் சமூகங்களும் கட்டணம் உயர்வானது என்று கருதுகின்றனர்.


### 4.2.1 கட்டணங்களும் "அன்பளிப்புகளும்"

மாணவர்கள் தரம் ஒன்றிற்கு அனுமதிக்கப்படுகையில் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டண அமைப்பு எதுவும் கிடையாது பிரமாணங்கள் பற்றி பெற்றோர் அறிந்திராமையால், பாடசாலைக்குத் தமது பிள்ளைகளை அனுமதிக்கையில் சகல கட்டணங்களையும் அல்லது அறவீடுகளையும் அவர்கள் "அனுமதிக் கட்டணம்" என்றே அழைத்தனர். பல மாணவர்கள் பல்வேறு தொகைக்கான கொடுப்பனவு செய்துள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இவை மிகப் பாரிய தொகையாக இருந்துள்ளது. மதிப்பீட்டுக்கு உட்பட்ட 62% பிள்ளைகள், தாம் அனுமதிக் கட்டணம் செலுத்தியதாகக் கூறினார். 52% மாத்திரமே தாம் செலுத்திய தொகை பற்றி அறிவித்தனர். 2008 இல் சராசரி அனுமதிக் கட்டணம் 3,977.09 ரூபாவாகும்.

ஆய்வாளர்கள் இந்தத் தொகைகளை வகுத்துப் பார்க்கையில் காலி/ஹிக்கடுவை, கண்டி, நுவரெலியா ஆகிய இடங்களில் உள்ள மாணவர்கள் கூடுதலான கட்டணங்களை செலுத்தியுள்ளனர். புத்தளம் கிராமிய தமிழ் நகரப் பகுதிகள், காலி/அம்பலாங்கொட ஆகிய இடங்களில் உள்ளவர்கள் குறைவான கட்டணத்தை செலுத்தியுள்ளனர்.

சுமார் 91% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், இத்தகைய கட்டணங்கள் பெற்றோர் மீது பழுவை சுமத்தியதாகக் கூறினர். எனினும், பாடசாலைகள் அனுமதிக் கட்டணம் அறவிடுவதில் சிறந்த மட்டத்தில் வெளிப்படைத்தன்மை இருந்ததாகத் தெரிகிறது. 57% உத்தியோகத்தர்கள், பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டதாக கூறினார். ஆனால் 10% ஆசிரியர்களும், 15% உத்தியோகத்தர்களும் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படவில்லை என்றனர்.

வரைபடம் 10: இல்லங்களினால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் சுருக்கம்



16% ஆசிரியர்களும், 19% உத்தியோகத்தர்களும், பாடசாலைகளைப் பராமாரிக்கவும், மேலதிக பாடசாலை நடவடிக்கைகளுக்கும் கட்டணம் அவசியம் என்றனர்.

பெரும்பாலான ஆசிரியர்களின் (60.2%) அபிப்பிராயப்படி பாடசாலைக் கட்டணங்களின் கணக்குகள் பெற்றோர் ஆசிரியர் சங்கம்/ பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தப்பட்டன. பாடசாலைகளுக்கு செலுத்தபட்ட மானியங்கள் என்று பாடசாலைகளுக்கு வருமானமாகக் கிடைத்த பல்வேறு நிதியங்கள் கணக்குப் பரிசோதணை செய்யப்படவில்லை என்று 62.2% ஆசிரியர்களும், 86.3% உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர்.

ஏனைய கொடுப்பனவுகளைப் பொறுத்த வரை 349 சிறுவர்கள் உள்ள 22.1% இல்லங்கள், ஒரு பிள்ளைக்கு ஆண்டுக்கு சராசரியாக 1,543 ரூபா என்ற பெறுமதி அன்பளிப்புக்களை வழங்கின. அனேகமாக முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ள புத்தளம் நகரப்பகுதியிலுள்ள இல்லங்கள் 4 ரூபா தொடக்கம் 20, 000 ரூபா வரையிலான வேறுபட்ட பெறுமதியான அன்பளிப்புக்கள் வழங்கியிருந்தன. கண்டி, காலி/ஹிக்கடுவை, அனுராதபுரம் என்பவற்றில் இது குறைந்த மட்டத்தில் இருந்தது. ஹற்றன், கிராந்துருகோட்டே, அம்பலாங்கொடை பகுதிகளில் சிறிதளவு அன்பளிப்புகள் பற்றியே அறிவிக்கப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்டத்தில் சிங்கள, தமிழ், பகுதிகளில் உள்ள இல்லங்கள் எவ்வித அன்பளிப்புகளையும் வழங்கவில்லை.

> **ஒரு நீதிபதி பாடசாலையின் நீச்சல் குளத்திற்கு பளிங்குக் கற்களை வழங்கிய பின்னரே அவரது மகளுக்குத் தரம் எட்டில் அனுமதி கிடைத்தது**
>
> **ஒரு பெற்றோர்**

### 4.2.2 பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கான கொடுப்பனவுகள்


பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் இல்லாமல் போய், பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் அவற்றுக்குப் பதிலாக அமைக்கப்பட்ட போதிலும், பெற்றோர் இரண்டு சங்கங்கள் பற்றியும் குழப்பமான எண்ணத்தைக் கொண்டிருந்தனர். பெற்றோர் ஆசிரியர் சங்கமானது, ஒவ்வொரு தவணைக்கால இறுதியில் சந்தித்து மாணவர் செயற்பாடு, பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடும் உத்தியோகப்பற்றற்ற சபையாகும். பாடசாலை அபிவிருத்தி சங்கமானது, தெரிவு செய்யப்பட்ட தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ள உத்தியோகபூர்வ சபையாகும். இது பாடசாலை நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிப்பதில் பெரும் பங்கு வகிப்பதுடன் வருடாந்தக் கூட்டங்களையும் நடத்துகிறது.

ஒரு குடும்பத்திற்கு சராசரி 1,021 என்ற வகையில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்திற்கு (94 இல்லங்களிலிருந்து) சுமார் 10% சிறுவர்கள் பணம் வழங்கியுள்ளனர். இந்தத் தொகை, ஒரு ஆய்வு இடத்திலிருந்து வேறு ஆய்வு இடத்திற்கு வேறுபட்டது. கூடுதலான கொடுப்பனவுகள், அம்பலாங்கொட, கண்டி, நுவரெலியா இல்லங்களிலிருந்து செலுத்தப்பட்டன.

கண்டி, புத்தளம் நகரப் பகுதி காலி, அம்பலாங்கொட, ஹிக்கடுவ, அனுராதபுரம் ஆகியவற்றில் கூடுதலான எண்ணிக்கையில் 66% பிள்ளைகளின் பாதுகாவலர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு பணம் செலுத்தியுள்ளார். 1,198 பிள்ளைகள் உள்ள 689 இல்லங்கள் தாம் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு பணம் செலுத்தியதாகக் கூறின. ஆனால் 999 பிள்ளைகள் உள்ள 597 இல்லங்கள் மாத்திரமே செலுத்தப்பட்ட தொகையைத் தெரிவித்தன. ஒரு பிள்ளைக்கென செலுத்தப்பட்ட சராசரித் தொகை 794 ரூபா.

பாடசாலை அபிவிருத்தி சங்கக் கட்டணங்கள், கிராமியப் பாடசாலைகளைப் பார்க்கிலும், நகரப் பாடசாலைகளிலேயே அறவிடப்பட்டதாகவும், ஏனைய வகுப்பினரைப் பார்க்கிலும், மத்தியதர வகுப்பைச் சேர்ந்த பெற்றோரே பணம் செலுத்தியதாகவும் ஆய்வு புலப்படுத்தியுள்ளது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு சிங்களவரும், முஸ்லிம்களுமே பணம் செலுத்திய முக்கிய இனத்துவக் குழுக்களாகும்.

வரைபடம் 11: வருடாந்த சராசரிக் கொடுப்பனவு



### 4.2.3 பாடசாலை உபகரணக் கொள்வனவு.

58.9% இல்லங்கள் பாடசாலை உபகரணங்களின் கொள்வனவுக்கு பணம் வழங்கியுள்ளன. ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கான சராசரி செலவு 3,653 ரூபா ஆகும். வகுப்பறைப் பணிகளுக்கான பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்யுமாறு ஆசிரியர்கள் பிள்ளைகளைக் கேட்டதாக 55% தாழ்ந்த மற்றும் தாழ்ந்த நடுத்தர வகுப்பைச் சேர்ந்த சுமார் 50% மத்தியதர வகுப்பினரும் தெரிவித்தனர். இந்த வேண்டுகோள்கள் பெற்றோருக்கு பெரும் பழுவாகக் கருதப்படுகிறது.

### 4.2.4 ஆசிரியர்களுக்கான அன்பளிப்புகள்.

702 சிறுவர்கள் உள்ள 41.2% இல்லங்கள், பணம் உட்பட அன்பளிப்புகளை ஆசிரியர்களுக்கு வழங்கியுள்ளன. பல சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் ஒன்று சேர்ந்தும் அன்பளிப்புக்களை கொள்வனவு செய்துள்ளனர். ஒவ்வொரு அன்பளிப்புகளுக்கும் ஒரு மாணவருக்கு சராசரியாக 250 ரூபா (இது 5 ரூபா தொடக்கம் 5,000 ரூபா வரை வேறுபடுகிறது) செலவு ஏற்படும் விதத்தில் ஆசிரியர்களுக்கு அன்பளிப்பு வழங்கிய கூடுதலான இல்லங்கள் புத்தளம் நகரப் பகுதி, அனுராதபுரம், காலி, ஹிக்கடுவை, கண்டி, நுவரெலியா பகுதிகளைச் சேர்ந்தவையாகும்.

**தரம் ஒன்றில் என் பிள்ளை இருந்தபோது, வகுப்பு ஆசிரியை ஒரு அட்டிகையைக் காண்பித்து அது போன்ற அன்பளிப்பைக் கோரினார். எனினும், சில பெற்றோர் கல்வி அமைச்சுக்கு இது பற்றித் தொலைபேசியில் தெரிவித்ததும் அந்த ஆசிரியை எச்சரிக்கப்பட்டார். ஆசிரியர்களுக்கு அன்பளிப்பு வழங்குதல் தரம் ஒன்றில் இருந்து தரம் நான்கு வரை முக்கியமான ஒரு பழக்கமாகிவிட்டது.**

**தெற்கில் இருந்து ஒரு பெற்றோர்.**

நன்றிக் கடனையும், பாராட்டையும் தெரிவிக்கு முகமாக அடையாள அன்பளிப்பு வழங்குதல் (உதாரணமாக வெற்றிலை) பாடசாலை அமைப்பில் வழமையானதாகும். எனினும், அன்பளிப்புகள் விலை உயர்ந்தவையாகவும், ஆசிரியர்களின் செல்வாக்கைப் பெறுமுகமாகவும் வழங்கப்படுதல் ஒரு ஊழல் நடவடிக்கையாக கருதப்படத்தக்கது.


#### 4.2.5 தனியார் வகுப்பு

கட்டணத்திற்கான தனியார் வகுப்புக்கள் வழமையான தனியார் வகுப்பு ஆசிரியர்களால் மாத்திரமல்லாது, பாடசாலை ஆசிரியர்களால் நடத்தப்படுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. சில பாடசாலை ஆசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களைத் தமது தனியார் வகுப்புக்களுக்கு வருமாறு வலியுறுத்தியுள்ளனர்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபம் 2006/45 இத்தகைய நடவடிக்கைகளையும், பாடசாலை நேரத்துக்குப் பின்னரும், வார இறுதியிலும் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதையும், தடை செய்கின்ற போதிலும், இந்த வகுப்புகள் பாடசாலை நேரத்தில் நடத்தப்பட்டுள்ளன.

தனியார் வகுப்புக்கள் சாதாரண வாழ்க்கை முறையாகியுள்ளது. 1,118 பிள்ளைகள் உள்ள 68% இல்லங்கள் பணம் செலுத்தியுள்ளன. ஆண்டொன்றுக்கு, ஒரு மாணவர், சராசரி தனியார் வகுப்புக் கட்டணமாக 4,695 ரூபாவைச் செலுத்தியுள்ளார். இந்தத் தொகை இல்லங்களின் வகுப்பு நிலைமைகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது. (வரைபடம் 12 ஐப் பார்க்கவும்)

வரைபடம் 12: வகுப்பு நிலைமைப்படி தனியார் வகுப்புக்கான செலவு.



பாடசாலையிலேயே பாடசாலை நேரத்தின் பின்னரான தனியார் வகுப்புக்கு, ஆசிரியர்களுக்கு கட்டணத்தை 107 பிள்ளைகள் உள்ள சுமார் 9% இல்லங்கள் (82) செலுத்தியுள்ளன. இது ஆசிரியர்கள் வழமையான வகுப்புகளில் பாடத் திட்டத்தின் முக்கிய பகுதிகளை கற்பிக்காதுவிடுதலை ஊக்குவித்ததுடன், மாணவர்களை தனியார் வகுப்புக்களுக்கு செல்வதை நிர்ப்பந்தித்துள்ளது. இத்தகைய தனியார் வகுப்புக்கு சராசரிக் கட்டணம் ஆண்டொன்றிற்கு 1,760 ரூபாவாக 2008 இல் இருந்துள்ளது.

**ஆசிரியர்கள் தமது தனியார் வகுப்புக்களுக்கு வரும் மாணவர்களுக்கு சிறந்த புள்ளிகளையும், பரிசுகளையும், வழங்கினர். சில சந்தர்ப்பங்களில் வேறு தனியார் வகுப்புகளுக்கு மாணவர்கள் சென்றால், அவர்கள் பாடசாலைக்கு வருகை தராமை பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.**

**மத்திய பகுதியில் மாகாண உத்தியோகத்தர்.**

**ஒரு பாடசாலையில், வணிகப்பாடத்தை கற்பிப்பதில் போட்டி போட்ட இரு ஆசிரியர்களால், கல்விப் பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர்தர மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்குச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இந்த வகுப்புகளுக்கு மாணவர்கள் செல்லாவிட்டால், அவர்கள் பழிவாங்கப்பட்டனர்.**

**FGD யில் சமூகத் தலைவர்கள்**

இந்தச் சம்பவங்கள் பிரதானமாக தமிழ் மாணவர்கள் பெரும்பான்மையாக உள்ள நுவரெலியா, ஹட்டன், புத்தளம் நகரப் பகுதிகளில் இடம்பெற்றன. கஷ்டமான பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தின் பின்னர் தனியார் வகுப்புக்களை நடத்துவதை இது காண்பிக்கின்றது.

தனியார் வகுப்புக்களை நடத்திய ஆசிரியர்கள், அதில் கற்கும் மாணவர்களுக்கு தனிச்சலுகை காண்பித்து பரிசளிப்பு வைபவங்களில் அல்லது தவணை/வருடாந்த பரீட்சைகளில் கூடுதலான புள்ளிகளை வழங்கிய சந்தர்ப்பங்களும் காணப்படுகிறது.

பெரும்பான்மையான ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், இந்த நடைமுறையை அங்கீகரிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. 40% ஆசிரியர்களும், 46% உத்தியோகத்தர்களும் பாடசாலைக்கு வெளியே தனியார் வகுப்பு நடத்துவது ஏற்கத்தக்கதல்ல என்றே கூறினர். ஒரு வகுப்பாசிரியர் பாடசாலை நேரத்துக்குப் பின்னரும், வார இறுதியிலும் தனியார் வகுப்பு நடத்தினாலும், அது ஊழல் நடவடிக்கை என்பதை சுமார் 65% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொண்டனர்.

### 4.2.6 ஏனைய கொடுப்பனவுகள்.

இது சிரமதான மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள், நூலகம், கணனிப் பாவணை, பாதுகாப்புப் பராமரிப்புக்கான கொடுப்பனவுகளை உள்ளடக்குகிறது (வரைபடம் 11ஐப் பார்க்கவும்) கட்டணங்கள் அல்லது அன்பளிப்புகள் போன்ற அநேகமான கொடுப்பனவுகள், பெற்றோருக்கு பழுவாகி, பிள்ளைகள், பாடசாலையை விட்டு விலக வழிவகுக்கின்றன. கல்வியமைச்சும் வசதிக்கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கட்டணங்களுக்கு ஆகக்கூடிய எல்லையை வகுக்காமையும், அதிபர்கள் தன்னிச்சையாக தீர்மானங்களை எடுப்பதும் ஊழல் வளர வழியமைக்கின்றன.

தமது பிள்ளைகளுக்கு கல்வி வழங்கவெனப் பெற்றோர் கணிசமான செலவைச் செய்வதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. இலங்கை, அதன் இலவசக் கல்வி அமைப்புக் குறித்து பெருமைப்படுகிறது. ஆனால், உண்மையில் கல்வி இலவசமானதா? அரசாங்கம் கல்விக்கென ஒதுக்கீடு செய்யும் தொகை குறைவாக இருக்கையில், தமது பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்க, பெற்றோரே மறைமுகமாக செலவு செய்கிறார்கள்.

## 4.3 நிர்வாகம் தொடர்பான ஊழல்

ஆசிரியர் இடமாற்றங்கள், சம்பள உயர்வுகள் அல்லது கடன்கள அனுமதி பெறுவதற்கு செல்வாக்கு அல்லது இலஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. இது குறித்து ஆசிரியர்கள் மத்தியில் துயரமும் விரக்தியும் காணப்படுகிறது. உறவினர்களுக்கான ஆதரவு, அரசியல் மயம் என்பனவும் இந்த அமைப்புகளுக்குள் ஊடுருவியுள்ளது. இது அதிபர்களால் தொண்டர் ஆசிரியர்களை கீழ் வகுப்புக்களுக்கு நியமிப்பது தொடக்கம் பதில் அதிபர்கள், பணிப்பாளர் என்ற உயர் நியமனங்கள் வரை இனங்காணப்படுகின்றன.

ஊழல் அதிகரிப்பதற்கு, அரசியல்மயம், பிரதான காரணியாக உள்ளது. பாடசாலைகளிலும் கல்வி அமைச்சிலும், நியமனங்கள் அரசியல் ரீதியானவை என்று 28.6% இல்லங்களும் ஏற்றுக் கொள்கையில் 15.5% மானவை எதிரான கருத்தைக் கொண்டுள்ளன. நியமனங்களும், பதவி உயர்வுகளும் அரசியல் ரீதியானவை என்று கருதுபவர்கள் முக்கியமாக மத்திய தர வகுப்பினரும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களும் 41.1% இல்லங்கள், தராதரமுள்ளவர்கள் நியமிக்கப்படுவதில்லை என்றும் 13% நியமனங்கள் திறமை அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தன. வகுப்பினர் பற்றிப் பகுப்பாய்வு செய்தபொழுது முன்னைய கண்டுபிடிப்புக்களைப் போன்றதாகவே பெறுபேறுகள் இருந்தன.


கல்வித் திட்டமிடல் அதிகம் அரசியல் மயமானது என்றே 31.4% இல்லங்கள் கருதினர். அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களினால் கல்வி அமைப்பு அரசியல் ரீதியாகவே கையாளப்பட்டது என்பது பண்புசார் நேர்காணல் அபிப்பிராயங்களால் உறுதிப்படுத்தப்பட்டது.

### 4.3.1 பாடசாலைகள் தொடர்பான பிரச்சினைகள் - தமிழ் மொழிபெயர்ப்புகள்

தமிழ் பேசும் பகுதிகளிலுள்ள, தேவையான பாடசாலைகள், வலய அலுவலகங்கள் ஆகியவற்றிற்கு சுற்று நிருபங்கள், மற்றும் ஆவணங்களின் தமிழ்மொழி பெயர்ப்புகள் வழங்கப்படாமை அல்லது தாமதமாக வழங்கப்படல் பாரபட்சமானது என்று நுவரெலியா, புத்தளம் ஆகிய பகுதிகளில் உள்ள வலயப் பணிப்பாளர்கள் கருதினர். கொழும்பில் உள்ள சிரேஷ்ட கல்விப் பணிப்பாளர் ஒருவர் இந்தத் தாமதங்களுக்கு கல்வி அமைச்சில் ஒரேயொரு தமிழ்மொழி பெயர்ப்பாளர் இருப்பதே காரணம் என்றார்.

இது திட்டமிடலுக்கு இடையூறாக இருந்தது என்பது 56% உத்தியோகத்தர்களின் கருத்தாகும். தமிழில் தகுந்த படிவங்கள் கிடைக்காதமையினால், பாடசாலைகளில் இருந்து தகவல் பெறுவது கஷ்டமாக இருந்தது என்று இவர்கள் சுட்டிக்காட்டினர். தமிழில் சுற்று நிருபங்களும், ஏனைய ஆவணங்களும் கிடைக்காததால், பல ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பிரமாணங்களை அறியாதவர்களாக நடைமுறைகளைப் பின்பற்றாதிருந்தனர் அவர்கள் தமக்கு கிடைக்க வேண்டிய வளங்களையும் பெற முடியாதிருந்தனர். இது பல நிர்வாகப் பிரச்சினைகளை உருவாக்குகிறது. மத்திய மட்டத்தில் கல்வித் திட்டமிடலையும் கல்விச் சமநிலையில் பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. இதனால், சிங்களப் பாடசாலைகளுடன் ஒப்பிடுகையில், தமிழ் பாடசாலைகளுக்கு சாதகமற்ற நிலை ஏற்படுகின்றது.

வரைபடம் 13: முக்கியமாகத் தமிழில் படிவங்கள், இல்லாமையால் பாடசாலைகளிலிருந்து தகவல் பெறுவது பணிப்பாளர்களாகிய எமக்குக் கடினமாக உள்ளது (கேள்வி 34.1)




### 4.3.2 பாடசாலைகளிலும், கல்வி அலுவலங்களிலும் ஒழுங்கீனங்கள்.

விவசாயப் பகுதிகளில் உள்ள கிராமப் பாடசாலைகள் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்றதாக பயிரிடுவதற்குப் பல ஏக்கர் காணிகளைக் கொண்டிருக்கின்றன. எனினும், அநேகமான அதிபர்கள் இந்தக் காணிகளை தனியார் பயிர்ச் செய்கையாளருக்கு குத்தகைக்கு விட்டு அவர்களிடமிருந்து பணத்தைத் தாமே பெற்றுக் கொள்வதை 32% ஆசிரியர்களும், 27% உத்தியோகத்தர்களும் அறிந்திருந்தனர்.

நிர்மாணப் பணிகளைப் பொறுத்தவரை அதிபர்கள், ஊழல் நடவடிக்கை மேற்கொள்கிறார்கள் என்ற கருத்தை 54.8% உத்தியோகத்தர்கள் நிராகரித்தனர். 30.5% நிர்மாண பணியில் ஊழல் நிலவும் பாடசாலை ஒன்று பற்றி நாம் அறிந்திருப்பதாக கூறினார்.

இதேவேளையில் கல்வி அலுவலகங்களில் அநாவசியமாக பொருட்களும், சேவைகளும் பெறப்படுவது பற்றி 77% ஆசிரியர்களுக்கு 63% உத்தியோகத்தர்களும் அறிந்திருந்தனர்.

### 4.3.3 சம்பள படிகளில் தாமதம்.

சம்பளக் கொடுப்பனவு, படிகளை நிர்ணயித்தல் என்பவற்றில் தாமதம் ஏற்படுவது, ஊழலைக் குறிக்காவிடினும், அவை ஒழுங்கீனங்களை வளர்ப்பதற்கு அனுமதிக்கும் நிர்வாகத் திறமின்மைக்கான நேரறிகுறியாகவுள்ளன. திறைசேரியில் இருந்து கல்வி அமைச்சுக்கு நிதி தாமதமாக செலுத்தப்படுவதாலும் இது ஏற்படக்கூடும். 82% ஆசிரியர்களும் 75% உத்தியோகத்தர்களும் படி உயர்வுத் தாமதத்தை எதிர்கொண்டார்கள்.

பண்புசார் நேர்காணலில் பங்குபற்றிய ஆசிரியர்கள் 2-4 ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்வு பெற்ற போதிலும், தமது மாதாந்த சம்பளத்தில், படி உயர்வு சேர்க்கப்படவில்லை என்றனர். முழுப்படி உயர்வும், அவர்களின் மாதாந்த சம்பளத்தில் சேர்க்கப்படும் வரை சில ஆசிரியர்கள் படி உயர்வில் குறிப்பிட்ட சதவீதத்தை பெற முடிந்துள்ளதாக 52% ஆசிரியர்களும் 37% உத்தியோகத்தர்களும் கல்வி அமைச்சுக்கு முறைப்பாடு செய்துள்ளனர். சுமார் 10% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், நடைமுறையைத் துரிதப்படுத்துவதற்கென லிகிதர்களுக்கு இலஞ்சம் வழங்கியதாக ஒப்புக் கொண்டுள்ளனர். வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளத்தொகை குறைவாக இருந்ததாலும் சம்பள உயர்வு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதனாலும், பெருமளவு ஆசிரியர்கள் விரக்தி அடைந்துள்ளனர் என்பது பலரது கருத்தாகும்.

**சம்பளப் உயர்வுகள் நீண்டகாலத்திற்குச் செய்யப்படுவதில்லை. லிகிதர்கள் இந்த விடயங்களில் கவனம் செலுத்துவதில்லை. நடைமுறையைத் துரிதப்படுத்த அவர்கள் இலஞ்சத்தை எதிர்பார்க்கிறார்கள். அதிபர்களும், ஆசிரியர்களும் லிகிதர்களிடம் சென்று, பத்திரங்களை தயார் செய்வதற்கு ஏதாவது கொடுக்க வேண்டியுள்ளது. இது ஆசிரியர்களினதும், அதிபர்களினதும், அந்தஸ்திற்குச் சரியானதல்ல. 2004 தொடக்கம் ஒரு அதிபர் 2I நிலையில் இருந்தபோதிலும் சம்பள உயர்வைப் பெறவில்லை.**

**FGD யில் ஆசிரியர்கள்**

**நாம் சம்பள உயர்வுகளைப் பெறும்போது, சரியான சம்பளத்தை நிர்ணயிப்பதில் ஓராண்டுக்கும் கூடுதலான காலம் எடுக்கின்றது. இது அநேகமான ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாகும்.**

**ஆசிரியர்களுடனான நேர்காணல்.**

### 4.3.4. கஷ்டப் பிரதேச படி உயர்வு.

2007 இடமாற்றக் கொள்கையின் ( 2007/20 - 2007/12/13) கீழ் ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் தமது முதலாவது நியமனத்தின்போது, கஷ்டப்பிரதேசத்தில் 3-5 ஆண்டுகள் பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டப் பிரகாரம், அவர்கள் அனைவருக்கும் மேலதிகமாக கஷ்டப் பிரதேசப்படி கல்வி அமைச்சினால் வழங்கப்படுகிறது.

சுமார் 76% ஆசிரியர்களும், 70% உத்தியோகத்தர்களும் தாம் கஷ்டமான பிரதேசங்களில் பணியாற்றி உள்ளதாக கூறியுள்ளனர். 46% ஆசிரியர்களும், 38% உத்தியோகத்தர்களும், இந்தப்படி தமக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கின்றனர். நேர்காணலிலும், ஆசிரியர்கள், இந்தப் படியை நடைமுறைப்படுத்துவதில் தனிச்சலுகையும், அரசியல் செல்வாக்கும் மேற்கொள்ளப்படுவதாகவும், சிலவேளைகளில் தம்மைத் தண்டிப்பதற்காக தாமதப்படுத்தப்படுவதாகவும் கூறினர்.

இது ஆசிரியர்களை ஊக்குவிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தி, தார்மீக குறைவையும் வகுப்பறையில் தரம் குறைந்த கற்பித்தலையும், ஏற்படுத்த வழிவகுக்கின்றது.

### 4.3.5 ஆசிரியர் கடன் திட்டம்.

பல ஆசிரியர்கள் தமது மாதாந்த செலவை ஈடுசெய்வதற்கு தமது சம்பளம் போதாது என்று குறிப்பிட்டனர்.[17] கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிவோர் வார இறுதியில் தமது வீடுகளுக்குப் பயணிப்பதற்கென வாரந்தோறும் 1,000 ரூபாவை அல்லது மாதாந்தம் 5,000 ரூபாவை செலவழித்தனர். உணவு, தங்குமிடம் என்பவற்றுக்கான கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்னர்,ஏனைய செலவுகளுக்கு அவர்களிடம் ஒரு சில ரூபாக்களே எஞ்சியிருந்தன. தனியார் வகுப்புக்களை நடத்த முற்படுவதுடன் சகல ஆசிரியர்களும் அரசாங்கக் கடன்களுக்கு விண்ணப்பிக்கின்றனர். (ஆசிரியர்களினதும் குடும்பத்தினரதும் மருத்துவ செலவுக்கான அக்ரஹார காப்புறுதி, அனர்த்தக் கடன்கள், 7 ஆண்டு சொத்துக் கடன் என்றழைக்கப்படும் வீடமைப்புக் கடன்கள்)

**அனர்த்தக் கடன்கள் நேரகாலத்தில் வழங்கப்படுவதில்லை. வலய அலுவலகம் திணைக்களம் என்பவற்றுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அண்மையில் விண்ணப்பித்த அலுவலக காவலாளி 80,000 ரூபாவை அனர்த்தக் கடனாக பெற்றார். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே விண்ணப்பித்த அதிபர் ஒருவரின் பெயர் இன்னமும் எதிர்பார்த்திருப்பவர் பட்டியலில் உள்ளது.**

*FGD* **இல் ஆசிரியர்**

இந்தக் கடன்களைப் பெறுவது கஷ்டமாக இருந்ததாகவும் பணம் கைக்கு வந்து சேர்வதற்கு பல ஆண்டுகாலம் சென்றதாகவும் பொதுவாகக் கூறப்பட்டது. இந்தக் நிலைமை காரணமாக அரசியல் தலையீடு, இலஞ்சம் உள்ளிட்ட ஊழல் நடவடிக்கைகளுக்கு இடமளிக்கப்பட்டது.

**வருடாந்த வட்டி மிகக் குறைந்த 4% வீதமாக வழங்கப்பட்டதால் வீடமைப்புக் கடன்களுக்கு, பெரும் போட்டி காணப்பட்டது. அரசியல் செல்வாக்குள்ள ஆசிரியர்களால் மாத்திரமே இக் கடனைப் பெறக் கூடியதாக இருந்தது. அரசியல் செல்வாக்குள்ள ஆசிரியர்களாலேயே காத்திருக்கும் பட்டியலையும் மீறி, அக்ரஹார காப்புறதியைப் பெற முடிந்தது.**

**ஓராண்டு காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலானோருக்கு வழங்கப்பட்ட அனர்த்தக் கடன்கள், கூடுதலானோரால் நாடப்பட்டு, ஊழல் நிறைந்ததாக காணப்படுகிறது. இவற்றை அரசியல் செல்வாக்குள்ள ஆசிரியர்கள் அல்லது சிறந்த தொடர்புகளை கொண்டிருப்பவர்களே பெற்றனர். இந்தக் கடன்களைப் பெற முடியாத ஆசிரியர்கள், உத்தியோகப் பற்றற்ற வழிகளான "சீட்டு" அல்லது கடன் வழங்குபவர்களான செல்வந்த ஆசிரியர்களிடமிருந்து (தனியார் வகுப்பு நடத்தும் ஆசிரியர்கள்) கடன்களைப் பெற வேண்டியிருந்தது.**

**ஆசிரியையுடனான நேர்காணல்**

---

17. இலங்கையில் ஆசிரியர்களின் சம்பளம் , தெற்காசியாவில் மிகக் குறைவானது -- உலக வங்கி 2005

அரசியல் செல்வாக்கு கடன்கள் பெறும் நடைமுறையைத் துரிதப்படுத்தியது. இதனை 40% ஆசிரியர்களும், 34% உத்தியோகத்தர்களும் ஒப்புக் கொண்டனர். நீண்ட காலம் காத்திருக்கும் பட்டியலைத் தவிர்த்து இவ்வாறே ஆசிரியர்கள் விரைவாகக் கடன்களைப் பெற்றனர். அக்ரஹார காப்புறுதி பெறுவதற்கு, அரசியல் செல்வாக்கு அவசியம் என்று 30% ஆசிரியர்களும் உத்தியோகதர்களும் கூறினர். மாகாண நிர்வாகத்துடன் தொடர்புள்ள ஆசிரியர்கள், கடன் விண்ணப்பங்கள் நடைமுறைப்படுத்தலை துரிதமாக்க முடிந்துள்ளது என்று 60% அசிரியர்களும் 41% உத்தியோகத்தர்களும் கூறினர்.

**மாகாணத்தில் உள்ள சுமார் 10,000 வரையிலான ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும், ஏனைய ஊழியர்களும், கல்வி அமைச்சிடமிருந்து மாகாண சபை மூலம் கடன்களைப் பெற்றனர். தவணை அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் இவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தினால் அது பாரிய தொகையாகும். இந்தத் தொகை, தேவையான ஏனைய ஆசிரியர்களுக்கு புதிய கடனாக சுலபமாக வழங்கத் தக்கது. ஆனால் மாகாண அமைச்சினால், இந்தக் கொடுப்பனவுகள் மீள் செலவினமாக பயன்படுத்தப்படுவதால், கடனுக்காக விண்ணப்பம் செய்யும் ஆசிரியர்கள் அதற்கு அங்கீகாரம் பெறுவதற்கு பல ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளது. இது சிறந்த நடைமுறையல்ல. அண்மைக் காலமாக கண்டி மாகாணசபையானது, இந்தக் கடன்கள் வழங்கப்படுவதை நிறுத்தியுள்ளது. இது ஆசிரியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் பாதகமாக காணப்படுகிறது.**

**கல்விப் பணிப்பாளருடனான நேர்காணல்**


### 4.3.6 இடமாற்றங்கள்

இடமாற்றம் கோரும் ஒரு ஆசிரியர், ஆசிரியர் இடமாற்றக் கொள்கைப் பிரகாரம், மிகக் கஷ்டமான அல்லது கஷ்டமான பாடசாலையில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள், உகந்ததாக இல்லாத பாடசாலையில் ஆகக்குறைந்தது நான்கு ஆண்டுகள், சலுகைகள் உள்ள பாடசாலையில் ஆகக்கூடுதலாக எட்டு ஆண்டுகள், ஆகக்கூடிய சலுகைகள் உள்ள பாடசாலையில் ஆகக்கூடுதலாக ஆறு வருடங்கள் பணிபுரிந்திருத்தல் வேண்டும். பொதுத் தரப்படுத்தல் அடிப்படையில், பாடசாலைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த விவகாரங்கள் குறித்து வலயக் கல்வி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒழுங்காற்று அடிப்படையில், மருத்துவ சபைகளின் விதந்துரைப்பின் பேரிலான இடமாற்றங்கள், கஷ்டமான பாடசாலைகளுக்கு, உகந்த பாடசாலைக்கும் இடையிலான பரஸ்பர இடமாற்றங்கள் போன்ற விசேட சந்தர்ப்பங்களிலான ஆசிரியர் இடமாற்றங்களும் நிகழ்ந்துள்ளன.

இடமாற்றங்கள் நிறுத்தப்பட்ட சம்பவங்கள்: கர்ப்பிணி ஆசிரியர்கள், ஆண், பெண் ஆசிரியர்களில் 53 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஆசிரியைகளில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தை உள்ளவர்கள் செய்த மேன்முறையீடுகளின் பேரில் இடமாற்றங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

வரைபடம் 14: கஷ்டமான பகுதியில் மூன்று ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்யாத நிலையில் இடமாற்றங்கள்





விபரமான சுற்று நிருபர்கள் இருக்கின்ற போதிலும், ஆசிரியர் இடமாற்றத்தில் ஊழல் முக்கிய அம்சமாக இருந்ததாக ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் வலுவாக நம்பினார்கள். இடமாற்றக் கொள்கை முற்று முழுதாகக் கடைப்பிடிக்கப்படவில்லை என்று 67.7% ஆசிரியர்களும், 58% உத்தியோகத்தர்களும் கருதினர். 85% கூடுதலான ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் ஆசிரியர் இடமாற்றம் ஊழல் வாய்ந்தது என்று தாம் கேள்விப்பட்டதாகவும் கூறினர். 4% ஆசிரியர்களும், 2% உத்தியோத்தர்களும் மாத்திரமே இடமாற்ற அமைப்பு ஊழலற்றது என்று கருதினர்.

**கல்வி அமைச்சில் ஆசிரியர் இடமாற்றமும், ஏனைய இடமாற்றங்களும் தகுந்த முறையில் நடைபெறவில்லை. அதில் பல ஒழுங்கீனங்கள் இருந்தன. அரசியல்வாதிகள் தரம் குறைந்த ஆசிரியர்களை மேலதிகப் பணிப்பாளர்களாக நேரடியாகப் பதவி உயர்வு செய்தனர். மத்திய மாகாணத்தில் இது போன்ற 120 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டன.**

**கல்வி மேலதிக பணிப்பாளர்.**


கஷ்டப் பிரதேசங்களில் இருந்து குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே இடமாற்றங்கள் செய்யப்பட்டமை ஊழல் நடவடிக்கையாகவே கருதப்பட்டது. பல ஆசிரியர்கள், குறிப்பிட்ட மூன்று ஆண்டு காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே அபிவிருத்தியடைந்த நகரப் பகுதிக்கு இடமாற்றங்களை பெற முயற்சி செய்துள்ளனர். இது அரசியல் செல்வாக்கு மூலம் இடம்பெற்றுள்ளது என்பது 66% ஆசிரியர்களினதும், 86% உத்தியோகத்தர்களினதும் கருத்தாகும். ஆசிரியர் விநியோகத்தில் பாரிய சமநிலை இன்மையுடன், இடமாற்றத் திட்டத்தில் ஒழுங்கீனங்கள் காரணமாக மேலும் கூடுதலாக நகர கிராமியப் பாடசாலைகளுக்கிடையில் வேறுபாட்டை ஏற்படுத்தி, கல்வித் தரத்தை சீர் குலைத்துள்ளது.

வரைபடம் 15: மூன்று ஆண்டு காலப்பகுதியை பூர்த்தி செய்வதற்கு முன்னதாகவே சிறந்த பகுதிகளுக்கு, கஷ்டப்பிரதேசங்களிலிருந்து பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா? (கேள்வி 3.3)




இடமாற்றம் மேற்கொள்வதற்கு இலஞ்சம் வழங்கப்பட்டது குறித்து தாம் கேள்விப்பட்டதாக 47.5% கூடுதலான ஆசிரியர்களும் 34% குறைவான உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர். இடமாற்றம் செய்வதில் அலுவலகம் முக்கிய பங்கு வகித்தது. உத்தியோகத்தர் ஒருவரை தெரிந்திருப்பது அல்லது உறவினராக இருப்பது, இடமாற்றத்திற்கு உதவியதாக 79% ஆசிரியர்களும், 72% உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர். இலஞ்சத்தைப் பார்க்கிலும் நேரடித் தொடர்புகள் கூடுதலான பயனைத் தந்திருப்பதாக கூறப்படுவது சுவாரஸ்யமானது. உறவுச் சலுகை, தனிப்பட்ட சலுகை என்பன பணப் பரிமாற்றத்தைப் பார்க்கிலும் பொதுவான ஊழல் வகைகளாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வரைபடம் 16: உத்தியோகத்தர்களை உங்களுக்குத் தெரிந்திருப்பதால் உங்களால் இடமாற்றம் பெற முடியும் ( கேள்வி 3.5)





வரைபடம் 17: ஆசிரியர்கள் இடமாற்றம் பெறுவதற்கு இலஞ்சம் செலுத்துகின்றனர் என்பது பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? (கேள்வி 3.4)



அரசியல்வாதிகள் மூலம் ஆசிரியர் இடமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை 85% ஆசிரியர்களும், 90% உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியமை, சுற்றுப்புறங்களில் உள்ள தேவையான பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவதற்கு குந்தகமாக இருந்துள்ளது. நகர/பிரசித்த பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், உயர்ந்த தொடர்புகளைக் கொண்ட குடும்பங்களான, வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் போன்றோரின் வாழ்க்கைத் துணையாக இருப்பதாக 50-60% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் கருதினர். அவர்களின் அதிகாரமும் தொடர்புகளும் ஒரே பாடசாலையில் சேவைக்காலம் முழுவதும் இருப்பதற்கு உதவியுள்ளது. இதேவேளையில் கஷ்டப் பிரதேசங்களில் ஐந்து ஆண்டுகளுக்கும் கூடுதலாக பணிபுரிந்த பல ஆசிரியர்கள் அதே பாடசாலைகளில் இடமாற்றம் பெறாமல் இருக்க வேண்டியதாயிற்று என்று 65 –75% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் தெரிவித்தனர். இடமாற்றக் கொள்கையை அமுல் செய்வதற்கு தொழிற்சங்க நடவடிக்கையும் தடையாக இருந்ததாக 50-60% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும் கூறினர். சுமார் 85% ஆசிரியர்களும் உத்தியோகத்தர்களும், இடமாற்ற அமைப்பு கொள்கை சீராக அமுல் செய்யப்படுவதற்கு அரசியல் தலையீடு காரணமாக இருந்தது என்று தெரிவித்தனர்.

படம் 18: ஆசிரியர் இடமாற்றம் அநேகமாக, ஒரு அரசியல்வாதி மூலமாகவா மேற்கொள்ளப்படுகிறது (கேள்வி 3.7D)



இதேவேளையில் வலயத்தில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக, வலய மாகாண கல்வி அலுவலகங்களுக்கிடையில், சரியான ஒருங்கிணைப்பு இல்லை என்று 50% ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் கருதினர். மாகாண அலுவலகங்கள் செய்த இடமாற்றங்கள் குறித்து, வலய அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படாததால் பல பிரச்சினைகள் எழுந்ததாக அவர்கள் கருதினர். பாடசாலைகளை முன்னேற்றுவதற்கு வலயப் பணிப்பாளர்கள் முயற்சி செய்கையில் அர்ப்பணிப்புடனான ஆசிரியர்கள், திடீரென வேறு பாடசாலைகளுக்கு, மாகாண அலுவலகத்தால் மாற்றப்படுவதால், வலயங்களில் கல்வி அமைப்பின் முன்னேற்றம் பாதிக்கப்படுகிறது. நிர்வாக உயர்பீடத்தில் உள்ள குறைந்த மட்ட உத்தியோகத்தர்கள் முக்கிய முகாமைத்துவ வழிமுறையில் போதிய அளவில் ஈடுபடாததால் அவர்கள் தமது பங்கை ஆற்ற முடியாத அமைப்பு ரீதியான பிரச்சினை உள்ளதால், தொடர்பாடல் பற்றாக்குறை இருப்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இது குறைந்த மட்ட உத்தியோகத்தர்களிடையே திறமையின்மையுடன் விருத்தியையும் ஏற்படுத்துகிறது. அவர்கள் தம்மாலியன்ற அளவு செயற்படுவதன் மூலம் நன்மை எதையும் பெற முடியாதிருக்கும்.

**பாராளுமன்ற நிர்வாக ஆணையாளர் (ஆலாட்சி அதிகாரி) கலாநிதி ஆர்.பி.ரணராஜா[18] தாம் மேல் மாகாண கல்விச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் ஆசிரியர் முகாமைத்துவம் தொடர்பக 16 பிரச்சினைக்குரிய பகுதிகளை இனங்கண்டுள்ளார்.**

**1. ஆசிரியர் அல்லது இடமாற்ற சபையைக் கேட்டுக் கொள்ளாமல் ஆசிரியர்களை இடமாற்றம் செய்தல்**

**2. போதிய அறிவித்தல் இல்லாமல் ஆசிரியர்களை இடமாற்றம் செய்தல்.**

**3. எவ்வித நிர்வாகத் தேவையுமில்லாமல் ஆசிரியர்களை இடமாற்றுதல்.**

**4.எவ்வித ஒழுங்காற்று ஒழுங்கீனமும் மேற்கொள்ளாத ஆசிரியர்களை இடமாற்றுதல்.**

**5. வேலை அட்டவணை வழங்காமல், அல்லது அவர்கள் முன்னர் வகித்த வகிபாகத்தை விட்டுவிடச் செய்து இடமாற்றுதல்**

**6. தமது வகிபாகத்தை விடாமல், இடமாற்றம் செய்யப்பட்ட தினத்தில் இருந்து புதிய பதவியில் பணிபுரிய அனுமதியாது இடமாற்றம் செய்தல்.**

**7. ஒரு தவணையின் நடுப்பகுதியில் இடமாற்றம் செய்தல்.**

**8.வலயப் பணிப்பாளர் அல்லது அதிபரால் விரும்பப்படாதவர்களுக்கு, பாடசாலைகளில் வேலை வழங்கப்படாமை.**

18. கலாநிதி ஆர்.பி.ரணராஜா 2008 மே 28ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவதற்கு வாய்மூல அனுமதியை வழங்கியுள்ளார்.

**9. சில பாடங்களுக்கென விசேட பயிற்சி வழுங்கப்பட்டவர்களுக்கு, கற்பித்தலுக்கு அப் பாடங்கள் வழுங்கப்படாமை.**
**10. குறைந்த தராதரமுள்ள ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழுங்கப்பட்டு, தராதரம் உள்ள ஆசிரியர்களுக்கு அவை வழுங்கப்படாமை.**
**11.வகுப்பறையில் கற்பித்தலுக்கு தராதரமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர்கள் நூலகர்களாக அனுப்பப்படல்.**
**12.இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் பாடசாலைகளில் எவ்வித வேலையுமின்றி இருக்கும் நிலையை ஏற்படுத்தல்.**
**13. ஆசிரியர் இடமாற்றத்தை, மாணவிகளும், பெற்றோரும் பிரச்சினைகளாகக் கருதுதல்.**
**14. 60 வயதுக்கு மேற்பட்டோரை எவ்வித காரணமுமின்றி சேவையில் வைத்திருத்தல்**
**15.பணிப்பாளர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாமை.**
**16. இத்தகைய ஒழுங்கீனங்கள் பற்றி ஆலாட்சி அதிகாரிக்கு ஆசிரியர்கள் அறிவிக்கும் பட்சத்தில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தல்.**

### 4.3.7 நியமனங்கள்

#### 4.3.7.1 தொண்டர் ஆசிரியர்கள்.

தொண்டர் ஆசிரியர் நியமனமானது, கூடுதலான ஊழல் உள்ள பகுதியாகக் கருதப்படுகிறது. சட்டபூர்வமாக, தொண்டர் ஆசிரியர்களுக்கு ஏற்பாடு கிடையாது. ஆனால் வடக்கிலும், கிழக்கிலும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் கடந்த காலத்தில் இத்தகைய நியமனங்கள் செய்யப்பட்டன. தொண்டர் ஆசிரியர்கள், அதிபர்களின் விதந்துரையின் பேரில் நிரந்தரமாக்கப்படுவதற்கு முன்னதாக பாடசாலைகளில் மூன்று ஆண்டுகள் பணிபுரிய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதிபர்கள் வெளிப்படையான நடைமுறையைப் பின்பற்றாமல், அநேகமாக உறவினர்களை அல்லது நெருக்கமானவர்களை தொண்டர் ஆசிரியர்களாக நியமிப்பதாக தெரிய வந்துள்ளது. 39% ஆசிரியர்களும், 45% உத்தியோகத்தர்களும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் ஊழல் தன்மையுடையவை. அதிபர்கள், தொண்டர் ஆசிரியர்கள் பணி பற்றிய பதிவேட்டை வைத்திருத்தல் வேண்டும். பல ஆண்டுகளின் பின்னரே அவர்கள் ஆசிரியர்களாக சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். அண்மைக்காலம் வரை அதிபர்கள் இந்த நடைமுறைக்கு அமையச் செயற்பட்டனர். ஆனால் இனி அவ்வாறில்லை.


தொண்டர் ஆசிரியராக நியமிக்கப்படுவதற்கு ஒருவர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளில் 3 பாடங்களில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும். பாடசாலையில் ஒரு வெற்றிடம் இருத்தல் வேண்டும். தராதரமுள்ளவர்கள் இப்பொழுது கிடைக்கக் கூடியதாக இருக்கையில், அதிபரின் உறவினர்கள் இந்த நியமனங்களை பெறுகின்றனர். சில தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்தின் பின்னர் பாடசாலைக்குச் செல்வதில்லை. ஆனால் பதிவேட்டுப் பதிவுகளை அதிபர்களுக்கு இலஞ்சம் கொடுத்துப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தொண்டர் ஆசிரியர்களுக்கு எவ்வாறு கற்பிப்பது என்று தெரியாது. இது மாணவர்கள் மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது.

FGD யில் ஆசிரியர்கள்

**4.3.7.2 பதில் அதிபர்கள்/அதிபர்கள்.**

அதிபர்கள், தராதரம் பெறும் பரீட்சைக்குப் பின்னர், அதிபர் சேவை மூலம் நியமனம் பெறுகின்றனர். எனினும், இந்தப் பரீட்சைக்குத் தோற்றாத பதில் அதிபர்களே 9,678 பாடசாலைகளில் அரைவாசியில், இவ்வறிக்கை எழுதப்பட்ட நேரத்தில் தலைமைப் பதவி வகித்தனர். பதில் அதிபர்களை தடை செய்யும் கல்வி அமைச்சின் 34/2000 சுற்று நிருப ஏற்பாடுகளுக்கு இது முரணானது.

வரைபடம் 19: அதிபர் பதவிகளுக்கு, நியமனம், அல்லது தெரிவில் உள்ள நடைமுறையில் முரண்பாடுகள் இருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா? (கேள்வி 33.6)



பதில் அதிபர்களின் அரசியல் நியமனங்கள் பாரிய ஊழலாக 56% ஆசிரியர்களாலும், 62% உத்தியோகத்தர்களாலும் கருதப்படுகிறது. 50% ஆசிரியர்களும் 62% உத்தியோகத்தர்களும், தராதரமுள்ள ஆசிரியர்கள் இந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினர். கல்வித்துறையில் அநேகமான முக்கிய பதவிகள் அரசியல் நியமனங்கள் என்று 50% ஆசிரியர்களும் 60% பணிப்பாளர்களும் கருதினர்.

**அநேகமான பதில் அதிபர்கள் தராதரமற்றவர்கள், அரசியல் ரீதியாக நியமிக்கப்பட்டவர்கள், சிரேஷ்ட, தராதரமுள்ள ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை. பதில் அதிபர் நியமனத்திற்கு தகுந்த அமைப்பு இல்லை. சிலவேளைகளில் அதிபர்கள் ஆணைக்குழுவினால் அல்லாது இவர்கள் அரசியல்வாதிகளால் நியமிக்கப்பட்டனர். ஒரு உயர்மட்ட அரசியல்வாதி, அத்தகைய நியமனங்களைச் செய்தார். "லொக்கு மாத்தயா"வின் விருப்பத்தின்படி எல்லாம் நடைபெற்றன.**


இத்தகைய செயற்பாடு, கற்பித்தல் தரத்தின் மீது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியது. தராதரமற்றவர்களை அரசாங்க சேவைக்குள் கொண்டு வந்துள்ளமை, கிரமமான முறையில் நியமிக்கப்பட்ட அதிபர்களின் தார்மீகத்தையும், ஊக்கத்தையும் பாதித்தது.

**4.3.7.4 பணிப்பாளர்களும் ஆசிரிய ஆலோசகர்களும்.**

ஆய்வில், மிகக் கூடுதலாக கல்விப் பணிப்பாளர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் (குறிப்பிட்ட பாடங்களில் கற்பித்தல் தரத்தை மேம்படுத்தும் அனுபவம் மிகுந்த ஆசிரியர்கள்) நியமிக்கப்படுவதாக ஆசிரியர்களும் அதிபர்களும் கருதுகின்றனர். பாடசாலைகளில் பணியாற்றுவதாக எதிர்பார்க்கப்படும் சில ஆசிரிய ஆலோசகர்கள் அவ்வாறு பணிபுரியாத சந்தர்ப்பங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவர்கள் தனியார் வகுப்பு (ரியூசன்) ஆசிரியர்கள் என்றும் கூடுதலாக வெளிக்கள அல்லது விஜயம் மேற்கொள்ளும் நேரத்தை தனியார் வகுப்புகளில் செலவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்ட வலயப் பகுதியில், பல மேலதிக பணிப்பாளர்களும், ஆசிரிய ஆலோசகர்களும் இருக்கையில் சில பாடசாலைகளில் போதிய ஆசிரியர்கள் இருக்கவில்லை.

புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களில் பலரும், பதவிகளை வகிப்பதற்கு தராதரத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது 50% ஆசிரியர்களினதும் 55% உத்தியோகத்தர்களினதும் கருத்தாகும். புதிய கல்வி அமைப்பின்[19] பிரகாரம் அதிகமான பணிப்பாளர்கள் இருப்பது தீர்வாக இல்லை. இது ஒரு பிரச்சினையாக உள்ளது என்று 44% ஆசிரியர்களும், 18% உத்தியோகத்தர்களும் கருதினர்.

வரைபடம் 20: புதிய கல்வித் திட்டப் பிரகாரம் பல பணிப்பாளர்கள் இருப்பது, தீர்வுகளுக்குப் பதிலாக பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது என்று நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? (கேள்வி 26.1)




ஆசிரிய ஆலோசகர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் உள்ள போதிலும், தனக்கு அவர்கள் மீது கட்டுப்பாடு இல்லை என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் கூறினார். இது வலயக் கல்விப் பணிப்பாளர்கள ஆசிரிய ஆலோசகர்கள் மீதுள்ள அதிகாரத்தை பயன்படுத்த தயங்கியமை அல்லது தமது அதிகாரம் மேற்பார்வை வகிபாகம் ஆகியன பற்றி அறியாதிருப்பதை வெளிக்காட்டுகிறது. வெளிக்கள விஜயங்களின்போது ஆசிரிய ஆலோசர்களை கண்காணிக்க நடைமுறையை அமுல்படுத்த சம்பந்தப்பட்ட வலயப் பணிப்பாளர் முயற்சி செய்தபோது, அது அவரது பொறுப்பு அல்ல என்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். திறமையின்மை, மனித நிதி வளங்களில் விரயம் என்பனவற்றிற்கு இட்டுச் செல்லும் நிர்வாக அமைப்பு, அதிகார வழிகள் என்பன மீது குழப்பம் தோன்றுகிறது.

19. கல்வி அமைச்சு புதிய கல்வி அமைப்பின் கீழ் மாணவர் - மைய கற்கை முறைகளை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. முதலாவது முன்னோடிக்கட்டம், சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு விசேட பயிற்சியுடன் தரங்கள் 6,10,11 ஆகியவற்றில் பயன்படுத்தப்படுகிறது.

முடிவாக, சேவையில் உள்ள ஆலோசகர்களின் நெருங்கிய மேற்பார்வை மூலம் பாடசாலைக் கல்வித் தரத்தைச் சீராக்குவதற்கு கல்வி அமைச்சு எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கவை. ஆனால் செயல் ரீதியாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. மொத்தமாக ஆய்வுக்குட்பட்டவர்களிடையே நிலைமை குறித்து எதுவும் செய்யப்பட முடியாது என்ற வலுவான எண்ணம் உள்ளது. இது தராதரமற்ற, ஊக்கமற்ற மக்களால் தரமற்ற கற்பித்தல், நியமனங்களில் மாத்திரமல்லாது, இடமாற்றங்கள், கடன் திட்டங்கள் என்பனவற்றிலும் அரசியல் செல்வாக்கைப் புகுத்தி கல்வி அமைப்பில் பெரும் குறைபாடுகளை ஏற்படுத்துகிறது.


## 4.4. ஊழலுக்கு எதிராக முறைப்பாடுகள்

பிள்ளைகளையும் இல்லங்களையும் பாடசாலை மட்டத்திலும், ஆசிரியர்கள், அதிபர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரை நிர்வாக மட்டத்திலும், பாதிக்கும் பல பிரச்சினைகள் உள்ளன. சிலர் ஊழல் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஏனையோர் அனுபவித்திருக்கிறார்கள். அவர்கள் எதனைச் செய்திருக்கிறார்கள்?

72% ஆசிரியர்களும், 54% உத்தியோகத்தர்களும் முறைப்பாடு எதனையும் செய்யவில்லை. 8% ஆசிரியர்களும், 7% உத்தியோகத்தர்களும் இந்தக் கேள்விக்குப் பதில் தரவில்லை.

இல்லங்களில் 21% அல்லது ஐந்தில் ஒரு பங்கினர், ஊழல் பற்றி முக்கியமாக அதிபர்களிடம் அல்லது ஆசிரியர்களிடம் முறைப்பாடுகள் செய்தனர். 78.3% மானோர் அவ்வாறு செய்யவில்லை.

வரைபடம் 21: கல்வியில் ஊழல் குறித்து எப்பொழுதாவது நீங்கள் முறைப்பாடு செய்திருக்கிறீர்களா? (கேள்வி 30.6 மற்றும் கேள்வி 3.4)



ஆய்வுக்குட்பட்டோர், இதற்கு நிவாரணம் கேட்கத் தயங்குகையில், ஒழுங்கீனங்கள் மேலும் கிரமமாக தண்டிக்கப்படவேண்டும் என்று பெரும்பான்மையானோர் நம்பினர். ஒழுங்கீனங்கள் எப்பொழுதும் தண்டிக்கப்படுவதில்லை என்று 75% உத்தியோகத்தர்களும், ஆசிரியர்களின் ஒழுங்கீனங்கள் பற்றி பணிப்பாளர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் தீவிரமாகக் கவனிக்கப்படவில்லை என்று அவர்களில் அரைவாசிப்பேரும் கருதினர் என்றும், 41.7% இல்லங்களும் 42.7% உத்தியோகத்தர்களும், ஆசிரியத் தொழிலில் தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும், 19.6% தண்டிக்கப்படத் தேவையில்லை என்று கூறினார்கள்.

இந்த ஆய்வின் முடிவுகள், ஒரு பிரச்சினை அல்லது ஊழலை எதிர்கொள்ளும்போது முறைப்பாடு செய்து தமது சிவில் உரிமையை பிரயோகிக்க அல்லது பிரயோகிக்க இயலாமல் பெரும் விகிதத்திலான ஆசிரியர்களும், உத்தியோகத்தர்களும் பெற்றோர்களும் இருந்ததாகத் தெரிவித்துள்ளன. முறைப்பாடு செய்வதற்கு உரிமை உள்ளது. பொது நலன் கருதி அவ்வாறு செய்யும் தேவையுள்ளது. நிறுவன ரீதியான அமைப்பு இல்லாமை ஆகிய காரணிகள் இந்தச் செயற்பாட்டை பாதித்திருக்கக் கூடும்.

## 5. கலந்துரையாடல்களும் முடிவுரையும்.

கல்வியின் தரத்தையும், சமத்துவத்தையும் பேணுதல் பொதுநலனுக்காக என்பதுடன் கல்வி அமைச்சின் கடமையுமாகும்.[20] ஊழல் நடவடிக்கைகள்,தரக்குறைவுக்கும் பாடசாலைகளில் சேர்வதற்கு சமத்துவமின்மை, இறுதியாக சமூக சமத்துவமின்மை என்பதற்கு (அட்டவணை 1 ஐப் பார்க்கவும்) வழிவகுக்கும். பாடசாலை அனுமதிகள், நியமனங்கள், பதவி உயர்வுகள், ஆசிரியர்கள், அதிபர்கள், உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் ஆகிய துறைகளிலேயே கூடுதலாக ஊழல் காணப்படுவது இந்த ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துறைகளில் ஒழுங்கீனங்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரின் தார்மீகம், ஊக்குவிப்பு என்பனவற்றில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி, கற்பித்தல் குறைவு, கல்வி முகாமைத்துவத்தில் தரமின்மை என்பனவற்றை விளைவிக்கும். செயல் தூண்டுதலை மீண்டும் ஏற்படுத்துவதற்கு, சிறந்த செயற்பாட்டிற்கு பரிசு வழங்கும் அமைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். சிறந்த நடத்தை திறமையான கற்பித்தல் என்பனவற்றுடன் இணைந்த பயிற்சி ஒரு ஊக்குவிப்பாக விளங்கும். ஒழுக்கக் கோவையில், தொழில்சார் நடத்தைக்கு, தெளிவான அளவீடுகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். பாரபட்சமற்ற ஒழுக்கவியல் ஆலோசனை, முறைப்பாட்டு நெறிமுறை என்பனவும், கிடைக்கப் பெறல் வேண்டும். மேலதிக ஆளணியினரை நியமனம் செய்வதிலும் பார்க்க, தராதரமுள்ள ஆசிரியர்களின் தொழில் நிலைமைகள், சம்பளங்கள் என்பனவற்றை மேம்படுத்த கல்வி வளங்களை பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

தரம் குறைந்த ஒழுங்கமைப்புத் திறன் அல்லது தரம் குறைந்த பரிபாலனம் என்பன காரணமாக பல சம்பவங்கள் நிகழும். முக்கியமாக பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதிப்பதில் கட்டணம் செலுத்துவது தொடர்பாக, சுற்று நிருபங்கள், சட்டங்களை அமுல் செய்ய முடியாமல் போதல், சமூகத்தில் சமத்துவமின்மையை உருவாக்கி, ஏழைகளுக்கும், மத்தியதரக் குடும்பங்களுக்கும், சமூகத்தில் கஷ்டங்களை ஏற்படுத்துவதுடன் இறுதியில் தனிப்பட்ட பிள்ளைகளையும் பாதிக்கின்றது.

பாடசாலைக்கான அனுமதி முறையில் வெளிப்படைத் தன்மையை அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு வசதிக்கட்டணம் மாத்திரம் சட்டபூர்வமானது என்று நிரல்படுத்தும் சுற்று நிருபம் 2008/21 ஐ மேலும் விரிவுபடுத்த வேண்டும். பெற்றோரிடமிருந்து

---

20. http://www.moe.gov.lk/about_us.php 04-10-2008 ல் பார்வையிடப்பட்டது

அறவிடப்படும் கட்டணத்திற்கு ஒரு உச்சவரம்பு இருத்தல் வேண்டும். பாடசாலை அனுமதிக்கான வதிவிடவிதி தொடர்பான விண்ணப்பங்களில், மோசடியைக் குறைப்பதற்கு முயற்சிகள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

தனியார் வகுப்புகள், பல்கலைக்கழக அனுமதிகோரும் மாணவர்களுக்கு முக்கியமாக தொழில்சார் பட்டம் பெற முயற்சிப்போருக்கு நன்மையளிப்பதாகும். தனியார் வகுப்புக்கள், உயர் வருமானமுள்ள குடும்பங்களுக்கு நன்மை அளித்து அதனைப் பெறமுடியாத நகர மையங்களில் அல்லாது கிராமிய தொலை தூரங்களில் வசிக்கும் ஏழை மாணவர்களுக்கு பாரபட்சத்தை ஏற்படுத்துகிறது. பாடசாலை நேரத்திற்குப் பின்னர், தமது சொந்த மாணவர்களுக்கே தனியார் வகுப்பை ஒரு கட்டணத்திற்கு நடத்துவதற்கு குறைந்த சம்பளமும் ஒரு காரணியாக இருக்கலாம். இந்தச் செயல்முறை முரணானது, காரணம் ஏழை மாணவர்களுக்கு சாதகமற்ற விதத்தில் ஆசிரியர்கள் இதனைத் துஷ்பிரயோகம் செய்யவியலும். அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் இருப்பது போன்று இந்த சட்டப் பலவீனத்தை, ஆசிரியர்கள் தமது சொந்த மாணவர்களுக்கு தனியார் வகுப்பு நடத்துவதை தடை செய்வதன் மூலம் சரி செய்யலாம்.

தர உள்ளீடுகள் முகாமைத்துவத்தைப் பொறுத்தவரை அதிபர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்கு கணக்குகளை வழங்குதல், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் கூட்டங்களில் அவற்றை சமர்ப்பித்தல் அல்லது பாடசாலை அறிவிப்புப் பலகையின் கணக்குகளை வெளிப்படுத்தல் என்பன மூலம் கூடுதலான வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தலாம். தர உள்ளீட்டு மானியங்களின் பிரயோகத்தை திட்டமிடுகையில், பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் ஆலோசனைகள் பெறப்படல் வேண்டும்.[21]

பாடசாலை முகாமைத்துவத்தில் முக்கியமாக நிதிகளில் நேர்மைத் திறன் குறித்து பொதுமக்களின் நம்பிக்கை குறைவாக உள்ளதாகத் தோன்றுகிறது. ஆசிரியர்களினாலும், அதிபர்களினாலும் அதிகாரத் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுகையில், தமது கவலையை வெளிப்படுத்துவதில் கூடுதலான நம்பிக்கையைப் பெறும் விதத்தில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையில் நெருக்கமான இணைப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். பாடசாலை முகாமைத்துவத்தில் கூடுதலான பங்களிப்பானது, திட்டமிடலை மாணவர்களின் தேவைகளுக்கு கூடுதலான ஏற்புடையதாக அமையச் செய்யும் பாடசாலை நிதிகளை முகாமைத்துவம் செய்யும் வகிபாகம், பொறுப்புகள் குறித்து பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள், பாடசாலை நிர்வாகக் குழுக்கள் என்பவற்றுக்கு அறிவுறுத்தப்படல் வேண்டும்.

---

21. பிறேய்.எம் -தனியார் வகுப்புக்களினால் பாரிய பாதிப்புக்கள். பாரிஸ்: யுனெஸ்கோ/IIEP,2003.

மூலவளம் சமனற்று விநியோகிக்கப்படுதல், முக்கியமாக ஆசிரியர்கள், கல்வியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலங்கையில் ஏனைய பல நாடுகளைப் போன்று தூர இடங்களில் உள்ள கிராமப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை அநேகமாகக் காணப்படுகையில், நகரப் பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். கிராமிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை தரம் குறைந்த கல்விப் பெறுபேறுகளுக்கு வழியமைப்பதுடன், கிராமியச் சிறுவர்களை சாதகமற்ற நிலைக்கு உட்படுத்துகிறது. உதாரணமாக, ஆசிரியர் பற்றாக்குறை முக்கியமாக அழகியல், தொழில்நுட்பக் கல்வித்துறைகளில், கிராமிய பெருந்தோட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள், பாடங்களைத் தெரிவு செய்ய முடியாத நிலையில் இருப்பதை இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. இடமாற்றம் பிரமாணங்கள் அமுல் செய்யப்படாமை மூலம் ஏற்படும் சமனற்ற ஆசிரியர் விநியோகமும் ஊழல் நடைமுறைகளை மீண்டும் ஏற்படுத்தும். கூடுதலான ஆசிரியர்கள் தமது சொந்தத் தொடர்புகளை பயன்படுத்தி அல்லது இலஞ்சம் கொடுப்பதன் மூலம் சாதகமற்ற இடங்களில் பதவிக்கமர்தப்படுவதை தவிர்க்க முயற்சி செய்வார்கள். வசதியுள்ள குடும்பங்களும், குறைந்த வளமுள்ள பாடசாலைகளில் தமது பிள்ளைகள் கல்வி கற்பதைத் தவிர்க்க சாத்தியமான சகல வழிகளையும் கையாள்வார்கள். தமது தேவைகளைப் பூர்த்தி செய்யச் சொந்தத் தொடர்புகளையும், இலஞ்சத்தையும் பயன்படுத்தவும் கூடும்.

முக்கியமாகப் பாடசாலை மாகாண மட்டங்களில், கல்வி தொடர்பான ஊழல்கள் பல காரணிகளால் ஏற்படுகின்றன. பிரமாணப் பற்றாக்குறையும், அமுலாக்கலும் இதில் முக்கியமான ஒன்றாகும். மத்திய மட்டத்தில், கல்வியில் பிராந்திய வேறுபாட்டையும், சமத்துவமின்மையையும், தீர்ப்பதற்கு திட்டமிடல் உதவவில்லை. முக்கியமாக கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளிலும், ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரீட்சைகளிலும் தீவிர போட்டா போட்டியால், பல்கலைக்கழங்களுக்கும் உள்ள தீவிரப் போட்டி கெடுபிடியான நிலைமைகளை தடை செய்துள்ளது. கிராமிய மற்றும் வசதி குறைந்த இடங்களில் உள்ள வறிய மக்களுக்கு கல்வி வாய்ப்புகளுக்கு வசதி செய்ய அரசாங்கத்தால் அமுல் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள், செல்வந்த வர்க்கத்தினருக்கு சாதகமானத் தந்திரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நுவரெலியா மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்களில் தொழில்சார் பாடங்களுக்கு, பாரிய விகிதத்தில் அங்கு வசிக்காதவர்கள் அனுமதி பெறுவது, பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட கோட்டா அமைப்பு, துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

சுற்று நிருபங்கள், பிரமாணங்கள் என்பன செயலற்று அல்லது அமுல் செய்யப்படாமை, காரணமாகவே நாம் காணும் சில ஊழல்கள் இடம்பெறுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும், தவறான முறையில் விளக்கமளிக்கப்படுகின்றன. வேறு சிலவற்றில், அதிகாரிகள் அவற்றை அமுல் செய்வதில்லை. உதாரணமாக மாகாணத்தில் ஆசிரியர் நியமனங்கள், இடமாற்றங்கள் என்பனவற்றில் மாகாண சபைகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குச் சமமாக அதிகாரத்தை பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அரசியல் காரணங்களினால், ஆளுனர்கள், முதலமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள் ஆகியோர் இந்த ஆணைக்குழுக்கள் அல்லது குழுக்கள் சம்பந்தமாக தீர்க்கமான பங்கை வகிக்கின்றனர்.

ஆசிரியர்கள், அதிபர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரை முகாமைத்துவம் செய்வதில் பல பிரச்சினைகள் இருப்பதாக இந்த ஆய்வு புலப்படுத்துகிறது. ஆசிரியர் இடமாற்றங்களில் தேவையற்ற செல்வாக்குப் பிரயோகம், ஒரு பொது விடயமாகவுள்ளது. இடமாற்றத்திற்கு அரசியல்வாதிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோருடனான தொடர்புகள், முக்கிய கட்டளை விதிகளாக உள்ளன. கொள்கை அமுலாக்கத்திற்கு தற்போதுள்ள நிறுவன ரீதியான கட்டுக்கோப்பும் (தேசிய, மாகாண இடமாற்ற சபைகள்) ஆசிரியர் இடமாற்றக் கொள்கை என்பன உள்ள போதிலும், இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கவனத்தை ஈர்க்கும் மற்றுமொரு துறை தொண்டர் ஆசிரியர்கள், பதில் அதிபர்கள் நியமனமாகும். பயிற்றப்படாத ஆசிரியர்கள் தொடர்ந்த பதவிக்கு அமர்த்தப்படுகின்றனர். (2006 இல் 7,463 பேர் சேர்க்கப்பட்டனர்)[22] இந்த நடைமுறைக்கு சட்டவாக்க ஏற்பாடு எதுவும் இல்லாதபோதும், இது நடைபெறுகிறது. இது கற்பித்தல் தரத்தை பாரதூரமாகப் பாதிக்கின்றது. கல்வி அமைச்சின் 2000/34 சுற்று நிருபத்தின் பிரகாரம் பதில் அதிபர் நியமனம் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், ஆசிரியர் சேவைக்குப் புறம்பான இத்தகைய நியமனங்கள் அநேகம் இடம்பெறுகின்றன. தராதரமுள்ள விண்ணப்பதாரிகளுக்கு அவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்படாதிருக்கையில், அரசாங்க சேவைக்கு தராதரமற்ற மக்கள் வருவதுடன், கிரமமான முறையில் நியமிக்கப்பட்ட அதிபர்களின் தார்மீகமும், ஊக்குவிப்பும் கூட பாதிக்கப்படுகின்றது.

கல்வி முகாமைத்துவ தரத்தில் பாரதூரமான பாதிப்புடன் கல்விச் சேவையில் அதி கூடுதலான அரசியல் நியமனங்கள் செய்யப்படுவதாகத் தெரிகிறது. பிரமாணங்களுக்கு ஏற்றதாக இருக்கும் விதத்தில் ஒழுக்கீனமான நியமனங்களை எவ்வாறு கொண்டு வருவது என்பது குறித்து விதந்துரைகளை வழங்கும் பணியுள்ள ஆணைக்குழுக்களை அமைப்பதன் மூலம், இந்தப் பிரச்சினையைக்

22. பயிற்றப்படாத ஆசிரியர்கள் -5259, பயிலுனர் ஆசிரியர்கள் - 856, ஏனைய ஆசிரியர்கள் - 1348, கல்வி அமைச்சு, பாடசாலைகள் கணக்கெடுப்பு 2006

கல்வி அமைச்சு தீர்க்க முற்படுகிறது.[23] எனினும் எதிர்காலத்தில் சட்டபூர்வத் தேவைகளுக்கு ஏற்றதாக நியமனங்கள் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் கூடுதலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் தேவையுள்ளது. இலங்கை கல்வி நிர்வாக சேவை, அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, ஆசிரியப் போதனாசிரியர் சேவை என்பனவற்றுக்கான பதவி நியமனங்கள், நிர்வாகக் கோவை 1999 இலங்கை அதிபர் சேவைக் கோவை, 1995 ஆசிரியர் சேவைக் கோவை என்பனவற்றுக்கு அமைவாகச் செய்யப்படல் வேண்டும். அரசியல் நியமனங்களைத் தவிர்ப்பதற்கு, தேசிய அரசாங்க சேவை ஆணைக்குழு, அதன் அந்தஸ்த்துக்கு ஏற்ப செயற்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்கள், பூரண சுதந்திரத்துடன் செயற்படல் வேண்டும். அத்துடன் போதுமான வளங்களும் ஒதுக்கப்படல் வேண்டும்.

நியமனங்கள் மாத்திரமல்லாது, கல்வியில் சகல தீர்மானமெடுத்தலும், அரசியல் மயமற்றதாக்கப்படல் வேண்டும். கல்வித் தீர்மானங்கள், இலக்கு உள்ளதாகவும், சமநிலை பேணுவதாகவும், பாரபட்சம், விருப்பு வெறுப்பு என்பன அற்றதாகவும், இருத்தல் வேண்டும்.

மொத்தமாகப் பார்க்குமிடத்து, கற்பித்தல் தரம் குறித்துப் பெற்றோர் திருப்தியடைந்துள்ளதாகத் தெரிகின்ற போதிலும், ஆசிரியர்களுடனான, நேர்காணல்கள், கல்வி முகாமைத்துவத்தில் பாரிய அளவு விரக்தியையே புலப்படுத்தியது. கல்வியில்ஆசிரியர்கள் மிக முக்கியமான வளம் என்பதால், இது பாரதூரமான விடயமாகும். அரசாங்கம் 2006 – 2010 காலப்பகுதியில் அதன் கல்வித்துறை அபிவிருத்தித் திட்டத்திலும், கட்டுக் கோப்பிலும், ஆசிரியர் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு ஒரு கடப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர் திறமை மேம்பாடும், அர்ப்பணிப்பும், ஆசிரியர் ஊக்குவிப்பு, திறன்கள், செயற்பாடுகள் என்பவற்றை ஊக்குவிப்பதும் இந்தக் கட்டுக்கோப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள இலட்சியங்களாகும். இந்த முயற்சிகள் ஒழுங்கீனமான நியமனங்கள், பதவி உயர்வுகள், ஏன் நீதியற்ற எந்தவித முயற்சியாலும், தாழ்வுபடுத்தப்படல் ஆகாது. ஆசிரியர்கள், சீராக இயங்குவதற்கு அவர்கள் நியாயமாகவும், சமத்துவமாகவும் நடத்தப்படுதல் வேண்டும். அவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டு, தொழில் வாய்ப்புக்கள் கொடுக்கப்படல் வேண்டும். அவர்களுக்கு போதிய சம்பளமும், படிகளும் நேரகாலத்துடன் வழங்கப்படல் வேண்டும். கிரமமான நடைமுறைகளுக்கு அப்பால் செய்யப்படும் நியமனங்கள், பாடசாலை அனுமதியில் தலையீடுகள் என்பன மூலம் சட்டம் அமுல் செய்யப்படாமை, அடிக்கடி நிகழ்கின்றது. சில சமயங்களில் விழிப்புணர்வுப்

23. கல்வி அமைச்சின் ஆலோசகரான பி.டபிள்யூ குணசேகரவுடனான தொலைபேசி நேர்காணல் 17 பெப்ரவரி 2009

பற்றாக்குறை காரணமாக பிரமாணங்கள் அமுல் செய்யப்படாதிருத்தல் கூடும். பிரமாணங்கள் சரிவர அமுல் செய்யப்படாமைக்கு, தமிழில் சுற்று நிருபங்கள் கிடைக்கப் பெறாமை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. சகல சுற்று நிருபங்களும் மொழி பெயர்க்கப்பட்டு, வலய கல்விமட்டங்களிலும், கல்வி அமைச்சின் இணையத் தளத்திலும், இடம்பெற வைப்பதன் மூலம் இந்தக் குறைபாடு திருத்தப்படலாம்.

இந்த ஆய்வு ஊழல் சம்பந்தமாக குறைந்த அளவிலேயே அறிவிக்கப்பட்டுள்ளமையைக் காண்பிக்கின்றது. எவ்வாறாயினும் ஊழலை தீர்க்கமான முறையில் தடுப்பதற்கு துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள், பழி வாங்கப்படுவார்கள் என்ற அச்சமின்றி மோசடி நடவடிக்கைகளை அறிவிக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்கு, பாரபட்சமற்ற விசாரணை உறுதிப்படுத்தப்படுவது அவசியமாகும். முக்கியமாக மாகாண, வலய மட்டங்களின் முறைப்பாட்டு நெறிமுறையை வலுப்படுத்துதல் கூடுதலான வெளிப்படைத் தன்மைக்கான முக்கிய படிக்கல் ஆகும்.

கிரமமான நடைமுறைகளுக்கு அப்பால், செய்யப்படும் நியமனங்கள், பாடசாலை அனுமதிகளில் தலையீடு என்பன சட்டங்கள் அமுலாக்கப்படாமை அடிக்கடி நிகழ்வதற்கான சான்றுகளாக உள்ளன. சில சமயங்களில், விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் பிரமாணங்கள் அமுல் செய்யப்படாமல் போகலாம். அறிவித்தல் வழிகள் தெளிவாக இல்லாவிட்டால் (ஆசிரிய ஆலோசகர்கள் வலயப் பணிப்பாளரின் மேற்பார்வையிலா? இல்லையா? என்பது ஒரு உதாரணம்) முகாமைத்துவம் சீராக இருக்க மாட்டாது. ஊத்தியோகத்தர்கள் தமது அதிகாரத்தை பிரயோகிக்க விரும்பாதிருப்பதும், பிரமாணம் அமுல் செய்யப்படாமைக்கு மற்றுமொரு காரணமாகும்.

சிறந்த பரிபாலானம் உத்தியோகத்தர்கள் தமது பணிகளை நிறைவேற்றவும், அதிகாரிகள் தமது கடமைகளைப் பிரயோகிக்கவும் வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. கட்டுப்பாடு, ஒழுங்காற்று நடவடிக்கை என்பன இல்லாதவிடத்து அதிகார துஷ்பிரயோகம் அளவுக்கு மீறி இடம்பெறும். நடைமுறையில் உள்ள சட்டங்களும், பிரமாணங்களும், செயல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது கட்டாய தேவையாகும். நடைமுறையில் உள்ள சட்டங்களை அமுல் செய்யவும், சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் தண்டணை வழங்கவும் மேலும் கூடுதலான முயற்சி மேற்கொள்ளப்படல் வேண்டும்.

பிள்ளைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகையில், புத்தகங்கள், உபகரணங்களுக்கான செலவு, கட்டணம், உள்ளிட்ட கொடுப்பனவுகள் என்பவற்றில் பாடசாலைக் கல்வியில் நிலவும் சமத்துவமின்மை வெளிப்படுத்தப்படுகிறது. இவை இல்லங்களின் வகுப்பு நிலைமையோடு தொடர்புடையவை. பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படுதல் போன்ற முக்கிய விவகாரங்கள், தாழ்ந்த வகுப்புப் பெற்றோரைப் பார்க்கிலும் செல்வந்த இல்லங்களுக்கு (மத்திய தர வகுப்பினர்) பெரும் அக்கறையை ஏற்படுத்துகின்றன. மத்தியதர வகுப்புப் பெற்றோர் கூடுதலாக ஈடுபடுவதை, பாடசாலை தொடர்பான பெற்றோர் பங்குபற்றும் நிகழ்வுகள் காண்பிக்கப்படுகின்றன. பாடசாலைக்கு வெளியே வார இறுதியில் தனியார் வகுப்பு மீதான செலவு போன்ற விவகாரங்களிலும், சமத்துவமின்மை தெரிகிறது.

கல்வி ரீதியான சமத்துவமின்மையை பிரதிபலிக்கும், குடும்ப வகுப்பு நிலைமை உயர்ந்த பதவிகளை வகிக்கும், அல்லது வர்த்தகம் செய்யும் தந்தைமார்களை உடைய குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் சிறந்த பாடசாலைகளில் அனுமதி பெறுகிறார்கள்.[24] இத்துடன் இல்லங்களின் கல்வி, பொருளாதாரப் பின்னணியுடன் ஊழல் பற்றிய புலனுணர்வும் அறிவும் வேறுபடுகிறது என்று காண்பிக்கப்பட்டுள்ளது. வறிய இல்லங்கள், ஊழல் பற்றி அறிந்திருப்பதில்லை. அது பற்றி அலட்டிக்கொள்வதுமில்லை. மத்தியதர வகுப்பினரும், இது பற்றித் தெரிந்திருந்தும் கல்வியில் ஊழல் சம்பந்தமான விவகாரங்களை அறிவதில் ஆர்வம் காண்பிப்பதில்லை. ஏனெனில் இத்தகைய பிரச்சினைகள் அவர்களுக்கு ஏற்படுவதில்லை அல்லது அவற்றைச் சமாளிப்பதற்கு நன்கு நிர்ணயிக்கப்பட்ட வழிவகைகளை கொண்டவர்கள் அவற்றைத் தமக்குச் சாதகமாக்க கூடியவர்களாக உள்ளனர். தமது பிள்ளைகளுக்கு சீரான கல்விக்காக அநேகமாகப் போராடும் தாழ்ந்த, மத்தியதர வகுப்பைச் சேர்ந்த இல்லங்களே இது பற்றிக் கூடுதலாக அக்கறை செலுத்துகின்றன. இவர்கள் அரசாங்க, தனியார்துறை ஊழியர்கள், வியாபாரிகளும் வர்த்தகர்களுமே. இவர்கள் அனேகமாக நகரப் பகுதிகளில் வசிப்பவர்களாக தமது பிள்ளைகளை கற்பிப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக, அவர்களை பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்புபவர்களாக உள்ளனர். இந்த இல்லங்கள் தமது உயர்ந்த அபிலாசைகள் காரணமாக, அரசாங்க பாடசாலை அமைப்புடன் தொடர்ந்தும் போராடி வருகின்றனர். இவர்கள் தமது இல்ல வரவு செலவுத் திட்டத்தில் பெருந்தொகையை பிள்ளைகளின் கல்விக்கும், மேலதிக கற்பித்தல் தனியார் வகுப்புக்களுக்கும் முதலீடு செய்கின்றனர்.

24. குடும்ப பின்னணிக்கும், கல்வித் தீர்மானத்துக்கும் இடையிலான மிகத் தெளிவான ஆக்கபூர்வத் தொடர்பை எமது பெறுபேறுகள் காண்பிக்கின்றன. செல்வந்தக் குடும்பங்களின் பிள்ளைகள் இலவசக் கல்வி மூலம் கூடுதலான நன்மை பெறுவதாகத் தெரிகின்றது. முக்கியமாக, “கல்வித் தீர்மானத்தில் தாயின் கல்வி பெற்றோரின் வருமானம் என்பன வலுவான பாதிப்பைக் கொண்டுள்ளன.”(ரணசிங்க மற்றும் ஹார்டொக் 2002)

அரசாங்க பாடசாலை நாடகத்தில் பிரதம நடிகர்களாக இருக்கும் தாழ்ந்த மத்திய தர வகுப்பினரே, ஜனத்தொகையில் பெரும் எண்ணிக்கையில் இருப்பதால் இந்தக் குடும்பங்களில் பாரிய சதவீதத்தினர் ஆய்வு மாதிரிக்காக உள்ளடக்கப்பட்டனர் இந்த ஆய்வு உயர்ந்த வருமானம் உள்ள அல்லது உயர் மத்திய வகுப்பினரை உள்ளடக்கவில்லை.

கிராமிய வறிய மக்களின் கல்விக்கு வசதி செய்யவென அரசாங்கம் அமுல் செய்துள்ள ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் திட்டம், இப்பொழுது மத்தியதர தாழ்ந்த மத்திய தர வகுப்பினரால் போட்டி காரணமாகத் தமது நன்மைக்குப் பயன்படுகின்றது. அரசாங்கப் பாடசாலைக் கல்வி அமைப்பில், சமூக ரீதியான வகுப்பு, பிள்ளையின் திறமைக்கான முக்கியத்துவத்தை விட்டுக் கொடுப்பதால் பாடசாலைக் கல்வியில் சமசந்தர்ப்பம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருக்கிறது.

முக்கியமாக சமூக சமத்துவமின்மை என்ற விளைவுடன் பாடசாலைக் கல்வியில், ஊழல் பெருமளவில் காணப்படுகையில், நாட்டின் மொத்த அபிவிருத்தி முறையில் பெரும் தாக்கத்துடன் கல்வி அமைப்பு, சிறந்த பரிபாலனம் என்பன தொடர்பாக மக்கள் வைத்திருக்கும் சமூக நம்பிக்கை அழிந்துவிடும் அபாயமுள்ளது. இளைஞர்களும், வயது வந்தோரும், ஊழலானது ஒரு வாழ்க்கை முறை அல்லது சர்வ சாதாரணமானதொன்று என்று எண்ணத் தொடங்குவர். இது இன்றைய, நாளைய குடிசனத் தொகையினருக்கு தார்மீகம், கோட்பாடு, நடத்தை விழுமியங்கள் என்பவற்றை வழங்கும் கல்வியின் அடிப்படைக்கும் அக்கறையுடையோரின் திருப்தியை உறுதிப்படுத்தும் செயற்பாட்டில் திறமை, சமத்துவம், உயர்தரம் என்பவற்றுக்கான உத்தரவாதத்தை வழங்கும் கல்வி அமைச்சின் பணிக்கும், பாரிய அச்சுறுத்தலாகவுள்ளது.[25]

25. http://www.moe.gov.lk/about_us.php 04-10-2008 ல் பார்வையிடப்பட்டது

## உசாத்துணை நூல்கள்


1. Amarasiri.M.W De Silva. *Funding for Education Advocacy: Report on the CEF program in Sri Lanka (Evaluation Report submitted to CEF-UK and Save the Children Colombo)*, 2006.

2. Anwar Shah and Schacter Mark."Combating Corruption: Look before You Leap." *Finance and Development*. International Monetary Fund 41(4) (2004): 40–43.

3. Athula Ranasinghe and Hartog Joop. "Free-education in Sri Lanka. Does it eliminate the family effect? " *Economics of Education Review,* Volume 21, Issue 6, (December 2002): 623-633.

4. Bray M. *Adverse effects of private tutoring*. Paris: UNESCO/IIEP, 2003.

5. Daniel S. Treisman. *The Causes of Corruption: A Cross National Study*. Los Angeles: Department of Political Science, University of California, 1999b.

6. Ewa Tomaszewska and Shah Anwar. *Phantom Hospitals, Ghost Schools, and Roads to Nowhere: The Impact of Corruption on Public Service Delivery Performance in Developing Countries.* Washington,DC: Working Paper, Operations Evaluation Department, World Bank, 2000.

7. George T. Abed and Davoodi. R Hamid . *Corruption, Structural Reforms, and Economic Performance in the Transition Economies*. Washington: IMF, 2000.

8. Griffin.M and Meier.B. *Stealing the Future. Corruption in the Education Sector*. Berlin: Transparency International, 2005.

9. Hallak Jacques and Poisson Muriel. *Corrupt schools, corrupt universities: what can be done?* Paris: IIEP Series on Ethics and corruption in education, 2007.

10. Harsha Aturupane. *Has the Holy Grail of education been sighted?* Colombo: The Sunday Times, July 2008.

11. Lambsdorff, Graf Johann, Taube Markus and Schramm Matthias, eds. *The New Institutional Economics of Corruption*. London: Routledge, 2005.

12. Lambsdorff, Graf Johann. *Corruption in Empirical Research*: A Review. Durban, South Africa: Paper presented at the Ninth International Anti-corruption Conference, 1999a.

13. Lambsdorff, Graf Johann. *The Impact of Corruption on Capital Accumulation*. Germany: Department of Economics, Gottingen University, 1999b.

14. Ministry of Education. *A future generation Endowed with Wisdom and virtues… - 2008 Progress of the Ministry of Education and Proposed Programmes for 2009*. Colombo: Ministry of Education, 2009.

15. Ministry of Education. *Education for Economic Development and Prosperity*. Colombo: Ministry of Education, 2005.

16. Ministry of Education. *School Census 2007*. Colombo: Ministry of Education, 2007.

17. Sanjeev Gupta, Davoodi Hamid, and Tiongson Erwin. *Corruption and the Provision of Health Care and Education Services*. Washington, DC: IMF Working Paper 00/116, 2000.

18. Shamsul Haque. "Recent Transition in Governance in South Asia: Contexts, Dimensions, and Implications In." *International Journal of Public Administration*, Volume 24, issue 12 (November 2001): 1405 – 1436.

19. Transparency International. *Corruption in the Education Sector. Berlin: Transparency International* , Working Paper No. 04/2007 , 2007.

20. UNDP Human Development Report 2007/2008.

21. Vincent Greaney and Kellagham Thomas. "*Assessing National Achievement Levels in Education*." The International Bank for Reconstruction and Development and the World Bank Vol 1, (2008).

22. Vito Tanzi and, Hamid R Davoodi. *Corruption, Public Investment, and Growth*. IMF Working Paper No. 97/139, October 1997.

23. Wijetunge.L.S Perera, de Silva. W. A. and Navaratne. A. A. *Achievement after Four Years of Schooling. National Assessment of Achievement of Grade Four Pupils in Sri Lanka:* National Report. Colombo: National Education Research and Evaluation Centre, University of Colombo, 2004.


24. World Bank. *Mainstreaming Anticorruption Activities in World Bank Assistance*: A Review of Progress since 1997.Washington, DC: World Bank, 2004.

25. World Bank. *Performance Audit Report Sri Lanka General Education Project (Credit 2072-Ce)*. Operations Evaluation Department. Report no 18010, June 11, 1998.

26. World Bank. *Treasures of the Education System in Sri Lanka: Restoring Performance, expanding opportunities and enhancing prospects.* Washington, DC: World Bank, 2005.

“ஜனநாயகம் உறுதியாகச் செயற்படுவதற்கு தேவைப்படுவது மெய்யறிவல்ல பொருத்தமான கல்வியே”

– மகாத்மா காந்தி







= சிங்கள அகராதியின் முதலெழுத்து

= இலஞ்சம்


ட்ரான்ஸ்பேரன்சி
இன்டர்நஷனல்
ஸ்ரீ லங்கா

நேர்மைத்திறன்மிக்க தேசத்தைக்
கட்டியெழுப்புவோம்

9 789551 281267